80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம :

அமிர்தகுணபோதினி

பாடசாலை ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் மிகவும் ஏற்றதாய், அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
புதுச் சுவை.] திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.) [மிகு அநுபவம்.

கமலம்-9.	சென்னை : பவஹு பங்குனிமீ 1உ	இதழ்-108.
Vol. 9.	1935-ம்ஹு மார்ச்மீ 14உ	No. 108.



"அன்னை யடியை அனுதினமும் நினை" ஜகதம்பிகையாகிய பரமேசுவரியின் பாதங்களைப் பிரதி தினமும் ஸ்மரிப்பவர் ஸகல ஐசுவரியங்களையும் அடைவார். குழந்தை பிறந்தது முதல் தன் தாயிடமே பிரீதிவைத்து அவளால் ஸம்ரக்ஷிக்கப்பட்டு வளருகிறது. மனிதர்களில் ஸகல பந்துக்களிலும் மாதாவை சிரேஷ்டமாக மதிப்பதுபோல், பசு முதலிய மிருகங்களிலும் கன்றுகளும் குட்டிகளும் தாய்களாலே ஸம்ரக்ஷிக்கப்படுகின்றன. பக்ஷிகளில் பெண் பக்ஷிகள் தாங்கள் முட்டையிட்ட குஞ்சுகளைச் சிறகால் மூடி வளர்க்கின்றன. ஆகவே, பிரபஞ்சத்தில் ஆகாரம் உதவி இரக்ஷிக்கும் காரியம் தாய்க் குரியதாயிருக்கிறது. மற்ற பந்துக்களுக்கு அத்தனை விசுவாஸமுண்டாகாது. ஆதலின், ஸகல மூர்த்திகளிலும் தேவி மூர்த்தியை உபாஸிப்பது தான் மேன்மை. எவன் ஜகன் மாதாவை ஸ்மரிக்கின்றானோ அவன் ஸகல விபத்துகளினின்றும் விடுபட்டு நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் அனுபவிக்கிறான். ராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்னும் மகாத்மா காளியை உபாஸனை செய்து சிறந்த யோகியானார். அவருடைய அருளால் அநேகர் ஸம்ஸார துக்கத்தினின்று விமுக்தர்களாகி ஸத் விஷயங்களில் காலம் கழிக்கலாயினர். ஈசுவரியின் கிருபை உண்டானால் எந்தக் காரியமும் கைகூடும். பிரம்மாவுக்கு சிருஷ்டிக்கும் ஸாமர்த்தியத்தை சாரதையாயிருந்து அனுக்கிரகித்து, மஹா விஷ்ணுவுக்கு இரக்ஷிக்கும் தொழிலை

லக்ஷ்மியாகவிருந்து கற்பித்து, சிவபிரானுக்கு ஸம்ஹாரம் செய்யும் இருத்யத்தை சக்தியாகவிருந்து போதித்து, ஸகலருக்கும் மங்களத்தை யுண்டாக்கிக் கொண்டிருக்கும் ஸர்வ மங்களாவை நம் ஹிருதயத்திலிருத்தி, ஸதா ஸ்தோத்திரம் செய்யக் கடவோம்.

ஃ

"வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்றொரு பழமொழியுண்டு. வல்லான் செய்யும் காரியம் வன்மையோடும் விளங்கும். சிவாபராதம் செய்தவன் காலை வெட்டுகிறதென்று ஒரு நாயனார் தீர்மானித்துக்கொண்டார். இவருக்கு சிவபக்தி அத்தனை வன்மையோடு மனதிற் படிந்துவிட்டது. பிரகலாதன் ஹரியையே நம்பி தந்தையின் சொல்லை நிராகரித்தான். பல கஷ்டங்களையும் அனுபவித்தான். முடிவில் நரஸிம்ஹ மூர்த்தியின் கிருபையால் முதற்றர பக்தனானன். இவனுக்கிருந்த ஹரிபக்தியின் வன்மையே அத்தனை நற்பதவியைக் கொடுத்தது இப்படியே, எவருக்கு நல்ல விஷயத்தில் வன்மை யுண்டாகிறதோ அவருக்கு முடிவில் நன்மையே கிடைக்கும். உறுதியும் பிடிவாதமும் ஸன்மார்க்கத்தி லேற்படுவது பெருமை. துன்மார்க்கத்தில் அமைவது சிறுமை. சில புஷ்கரணிகளின் ஜலம் துர்நாற்றம் வீசியபோதிலும், முன்னிந்த பெரியோர்கள் அந்தப் புஷ்கரணிகள் திவ்ய தீர்த்தங்களென்று நிச்சயமாய்க் கூறியிருப்பதால் இன்னும் அவற்றில் ஸ்நானம் செய்கிறோம். இதற்குக் காரணம் அந்தப் புஷ்கரணிகளில் ஏதோ ஒரு மகிமை யிருக்கிறதென்று முன்னோர்கள் கொண்ட உறுதியேயன்றி வேறில்லை. ஆகவின், ஆராய்ந்தறியாமல் வன்மை மிக்கவர்களான பூர்வீகர்கள் அனுஸரித்த ஆசாரங்களை இகழாது அநுஷ்டிப்பதே முறையாம்.

ஃ

"எதிலிருந்து மதத்தின் உற்பத்தி?" நமது தேகம் நாசமடையாமலிருக்க வேண்டி நாம் பிரயத்தனம் செய்தும் பலிக்கவில்லையே யென்று துக்கமடைகிறோம். உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் எப்போதாகிலும் நசித்துப் போகின்றன வென்பதை யறிந்து பயமடைகிறோம். ஜீவன் பிரிந்து போவதால் தேகம் நாசமாகிறதென்பதை யுணர்ந்த நாம், அந்த ஜீவன் என்பதென்ன?—அது ஏன் பிரியவேண்டும்?—என்று பற்பல கேள்விகள் கேட்கத் தொடங்குகிறோம். இது முதல்தான் மதம் என்பது உண்டாகிறது. ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் தங்கள் மதமே உயர்வென்றும், ஏனைய மதங்கள் நிஷ்பிரயோஜனமென்றும் நினைக்கின்றனர்.

ஃ

"மதங்களின் பொதுக் கருத்து என்ன?" எல்லா மதஸ்தர்களுக்கும் இருக்கும் கருத்து ஒன்றுதான். அதாவது, நித்ய சுகத்தை யடையவேண்டுமென்பதே. எதனல் நித்யமான சுகம் உண்டாகுமென்பது கேள்வி. இந்த பிரச்நத்தை ஒவ்வொரு மதாசாரியரும் தாமே ஊகித்து இதற்கு என்ன விடை

உலகத்திலே ஜனனமெடுத்துப் பிறந்த எவரையும் பெருமை என்கிற ஒரு பிசாசு கையாட்சி செய்துகொண்டிருக்கிறது. இது உலக ஆதாயத்தை ஒருவிதத்தில் அல்லது பலவிதத்தில் அநுபவிக்கிறவர்களிடமாத்திர மன்றி ஏதுமற்ற பிச்சாண்டிகளிடத்திலும்கூட இருக்கிறது.

கொடுக்கலாமென்று காட்டிலும், மலைக்குகையிலும், மரத்தடியிலும், ஏகாந்தமாய் ஸஞ்சரித்தும் உட்கார்ந்தும் வஸித்தும் தீர்க்காலோசனை செய் தும் தமக்குத் தோன்றிய மார்க்கமே சிலாக்கியமென்று நிச்சயப்படுத்தினர். இதுதான் ஜகத்தில் அநேக மதங்கள் உண்டானதற்குக் காரணம். மதாசாரி யர்களெல்லாம் மஹா மேதாவிகள் அவர்களுடைய தீர்க்காலோசனையும் ஸாமர்த்தியமும் ஊக்கமும் சாஸ்திர விசாரனையும் அபாரமானது. ஆகவே, எந்த மதத்தையும் நிந்திப்பது பிசகென்ப

ஃ

"உண்மையை அறியும் ஆவல்" இவ்விதம் ஆவல் கொள்வது மட்டும் சிலாக்கியமே ஆனல், அதற்காக எந்த மதம் சிலாக்கியமென்று ஒவ்வொரு மதத்திலுள்ள கிரந்தத்தையும் படித்துப் பிறகு உண்மை எது வென்பதைக் கண்டறியும்படி முயற்சி செய்வது ஸாத்தியமல்ல. ஏனெனில், நமது ஆயுள் காலமெல்லாம் பலமத கிரந்தங்களைப் படிப்பதிலேயே செலவழிந்து போம். அதற்காகவே, நமக்கு முன்னிருந்த பரமாசாரியர்கள் அனுஷ்டித்த வழியை நாம் அநுஸரிக்கவேண்டிய தவசியமாகிறது. அவ்வழியை நாம் அனு ஸரித்தால் நமது புத்திக்குத் தெளிவுண்டாகும். இதற்காகவே சொந்த மத விஷயமான கிரந்தங்களைச் சீக்கிரமாகவே படிக்கத் தொடங்கவேண்டும். சிலர் அதைப் பின்னல் படிக்கலாமென்றெண்ணிச் சும்மா இருப்பார்கள். அது பிசகு. அவசியமாகக் கற்றுக் கொள்ளவேண்டிய விஷயங்களை உடனே கற்கத் தொடங்குவதுதான் சிலாக்கியம். ஆகலின், நாம் வேதாந்த விஷயங் களைப் பால்யத்திலேயே கற்று, மனதுக்குத் தெளிவை யுண்டாக்கி, சிறந்த ஞானத்தை யடைந்து, பகவத் பக்தி செய்து, ஜெனன மரண துக்கத்தைப் போக்கடித்துக் கொள்ளவேண்டும்.

ஃ

"நான் ஏன் பிறந்தேன்?" நான் செய்பவேண்டிய கடமை என்ன? மரண மடைந்தபின் நான் என்னவாகிறேன்?—என்ற வினுக்களைக் கேட்டு, அவை கட்கு ஏற்ற விடைகளைப் பெரியோர்கள் மூலமாயும், சாஸ்திர ஆராய்ச்சி யாலும், தீர்க்காலோசனையாலும் அறிந்துகொள்ள வேண்டும். ஒரே மதத்தின ராயினும் ஓரிடத்தில் அனுஷ்டிக்கப்படும் ஆசாரத்தை மற்றொரு இடத்தில் அனுஷ்டிப்பது சாத்தியமல்ல. வங்க தேசியர்களான பிராமணர்கள் மாம்ஸம் உண்ணுகிறார்களென்ற காரணத்தால், சென்னை மாகாண பிராமணர்கள் இறைச்சியைப் புசிக்கலாமா? மரத்தில் பக்ஷிகள் கூடு கட்டுகின்றன. பாம்புகள் நிலத்தில் புற்றுக்குள் வாழுகின்றன. மனிதர்கள் சிலர் மலைமீதும் சிலர் பூமியில் வீடு கட்டிக்கொண்டும் வாழுகின்றனர். ஓரிடத்தில் பழைய துணி ஞர்கள். மற்றோரிடத்தில் பழைய துணடால் ஜ்வரம் வரும். ஆதலின், இடத் துக்கிடம் ஆசாரம் வேறுபடுகிறது. அந்தந்த இடங்களின் ஆசாரப்படி

சிலர் பிறருக்கு உதவி செய்கிறார்கள். அந்த உதவியினல் மற்றவன் லாபம் அடைந்து, அந்த லாபத்தில் பாதியைத் தனக்கு உதவி செய்தவனுக் கும் தரவருகிறான். ஆனல், பொறாமையானது அவன் தனது உதவியால் அத்தனை லாபமடைந்து விட்டானேயென்று ஆத்திரப்பட்டு அவனை விரோ திக்கும்படி செய்துவிடுகிறது.

டைப்பதே கிரமம். மனிதர்கள் வாஸம் செய்ய வீடும், உடுக்கத் துணியும், உண்ண உணவும் அவசியம்போல, துன்பநிவர்த்தியடைய மதம் அவசியமாகிறது. நான் ஒரு மதத்தையும் அனுஸரிக்கவில்லை யென்று கூறுவது பொய். ஏதேனும் ஒரு மதத்தை அனுஸரியாமலிருக்க முடியாது. முக்தியையடைவதற்குத் தக்க வழி மதம் தான்.

ஃ

"மரணத்திற்குப் பின் மனிதர் நிலை யாது?" ஜீவன் பகவானுடைய ஆக்ஞையின்படி சரீரத்தைவிட்டு விலகுகிறது. பிறகு எமன் அந்த ஜீவனுக்கு யாதனா சரீரத்தைக் கொடுத்துத் தன்னுடைய உலகத்துக்கு அழைத்துப்போகிறான். அங்கே அந்த ஜீவன் செய்த புண்ய பாபங்களுக்குத் தக்கபடி சொர்க்க நரகங்களை யனுபவிக்கும்படி செய்யப்படுகிறது. அதன்பின் வெகு காலத்திற்கப்பால் பூமியில் தள்ளப்பட்டு வேறொரு கர்ப்பத்தில் தங்குகிறான். அக்காலத்தில் அந்த ஜீவனானது பலவித அவஸ்தைகளடைந்து, இனி பாபம் செய்வதில்லை, இனி கர்ப்ப வேதனை வேண்டாம், இத்துடன் ஜனனமாகிய பிறவிப்பிணி ஒழியவேண்டும் என்று பகவானைக் கைகூப்பிப் பிரார்த்திக்கின்றது. இவ்வாறாகப் பத்து மாதம் கர்ப்பத்திலிருந்து பின்னர் வெளிப்படும் சிசுவுக்கு பூஸ்பரிசமாகும்வரை பூர்வ ஞானமிருந்து பின்னர் மாயை மறைப்பதால் கா கூ வென்றழுகிறது. குழந்தைகள் கர்ப்பத்தினின்று வெளியாகித் தரையில் விழுந்தவுடனே கத்துகிறதற்கு இதுவே காரணமென்கிறார்கள். பூர்வ ஞானம் மறந்துபோனாலும், முன் ஜன்மத்தில் தினந்தோறும் அனுஷ்டித்து வந்த உண்ணுந்தொழில் குழந்தைகளின் ஞாபகத்திலிருக்கிறது அது மாத்திரம் மறந்துபோகிறதில்லை. சிலநாள் கழித்துச் செவியானது தன் தொழிலை நடத்தவும், கண் முதலிய பற்பல உறுப்புகள் தத்தம் வேலைகளைச் செய்யவும் தொடங்குகின்றன என்பர். இது பாபமென்றும் புண்யமென்றும் பகுத்தறிந்து நடந்துகொண்டவர்களுக்குக் கிடைக்கும் நிலைமையாகும். எந்தப் புண்யத்தையும் விரும்பாமல், பாபம் கருதாமல் தன்னையே முற்றிலும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து, அவரிடமே அன்பைச் செலுத்தி, அந்த உறுதியான அன்பில் மயங்கி, அவரையே சகலமுமாகக்கொண்டு தியானித்திருப்போர், நதியானது ஸமுத்திரத்தில் கலந்து ஒன்றாவதுபோல் பகவானோடு கலந்து அவரது பாத நிழலைச் சேருகின்றனர். இவர்கட்குப் பிறவிப்பிணி யில்லை. முக்தி நிலை என்பதும் இதுவே.

ஃ

"குரு, இறை, கோன், பிதா, ஆண்டானுமவன்" கடவுளே நமக்குக் குரு, நாம் அவருக்குச் சீடர்; அக்கடவுளே நமக்கு அரசன், நாமவருக்குக் குடிகள்;

பாடசாலை உபாத்தியாயர்கள் தங்களிடம் கற்கும் சிறுவர்களின் காலம் மிக விலையேறப்பெற்ற தென்பதையும், அந்த அருமையான காலம் வீண் போகலாகாதென்றும் தங்களின் மனதிற்கொண்டு சிரத்தையுடன் கல்வி கற்பிக்கவேண்டும். ஒரு சிறுவனை பாடசாலையில் விட்டு ஆறு மாதங்களாகியும் அவனுக்கு அ, ஆ, இ, உ, ஊ எழுத்துகளுக்குமேல் தெரியவில்லையானால் உபாத்தியாயரின் போதிப்பு எத்துணை அதிர்ப்திகரம்! பையன்களை வெறுடனே உட்காரவைத்துக்கொண்டு கிடப்பதற்கா பள்ளிக்கூடம் அனுப்புவது?

அவரே ஒப்பற்ற தந்தை, நாமவருக்குப் பிள்ளைகள்; அவரே எசமான், நாம் அவருக்கு ஊழியர்; அவ்வுருவில்லாத கடவுளே யாவையும் உடையவர், நாமே அவருக்குடைமை; அவரே யாவையுங் கொடுக்குந் தாதா, நாம் அவரிடம் யாசிப்போர்; இவைகளை யெல்லாம் நெஞ்சமே! நீ வரையறுத்து ஆராய்ந்து நிதானித்துத் தெளியக்கடவாய்.

ஃ

"கற்பினர் கணவர்தம்மைக் காண்டோறுங் களித்தல் போலும்" என்றபடி, கற்புடைய ஸ்திரீகள் தங்கள் நாயகனைப் பார்க்கும்போதெல்லாம் சந்தோஷப்படுவது போலவும், அழகு பொருந்திய சிறு பிள்ளைகள் தங்கள் தாயினுடைய கையிலிருக்கும்பொழுது அகமகிழ்வது போலவும், விசேட சந்தோஷத்துடன் கடவுளுடைய பாதாரவிந்தங்களை வணங்கும் பக்குவ மனத்தினராகவேண்டும்.

ஃ

"சுகமேலா மீயுந் தேவு" பிள்ளைகள் குற்றம் செய்தால், தாயானாலும் பொறுத்துக்கொள்வாளோ? மனதினாலும் வாயினாலும் இழிவுள்ள செய்கையாலும் நாம் செய்கிற குற்றங்கள் எண்ணிக்கையில்லாதனவா யிருந்தாலும், அவைகளுக்காக இவ்வுலகில் நம்மைத் தண்டிக்காமல் நாம் இறக்குங்காலம் வரையில் பொறுமையா யிருந்து, சகல சுகங்களையும் நமக்குக் கொடுக்கும் கருணை வள்ளலான கடவுளை நாம் ஸதா ஸ்தோத்தரித்து, அவரை நம்முள்ளத்திற் பதித்து ஆநந்திக்கக்கடவோம்.

வழக்கச் சொற்களின் சக்தி.

வழக்கச் சொற்களுக்குள்ள வலிமையும், தெளிவும் சுலபமாய்ப் பொருள் படுதலும், பல பொருள் கொள்தலும், இலக்கணச் சொறகளுக்கில்லை. வழக்கச் சொற்களிலுள்ள இன்பமும் சுவையும் ஒரு தனித்ததாகும். குழந்தையின் எத்தனையோ தப்பான மதலை மொழிகளிலுள்ள இன்பம், மகா கவியின் வாக்குக்கும் உண்டாகாது. மிகுந்த வித்வத்வம் பெற்றவர்கள் வழக்கச் சொற்களின் அருமையை யுணர்ந்து, தங்களின் செய்யுட்களிலும் இடையிடையே அதைக் கலந்து பூரிப்பர். "குலாம்" என்பதற்கு அடிமை என்று பொருள். அது தமிழ்ப்பதமன்றாயினும், வழக்கச் சொல் என்று தமது பாடலிலும் பட்டினத்தார் உபயோகித்திருக்கின்றார். "குலாமருக்கு என் சொல்வேன் இறைவா கச்சி ஏகப்பனே!" என்ற பாடலில் "குலாம்" என்ற ஹிந்துஸ்தானி பதம் கலக்கின்றது.

‘அமிர்தினி’ அன்பர் மொழி

தமிழகம் மகிழும் செல்வி நம் “அமிர்தினி”,
ஆண்டு ஒன்பதும் நிறைந்து புகழுறுகிறாள்.
பன்னிரு மாதமும் வந்து பரவசம் தருகிறாள்.
பல பல விஷயங்கள் தெளிய உணர்த்தினள்.
இனியகதைகள் மிக பேசி இன்பம் தருகிறாள்,
பத்திரிகா தலையங்கம் அதியற்புத கம்பீரம்.
பத்தாவது ஆண்டிலும் நாம் ஆதரிப்போம்.

புது வருட சந்தாவை இன்றே அனுப்புவம்.
அமிர்தினி நம் கண்மணி, இனிய நற்புதல்வி,

“அமிர்தினி”யி லும் செல்வம், துணை, இன்பம் வேறில்லை.

“அமிர்தினி” புகுந்த வீடு ஆநந்த மனை. ஞான இல்லம்.

“அமிர்தினி” வீடு நிறைந்த ஒளி விளக்கு.

‘ஆநந்த தரிசனம்’ அரிய ஞான பூஷணம்.
‘விகடப் பிரதாப’னே அனுபவ விநோதம்.
அடிவரிகளின் அழகு அது ஒரு அமிர்தம்.
எத்தனை தினுசுகள், பிரிவுகள், அற்புதமே!
‘நமது கடை’ நல்ல சேட்டியாரின் கடையே!
பழமொழி விளக்கம் அது ஒரு தனி இன்பம்.
ஒன்பதாம் ஆண்டு அட்டவணை உன்னதமே
எத்துணையோ விஷயங்கள்! ஆராய்ச்சிகள் !!
எவ்வளவோ கதைகள்! பூர்வீக சரிதைகள்!
எத்தனை சாஸ்திர நட்ப அனுபவமணிகள்!
ஆயுள் நாள் முழுதும் அன்புடன் பெறுவம்.

அமிர்தினி போதனை நயமோ மிகு ருசிகரம்.
எத்தனை இன்பம்! விநோதம்! கலா ஞானம்!
நாமும் பெற்றுப் பிறரும் சேர முயல்வோம்.
மணியாடரே தருவம், இன்றே செய்வோம்.
பத்தாம் ஆண்டின் அமிர்தே! வருக! வருக!

அமிர்தினியே! தாயே! நீ வாழிய நீடூழியே.

அமிர்தகுணபோதினி

பவ௵ பங்குனி௴ ௧௨

மக்களின் பிதிரார்ஜிதமான குணங்கள்.

முன்னோரின் குணங்களே பின்னோரைச் சார்வன. தாயின் குணங்களே மக்களை யமைக்கின்றது.

ஆசிரியர் "எல்மர் கேட்ஸ்" என்ற பெரியார், "ஒரு மனிதனுடைய தன்மையை அவனுடைய மூச்சுக் காற்றைக்கொண்டே அறியலாம்" எனக் கூறுகிறார். ஒரு மனிதனுடைய சுவாஸத்தைக் கண்ணாடியின்மீது படும்படி செய்து, அதைச் சில நூதன கருவிகளால் ஆராய்ந்து பார்த்தால், அந்த சுவாஸத்தை வெளியிட்ட பொழுது அம்மனிதனுடைய இயற்கையில் கோபம், பொறாமை, துன்பம், இன்பம், பொறுமை, சாந்தி முதலிய பல உணர்ச்சிகளில் எது எது வலுத்து நின்றது என்பதைக கண்டுபிடித்துவிடக் கூடுமாம். இங்ஙனம், ஒருவனுடைய குணமானது அவனுடைய மூச்சுக் காற்றின் தன்மையை மாற்றுவதுடன் மட்டும் நில்லாமல், ஒருவனுடைய மனோ நிலைமையானது அவனுடைய முழுத்தன்மையையே வேறாக்கியும் விடுகிறது. சரீரத்தில் வெவ்வேறான வியாதிகள் தோன்றின், அதற்கேற்றபடி வெவ்வேறான துர்நாற்றம் வீசுவதில்லையா? அப்படியே, கோபமாயிருந்தால் முகம் சிவக்கிறது. ஸந்தோஷத்தினால் முகம் மலருகிறது பைத்தியக்காரர்களுக்கென ஏற்பட்டுள்ள வைத்தியசாலையில் ஒரு தனியான நாற்றம் வீசுகிறதாம். அதை எங்ஙனமும் அகற்ற முடியாதாம். ஏனெனில், பைத்தியக்காரர்களுடைய மூச்சுக் காற்றினாலேயே அந்த நாற்றம் உற்பத்தி

விவாகமானதும் குழந்தைகள் பிறக்கின்றன பிறகு சில வருஷங்களில் அவை இறக்கின்றன. அப்பால் புத்திரப்பேறின்றியே காலம் கழிக்கும்படியாகி விடுகிறது. சிலர் மோசம் செய்து பிறரது சொத்துக்களையோ வீட்டையோ ஏமாற்றிப் பெற்றுக்கொள்கிறார்கள். இந்தத் துரோகத்தின் முடிவு பிறகு தெரிகிறது மூத்த மகனுக்கும் பிள்ளையைக் காணோம்; இளைய குமாரனுக்கும் இல்லை; குமார்த்தியோ மலடியாகிறாள்.

யாகிறது. அங்ஙனமே, கைதிகளை அடைத்து வைத்திருக்கும் சாலைகளின் நாற்றமோ வேறொரு மாதிரியானதாம்.

ஃ

"தந்தையின் குணம் மக்களைச் சார்வது" என்ற நியாயத்தை முற்றிலும் ஒப்புக்கொள்ளவேண்டும். முன்னோர்களின் குணம் பின்னோர்களின் இயற்கையினுடைய 'மேலான பாகத்தை' நிர்ண யிக்கிறது. என்றாலும், கருதரித்த காலம் முதற்கொண்டு பிரசவம் வரையில் தாய் தந்தையர்கள் நடந்துகொள்ளும் முறையே குழந் தையினுடைய குணத்தில் வெகுவாகப் பதிந்து விடுகிறது. தங் களின் தாய் தந்தையருடைய ஞானத்தாலேயே குழந்தைகள் நன்மை யடையவேண்டும். ஒரு குழந்தையைப் பயில்விக்கும் காலம் எப்போது தொடங்கவேண்டுமென ஒரு பெரியாரைக் கேட்ட தற்கு, அவர், "குழந்தை பிறக்க இருபது வருஷங்களுக்கு முன்பே ஆரம்பிக்கவேண்டும்" எனப் பதில் புகன்றார். இது ஆழ்ந்த கருத் தமைந்த பொன்மொழி. எனவே, ஒரு புருஷனானவன் இனி தனக்கு உதிக்கும் மக்களுக்குத் தாயாகப்போகும் ஸ்திரீயின் குணத்தை நன்கு ஆராய்ந்தே அவளை மனைவியாகக் கொள்ளவேண் டும். அங்ஙனமே, தனது குழந்தைகளுக்கு இனி தந்தை யாவதற் கிருக்கும் புருஷனுடைய குணத்தை நன்கு ஆராய்ந்தே அவனைத் தன் கணவனாக ஸ்திரீ ஏற்கவேண்டும். மக்களின் பிதிரார்ஜிதமான குணங்களை நிர்ணயிக்கும் காலம் மூன்றேதான். (1) கர்ப்பத்திற்கு முன் தயார் செய்துகொள்ளும் காலம்; (2) ஸ்திரீ புருஷ சம்பந்த காலம்; (3) கர்ப்பம் தரித்து இருக்கும் காலம் என்பனவாம்.

ஃ

பிதிரார்ஜிதமான குணங்கள் பரம்பரையாகத் தொடர்ந்து வருகின்றன என்ற விதியை எவரும் மறுத்துக்கூற முடியாது. நமது சரீரத்திலுள்ள ஒவ்வொரு துளி ரத்தமும், அது யாரிடமிருந்துண் டானதோ அவருடைய குணத்தைப் பெற்றே இருக்கிறது உலகின் ஒளியாய் விளங்கிப் பிரக்கியாதி வகித்த மாந்தர் தீயோரான தாய் தந்தையரிடமிருந்து வந்தவரல்ல. ஆனால், இந்தப் பொது விதிக் குட்படாததுபோன சில உதாரணங்களும் இல்லாமலில்லை. உயர் குலத் தந்தையருக்கு மிகு அதமமான புத்திர புத்திரிகள் உண்டாகி யிருக்கின்றனர். இதற்குக் காரணம் கூறுவது கடினமில்லை.

புத்திரப்பேறு என்பது பரம ரகசிரம், பரம பாக்கியம். விவாகம் செய்த தும் குழந்தை பிறந்து விடுமென்கிறார்கள் வருஷங்கள் போய்க்கொண்டிருக் கின்றன. ஒரு மாதங்கூட மாதத்தீட்டு நிற்கும் குறி காணோம். கடைசியில் தங்களுக்குக் குழந்தைப்பாக்கியம் இல்லையென்ற வியஸனகரமான முடிவுக்கு வந்து விடுகிறார்கள்

பெரும் நியாயவாதிகளும், கவிகளும், இராஜ தந்திரிகளும், ஆசிரியர்களும் தங்களுடைய சக்தியனைத்தையும் உலக சேவைக்கே அளித்துவிடுவதால், தம்முடைய மக்களுக்கென்று தருவதற்குப் போதிய சக்திதத்துவம் அவர்களிடம் எஞ்சியிருப்பதில்லை. இதனாலேயே பரோபகாரிகளாகிய மகான்களுடைய புத்திரர்கள் சில சமயங்களில் குலத்தைக் கெடுப்போராகவும் வந்து முளைக்கின்றனர். அன்றியும், புகழ் படைத்த மாந்தர் அறநெறி தவறிய வாழ்க்கை வாழ்ந்தால்,—புகையிலை, மதுபானம், சதா காமவேட்கை இவைகளுக் குட்பட்டிருந்தால்,—அவர்களுக்கு உத்தமமான புத்திரர் உண்டாவது அருமையே. அல்லது, கணவன் பெருத்த மேதாவியா யிருந்தாலும், அவனுடைய மனைவி மிகு சாமான்யமாக இருந்தால், பிறந்த குழந்தை தாயைப் பின்பற்றி சாமான்யதன்மையுடையதா யிருக்கவே நேரும். தாயின் வயிற்றில் பத்து மாதம் அவளையே நம்பி அண்டி வாழும் சிசுவானது தாயினுடைய மனோநிலையை,—அது உயர்ந்ததோ, அல்லது தாழ்ந்து சாமான்யமானதோ,—அதைப் பின்பற்றாமல் தன்னைத் தடுத்துக்கொள்ள ஒருபோதும் முடியாது. மேலும், தாய் தந்தையர் இருவருமே மகத்துவமான குணசீலங்களைக் கொண்டிருப்பினும், கர்ப்ப காலத்தில் தாயைச் சுற்றியிருந்த விஷயங்களும், சமய சந்தர்ப்பங்களும் குழந்தையின் குணத்தை மாற்றிவிடக்கூடும். நல்ல குணத்தையே கொண்டு பிறந்தாலும், செவிலித்தாய், சேவகர் இவர்களுடைய துர்நடத்தைகள் பிடிபட்டுப் போகலாம். நல்ல பயிரை விரும்பும் குடியானவனுக்கு மூன்று விஷயங்கள் இன்றியமையாதவை; முதலாவது நல்ல விதை; இரண்டாவது நன்றாக உழுது பயிரிட்ட நிலம்; மூன்றாவது இடைவிடாத கவனமும் சிரத்தையுமாம். மக்களேனும் பயிருக்கும் இம்மூன்றும் அவசியமே. ஆண்—நல்ல, தீய, விதைக்குச் சமம்; ஸ்திரீ—நல்ல, கெட்ட, நிலத்துக்குச் சமம்.

ஃ

ஜனனத்திற்கு முன், தாயின் வயிற்றிலிருக்கும்பேதே சிசுவைப் பற்றிக்கொள்ளுகிற சக்திகள் பலவுண்டு. இந்த சக்திகள் வெகு சூக்ஷ்மமாகவும், ஆனால், மிக உறுதியாகவும் வேலை செய்கின்றன. இந்த சக்திகளை நெருங்கவொட்டாமல் தடுப்பதற்கு எவராலும் முடியாது. குழந்தை பிறந்த பிறகு சிறிது சீர்திருத்துவது சாத்தியமேயாயினும், அவைகளின்—அதாவது, குழந்தை கெடுவதற்குள்ள குற்றங்களின் வகைகளுக்கு உண்மைக் காரணமாயுள்ள

உலகம் குறைவுள்ளது என்பது விளங்க கடவுள் எவ்விதத்திலாவது எல்லாருக்குமே ஒரு குறைவை வைத்திருக்கிறார். பணப்பாக்கியமுள்ளவர்களுக்குப் புத்திரபாக்கியமில்லாது போவதும், புத்திரபாக்கியமுள்ளவர்களுக்குப் பணப்பாக்கியமில்லாதுபோவதும் உலகத்தில் இயல்பாயுண்டு.

தாய் தந்தையர், விவாகத்திற்கு முன்னதாகவே அந்தக் குற்றங்களைத் தங்களிடமில்லாது சீர்திருத்திக்கொண்டிருப்பதே சிறந்ததாகும். எனவே, முக்கியமான இவ்விஷயத்தைப்பற்றி நன்கு உணராமல் பரவியிருக்கும் அறியாமையை யகற்றுவதற்கான ஞானத்தை யாவரும் தேடுவதே முதற் கடமையாகும். பிறந்த பின்பு குழந்தையைச் சீர்திருத்துவதைவிட, தன் வயிற்றிலேயே வைத்து சீர்திருத்திய குழந்தையையே பெற்றுவிடுவது உத்தமமானதல்லவா? வாலிபர்கட்குக் கல்வி கற்பிக்கவும், கைதிகளைத் திருத்தவும் முற்படுகின்ற தன்னலமற்ற மாந்தரை நாம் துதித்துப் போற்ற வேண்டியது கடமையாகும்; ஆனால், இனி உலகில் ஜனிக்கப்போகிற குழந்தையினுடைய குணத்தையும் ஆரோக்கியத்தையும், இயற்கையையும் நல்வழிப்படுத்திவிடும் தாய் தந்தையரோ மேற்சொன்ன தன்னலமற்ற மாந்தர்களினும் சிறந்த பரோபகாரியாவர். ஏனெனில், அதம இனம்கொண்ட தீய மக்களைப் பெற்று உலகில் வாழ விடுகிற மனிதர்கள் நாட்டைக் கெடுக்க வந்த தேசத் துரோகிகளேயாவர்.

ஃ

ராபர்ட் பர்ன்ஸ் என்ற ஸ்காட்லண்ட் தேசத்து மகா கவியினுடைய அன்னையார் எப்பொழுதும் ஹம்ஸமுகமாகவும் புன்சிரிப்புடனும் இருந்து வருவாளாம். மேலும், அவளுடைய ஞாபகசக்தி அபாரமானதாம். வேலையைச் செய்யும்பொழுதே பழைய பாட்டுகளையும் கும்மிகளையும் பாடிக்கொண்டே இருப்பாளாம். அங்ஙனமே, அவளுடைய புத்திரனும் பழைய பாட்டுகளை மிக இன்பமாக வரைந்துள்ளார்.

ஃ

நெப்போலியன போனபார்ட் என்ற மகா யுத்த வீரனுடைய தாயானவள் கர்ப்பம் தரித்திருந்தபொழுது குதிரைமீதேறித் தனது கணவனுடன் ஒரு யுத்தகளத்தை நோக்கி, மற்றச் சேனைகளோடு தொடர்ந்து சென்றதுடன், யுத்தத்திலும் மிகுந்த சிரத்தை கொண்டிருந்தாளாம். அவ்வித குணங்களமைந்த அவளுக்குப் பிறந்த புத்திரனே இளமை முதற்கொண்டே யுத்தத்திலும் ஜெயத்திலுமே வெறி கொண்டவராய்விட்டார்.

ஃ

ஒரு கர்ப்பிணி ஸ்திரீ தனக்குத் தேவையான பணத்தைப் பெறுமையினால், தனது கணவனுடைய பெட்டியிலிருந்து பணத்

குமாரனும் சம்பாதிக்கிறான், தந்தையும் தனது விருத்தாப்பியத்திலும் சம்பாதித்தபடி இருக்கிறான். மகனுக்குப் புத்திரப்பேற்றைக் காணோம். எவர் அநுபவிப்பதற்காக இவர்கள் சொத்து சேர்க்கின்றனரோ!

தைக் கொஞ்சம் திருடிவிட்டாள். அவளுக்குப் பிறந்த குழந்தையும் தாயைப்போன்ற பிள்ளையாய்த் திருடனாகவே பிறந்தது. சில காலத்திற்குள்ளேயே அவன் பல களவுகளைச் செய்யலானான். ஆனால், தனது வீட்டிலேயே திருடுவனே யன்றி, அன்னியர் பொருளைத் தொடவும் மாட்டான். இது உண்மையாக நடந்ததே.

ஃ

கார்பீல்ட் என்ற பெரியாரின் மரணத்திலிருந்தும் ஒரு குறிப்பை நாம் பெறலாம். கர்ப்பத்தை நாசம் செய்ய முயன்று அதில் தவறிவிட்டால், அதினின்றும் ஜனிக்கும் குழந்தை கொலையாளியாகப் பிறக்கிறான் என்பது, அமெரிக்காவின் குடியரசுப் பிரசிடெண்டாக இருந்த கார்பீல்ட் என்பவரை 1881-ம் வருஷத்தில் சுட்டுக் கொன்ற கிட்யூ என்பவனுடைய உதாரணத்திலிருந்தும் நன்கு விளங்குகிறது. இந்த கிட்யூவினுடைய தந்தை நற்குணம் வாய்ந்தவன். அவனுடைய மனைவியோ மிகுந்த பலஹீனம் கொண்டவளாதலாலும், அடிக்கடி பிரஸவிக்க நேரிட்டதாலும், அதிகமாகக் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டியிருந்ததை உத்தேசித்தும், வயிற்றிலுள்ள சிசுவைக் கொல்லப் பல மருந்துகளையும் உபயோகித்தாள். அந்த சிசுவையும் அவள் வெறுத்தாள். அவளுடைய முயற்சி பலிக்கவில்லை. பிரஸவத்திற்குச் சில வாரங்கள் முன்பே அவளுக்குக் கொடிய ஜ்வரம் தொடங்கிவிட்டது. குழந்தை பிறந்ததும் அது நோயுற்றதாய், ஓரே மூச்சாய் அழுதுகொண்டேயிருந்தது. சுயபுத்தியும், தன்னடக்கமும், மானமும் அக்குழந்தை இருந்த இடத்திலேயே யில்லை. கடைசியில் கிட்யூ கொலைக் குற்றத்தையும் செய்தான். அவன் பிறவியிலேயே கொலையாளியாய்ப் பிறந்தான்.

பிளேக்ஸ்மேன் என்பவர் மேனாட்டில் மிகக் கீர்த்திவாய்ந்த சிற்ப சாஸ்திரியும் கலைஞானியுமாவர். அவருடைய தாயார் கர்ப்ப சமயத்தில் பல சிற்ப வேலைகளில் சிரத்தைகொண்டு அவைகளைப் பயின்று வந்தாளாம். தன்னுடைய முயற்சியின் பயனாகவே தனது புதல்வன் புகழ்படைத்த கலா விற்பன்னனாக ஆனான் என்று அவள் எண்ணி அகமகிழ்ந்திருந்தாள்.

கர்ப்ப சமயத்தில் ஏகாந்தத்திலிருந்து, எப்பொழுதும் புஸ்தகத்தையே ஓயாது படித்துக்கொண்டிருந்த ஒரு ஸ்திரீக்கு உண்டான

பழய நாளில் கலியாணமென்றால், விவாகத்திற்குப் பத்து தினங்கள் இருக்கையிலேயே அதிரஸம் சுட்டும், ஊறுகாய்கள் போட்டும் பத்திரப்படுத்துவார்கள். இப்போதைய ஒருநாள் விவாகத்திலோ இந்தச் செலவுகளெல்லாம் இல்லை. அதிலும் கோயில்களில் நடக்கும் கலியாணங்களோ ஒருமணி நேரத்தில் முடிந்துவிடுகின்றன.

இரு பெண் குழந்தைகளும் பால்யம் முதற்கொண்டே விளையாட்டுப் பொம்மைகள் போன்றதில் மனம் செல்லாமல், அவற்றைவிடப் புஸ்தக வாசிப்பிலேயே அதிக சிரத்தையுடையனவாக இருந்ததாய் பிரபல அமெரிக்க ஆசிரியரொருவர் கூறுகிறார். தங்களின் மக்கள் படிப்பும் ஞானமும் நிறைந்தவர்களாகவேண்டுமானல், நன்கு கற்ற பெண்மணிகளையே மணக்கவேண்டுமென்ற மகா முக்கியமான விஷயம் இங்கு பெரிதும் கவனிக்கத்தக்கது.

பேயர் என்ற ஆசிரியர் ஒரு விநோத சம்பவத்தைக் கூறுகிறார். ஒரு யௌவன மனைவியைச் சில பெண்டிர்கள் ஒரு ஈன சங்கதியில் சுட்டிக் காட்டி, "உனக்கு அவமானமாக இல்லையா?" என இகழ்ந்து கூற அப்பேதைப் பெண் தனிமையான அறையையடைந்து துக்கம் பொறுக்காது கதறி யழுதனளாம். அவளுக்குப் பிறந்த குழந்தையை ஆறுவது வயதில் இதே ஆசிரியர் கண்டனராம். யாராவது அக்குழந்தையைச் சுட்டிக் காட்டினல் அது உடனே அழ ஆரம்பித்துவிடுமாம்!

தாய்மாரே பெரும்பாலும் தங்கள் குழந்தைகளின் குணங்களைக் கர்ப்பத்தில் அமைக்கின்றனரென்பது மேற்கூறியவைகளால் விளங்கும்.

ஃ

இனி, தாயருடைய குணம் மக்களைக் கெடுக்குமென்பதற்கு சில உதாரணங்களை இங்கு தருகிறேம். ஒரு கர்ப்பிணி ஸ்திரீயானவள் ஒரு ரொட்டிக் கடையில் உட்கார்ந்து விற்பனை செய்வது வழக்கமா யிருந்தது. அப்பொழுது தினந்தோறும் ஆறு விரல்களைக்கொண்ட ஒரு குழந்தை அவளிடம் ரொட்டி வாங்க வரும். சில நாட்கள் கழித்து அவள் விற்பனை வேலையை நிறுத்திவிட்டாலும், இக்குழந்தையின் உருவம் மட்டும் அவள் மனதில் நன்ருகப் பதிந்துவிட்டது. எனவே, அவளுக்குப் பிறந்த குழந்தையும் ஆறுவது விரலுடன் ஜனித்தது!

ஓரே கையுடன் ஜனித்த சிசுவைப்பற்றி நாம் சமீபத்தில் கேள்வியுற்றேம். இதற்குக் காரணம், அந்தத் தாயினுடைய மைத்துனன் ஒருவன் ஒரு கை முடவனுகி வீட்டில் தங்கியிருந்ததேயாம். இது அவளுக்கு வெகுநாளாக வழக்கப்பட்ட சங்கதியாயினும்,

---

தனக்கு ஒரு வருமானம் வந்து, அந்த வரவுக்குள் தனது செலவுகளை அடக்கி, சிறிது மிச்சமும் கண்டு வாழ்வதே உயர்வுக்கு வழி. அவ்விதமின்றி, வீட்டு நகைகளைப் பாங்கியில் வைத்துப் பணம்பெற்று வீட்டுச் செலவுகளை நடத்துகிற குடும்பத்தின் செழிப்பு நிச்சயமுள்ளதாகாது. ஒரு சமயம் அவ்விதம் நடத்த நேரினும், பிறகும் அங்ஙனமே நிகழாதிருக்க முயன்று, முன்பு பட்ட கடனையும் சீக்கிரம் தீர்க்க வழி தேடவேண்டும்.

அதனால் அவளுடைய மனதில் ஏற்பட்ட "பதிப்பு" சிசுவினிடத்திலும் பதிந்துவிட்டது.

தனக்கு முன்பு குந்திதேவி குழந்தையைப் பெற்றுவிட்டனளே என்று பொறாமை கொண்ட பூர்ண கர்ப்பிணியான காந்தாரி, தன் வயிற்றைக் குழவிக் கல்லால் இடித்துக்கொண்ட ஒரு ஸம்பவமே, அவளது மக்களனைவரும் தாயாதிப் பொறாமை கொண்டவராய்த் தீயராகி, மஹா பாரத யுத்தம் தோன்றக் காரணராயினர் என்பதும் இங்கு நினைவு கூறற்பாலது. தேக சம்பந்த சமயத்தில் ஸ்திரீ தன் நாயகனிடத்து முகம் சுளித்தும், வெறுத்தும், பிணங்கியும், அல்லது அவன் விருப்பத்திற்கேற்ப இணங்கியும் நடந்து கொள்ளும் தன்மைக்கேற்பவே மக்களின் உற்பத்தியும், அவர்களது குணங்களும் அமையும் என்பதற்கு திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் இவர்களது உற்பவ மூலம் சிறந்ததோர் திருஷ்டாந்தமாகும்.

ஃ

கர்ப்ப சமயத்தில் தனக்குப் பிறக்கும் குழந்தை நற்குண ஸம்பன்னனாக இருக்கவேண்டுமென இடைவிடாது தாயானவள் விரும்பி நின்றால், அதுவே பெரும் நன்மையை விளைவிக்கும். அவளுடைய இச்சைகளும் ஆசைகளும் குழந்தையினிடத்திலும் அங்ஙனமே தோன்றிவிடும். அவளுக்கு அந்த சமயத்தில் ஒரு பொருளின்மீது விரக்தி தோன்றினால், குழந்தைக்கும் அப்பொருள் பிடியாது போகும். சில குழந்தைகள் இடைவிடாது அழுதுகொண்டிருக்கையில், அவர்களுடைய தாய்க்கு இஷ்டமான பொருளை அக்குழந்தைகளிடம் அளித்தால் உடனே அழுகை நின்று விடுவதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். தாயின் விருப்பு வெறுப்புகள் அவள் குழந்தைகளிடமும் பதிந்து விடுகின்றன. இதனாலேயே, ஒரு மாற்றாந்தாய் தன் மூத்தாளுடைய குழந்தைகளை வெறுப்பது போலவே, அவளுடைய குழந்தைகளும் வெறுக்கும் அம்சம் கொண்டவைகளாகின்றன. நற்குணம் அமைந்த ஒரு மாற்றாந்தாய் தன் மூத்தாளது குழந்தைகளைத் தன் குழந்தைகளைவிட மேலாக மதித்து அன்பு பாராட்டின், அவளது குழந்தைகளும் அவ்விதமே சேர்ந்து குலாவி ஒற்றுமையுடன் வாழ்கின்றன.

ஃ

பிற்காலத்தில் குழந்தைகள் கெட்ட அப்பியாஸங்களைக் கொள்வதற்கும் தாய் தந்தையரே காரணமாகின்றனர். "மக்களுக்குச் சத்

உலகில் மனதாலாவது தேகத்தாலாவது பிழை தவறாதவர்களில்லை. ஒரு முறை தவறினாலும் அதைத் திருத்திக்கொள்ளுகிறவர்களே புத்தியுள்ள மனிதர்.

திரு மாதா பிதா" என்பது தமிழ்ப் பழமொழி. கர்ப்ப காலத்தில் மதிவர்க்கங்களையும் (காப்பிக் குடியையும்) அகற்றிவிட வேண்டியது அவசியமாகும். இல்லையேல், பிறக்கும் குழந்தைகள் கட்குடியராகவே பிறந்து விடுவரென்று ஒரு சாஸ்திர விற்பன்னர் கூறுகிறார். தாங்கள் செய்யும் பாண்டம் குற்றமற்றதாக இருக்க விரும்பினால், தாங்களே குற்றமற்று வாழ்வதுதான் தாய் தந்தையர் செய்யவேண்டிய முதற் காரியமாம்.

ஃ

முதற் குழந்தை அநேகமாகத் தந்தையை யொத்தே இருப்பது சகஜம். ஏனெனில், அச்சமயத்தில் மனைவியினுடைய மனம் முழுவதும் தனது கணவனுடைய ஞாபகமே நிறைந்து நிற்கிறது. வரவர அவளது எண்ணம் மற்ற பல விஷயங்களில் தாவிச்சென்று விடுகிறது. அங்ஙனமே, குடும்பத்தில் செல்வம் நிறைந்து தாராளமாகப் பணச் செலவுகள் நடந்துகொண்டிருக்கும் சமயத்தில் பிறக்கும் குழந்தைகள் தாராள மனதுடையவர்களாகவும், சில சமயங்களில் வீண் விரயம் செய்வோர்களாகவும்கூடப் பிறக்கின்றனர். அங்ஙனமின்றி, தரித்திரம் நிறைந்த சமயத்தில் பிறக்கும் குழந்தைகளோ சிக்கனமாகச் செலவு செய்வோராகவும் லோபிகளாகவும் ஆவதுண்டு தாயினுடைய குணமே மக்களை அமைக்கின்றது. குழந்தை என்பது கடவுளால் நம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட அரும் பொருள். குழந்தைகளே இனிவருங் காலத்திய பெரியோர்களாவர். அத்தகைய அரும் பொருளைக் கெடுத்துத் தீங்கான ஒழுக்கத்திற்கு உட்படும்படியாகத் தாங்கள் தங்களின் நடத்தையிலே கெடு வழக்கங்களையும் தீய குணங்களையும் கொண்டவர்களாயிருந்தால், கடவுளின் சாபத்திற்கு ஆளாவது திண்ணம் மக்கள் கெடுவதற்குப் பெற்றோரது தீய குணங்களே காரணம். இகத்திலும் பரத்திலும் அவர்களுக்குத் துன்பமே விளையும். அங்ஙனமின்றி, கடவுளால் அளிக்கப்பட்ட அரும் பொருளான குழந்தையை சிரத்தையுடனும் கவனத்துடனும் காத்து நல்வழிபடுத்துவோருக்கு,—அது நல்வழிபடுமாறுத் தாங்களும் நல்லோராக இருந்து நடந்து மகவை ஸம்ரக்ஷிப்போருக்கு,—கடவுளுடைய அருள் பூரணமாகச் சித்திக்கும். நமக்கும் அந்த இறைவனின் அருள் உண்டாகுமாறு நற்குண ஸம்பன்னராக நிலவி, நமது உத்தம அம்ஸங்களைய நமது மக்களிடமும் பிரதிபலிக்கச் செய்து, நற் பிரஜைகளின் தாய் தந்தையராகி நலம் பெறக்கடவோம். வஞ்சனை, மோசம், பொய், ஏமாற்று, புறங்கூறல், நன்றியின்மை, சுயநலம், லோபம், துரோகம் முதலிய தீமைகள் நம்மிட மிருப்பின், அவை நமக்கு இனி உதிக்கும் மக்களையும் சேருமாதலின், அவற்றை யகற்றி சன்மார்க்கராகக் கடவோம். தீமையின் பயன் தீமை; நன்மையின பயன் நன்மையாம்.

நமது சந்தா நேயர்கட்கு
விக்ஞாபனம்.

"அமிர்தினி"யின் அன்பர்காள் !



சென்ற தடவை "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகையின் அபிவிருத்தி விஷயமாய் எழுதியுள்ள விஷயங்களைப் படித்திருப்பீர்களென் றெண்ணுகிறோம். அதனை மற்றொரு முறையும் செவ்வையாய் வாசித்தறியக் கேட்டுக் கொள்கிறோம். ஈசுவரனுடைய பெருமை, உலகத்தில் அபரிமிதமாய் உண்டாயிருக்கும் சிருஷ்டிப் பொருள்களால் புலப்படுகிறது. இதைப்போல், "அமிர்த குணபோதினி"யின் பெருமை அதை யாதரிக்கும் அநந்தமான சந்தாதாரர்களால் பிரகாசப்படவேண்டும். இப்போதுள்ள "அமிர்த குணபோதினி"யின் கையொப்ப நேயர்கள் ஒவ்வொருவரும் கொஞ்சம் சிரமப்பட்டு குறைந்த பக்ஷம் ஒவ்வொரு புதிய சந்தாதாரரை இதற்குச் சேர்த்து உபகரிப்பதாய்த் தீர்மானித்துக்கொண்டால், இப்பத்திரிகை அதிசீக்கிரத்தில் அபிவிர்த்தியடையும். பத்திரிகாபிமானிகளாகிய சந்தாதாரர்களின் முயற்சியாலேயே பத்திரிகைக்குப் பெருமை யுண்டாகவேண்டும்.

ஃ

சப்பாத்துக்கள்ளிகளிலும், பட்டுப்போன பழய மரங்களிலும், கற்பாறைகளிலும் தேனீக்களும் தேன் வண்டுகளும் துளித்துளியாய்த் தேனைச் சேகரித்துக் கூண்டு கட்டுகின்றன. அந்தத் தேன் பல்லோர்க்கும் பயன்படுகிறது. பகவானுடைய அபிஷேகத்துக்கும் உபயோகமாகிறது. அதுபோல், "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகையிடம் அதன் அன்பர்கள் வைத்துள்ள பிரீதி தேன்கூண்டு போலாகி வாசிப்போர்க்கெல்லாம் ஆநந்தத்தை விளைக்க வேண்டும். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு "அமிர்தினி"யின் **பத்தாம் ஆண்டு சந்தாவான ரூபாய் ஒன்றையும் ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதிக்குள் மணியாடர் மூலமாய் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.** வி.பி. யில்

ஜீவிய சந்தாதாரராகச் சிலர் சேர்ந்து அதற்கென்று குறிப்பிட்ட பெரிய தொகையையும் பத்திரிகைக்குச் செலுத்துகிறார்கள். பத்திரிகா நிர்வாகப் பெரிய செலவில் அந்தப் பணம் அப்பொழுதே செலவாய் விடுகிறது. பிறகு இவர்களுக்குக் கடனுக்குப் பத்திரிகை அனுப்புவதுபோல் அனுப்பவேண்டியதாகிறது. இப்படிப் பணம் அனுப்பிய ஜீவிய சந்தாதாரர்கள் ஒரு கடனாளிகளைப்போலப் பத்திராசிரியருக்கு ஒரு பாரமாவதைவிட, பிரதி வருஷமும் சந்தா செலுத்திப் பத்திரிகையை ஆதரித்துப் பத்திராசிரியரை உற்சாகப்படுத்துவது சிலாக்கியமாகும் என்று ஒரு ஆசிரியர் கூறுகிறார்.

பத்திரிகையைப் பெற விரும்புவதில் லாபமில்லை. நான்கணு அதிகச் செலவாகின்றது. ஆதலின், சந்தாதாரர் அனைவரும் மணியார்டர் மூலமாகவே புது வருட சந்தாவைச் செலுத்தி ஆதரிக்குமாறு வேண்டுகிறோம். ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதிக்குள் நமக்குச் சந்தாத் தொகைகள் கிடைத்துவிட்டால்தான், பத்தாம் ஆண்டின் புதுக்கணக்கில் சந்தாதாரர்களின் பெயர்களைப் பதிவு செய்துகொண்டு, யுவஹூ சித்திரை மாதத்திய முதல ஸஞ்சிகையை அனுப்புவதற்கு உதவியாயிருக்கும் ஆதலின், இது விஷயத்தை நேயர்கள் முக்கியமாய்க் கவனித்து, இந்தப் பங்குனி ஸஞ்சிகை கிடைத்தவுடனே புது வருட சந்தாவை அனுப்பிவிடுதல் உத்தமம்.

ஃ

இத்துடன் ஒன்பதாம் ஆண்டின் அட்டவணையை அனுப்பியிருக்கிறோம். அதை முற்றும் வாசித்துணர்ந்தால், "அமிர்தினி"யின் சிறப்பும், அதில் அடங்கியுள்ள விஷயங்களின் அருமையும் இனிது விளங்கும். தமிழ் நாட்டில் எத்தனையோ மாதப் பத்திரிகைகள் இருக்கின்றன. ஒரு முக்கிய பத்திரிகையைப் பார்த்து அதன் சாயலாக வெளிவரும் பத்திரிகைகளும் அநேகம். சில குறித்த பத்திரிகைகள் மட்டும் தமக்குள் ஒரு உத்தேசத்தை ஏற்படுத்திக்கொண்டு அந்த நோக்கத்துடன் வெளிவந்து அன்பர்களை மகிழ்விக்கின்றன. அவ்வாறன ஒரு லக்ஷ்யத்துடன் நடைபெறுவனவற்றுள் நமது "அமிர்த குணபோதினி"யும் ஒன்றாகும். ஒன்பது வருடங்களுக்கு முன் "அமிர்தகுணபோதினி" அதன் ஆசிரியரால் எந்தெந்த விதமான லக்ஷ்யங்களுடனும் தொடங்கப் பெற்றதோ, அதே விதமான அமைப்பில் நாளது வரையும் தனது நோக்கத்தை நிறைவேற்றி வந்து, எல்லோரும் கொண்டாடக்கூடிய சிரேஷ்டதரமான நிலையில் நடைபெற்று இலங்குகின்றது. விசேஷமாய்ப் பாலர் பாலகிகட்கும், மாணவர்கட்கும், மாதர்கட்கும் பயன்படுமாறு அவர்கட்குப் பிரீதிகரமான விஷயங்களைச் சேகரித்துக் கொடுத்து அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவேண்டுமென்பதே நமது நோக்கமாகும். இந்த நோக்கத்தை நாம் இந்த ஒன்பதாம் ஆண்டில் எவ்வாறு நிறைவேற்றியுள்ளோமென்பதை இத்துடனுள்ள அட்டவணையைப் பார்ப்பின் நன்கு புலனாகும். ஒவ்வொரு விஷயமும் பாடசாலைகட்கு வேண்டிய போதனைப் பாடங்கள் போன்று நற்கருத்துகள் நிறைந்து விளங்குகின்றன. ஆதலின், எவ்விதத்திலும் உபயோகமுள்ள "அமிர்த குணபோதினி"யைப் புதிய பத்தாம் ஆண்டிலும் ஆதரித்துப் புதிய சந்தாவை மணியாடரில் செலுத்துமாறு மற்றொரு முறையும் வேண்டுகின்றோம். வெளி நாட்டிலுள்ள அன்பர்கள் இந்தப் பங்குனி ஸஞ்சிகை பெற்ற க்ஷணமே தங்களின் புது வருட சந்தாவான ஒன்றரை ரூபாயையும் அனுப்பி வைக்குமாறு கோருகிறோம். புது வருடமாகிய யுவ—ஆண்டில் எல்லோருக்கும் மங்களம் உண்டாகும்படியும், இப்பத்திரிகை அதன் அன்பர்களின் அபிமானத்தைப் பூர்ணமாய்ப் பெற்று மேன்மேலும் சிறந்து விளங்கும்படியும் ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றோம்.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு,

பத்திராசிரியர்.

பத்தாம் ஆண்டு சந்தா.

பங்குனியுடன் 'அமிர்தினி' 9-ம் வருட பூர்த்தி
யுவ-சித்திரை முதல் 10-ம் ஆண்டு ஆரம்பம்
'அமிர்தினி' உங்கள்தோழி, சுகுமாரி, கண்மணி
பிரதிமாதமும் இன்பம் தருவது 'அமிர்தினி'
அமிர்தினிக்கு சமமானபத்திரிகைவேறுஏது?
10-ம் ஆண்டில் 'அமிர்தினி'யை ஆதரியுங்கள்
ஏப்பிரல் 5-க்குள் புது சந்தா அனுப்புங்கள்
இன்றே மணியாடர் தரினும் மிகமிக நன்றே.

☞ எல்லாமணியாடர்களையும், சென்னை பிராட்வே 158-A 'அமிர்த குண போதினி' ஆபீஸுக்கு அனுப்புக. அன்புடனே அமிர்தை உங்கள் ஆயுள் முழுதும் ஆதரியுங்கள்.

வெளிநாட்டு அன்பீர்! புதிய சந்தா தாரீர்.
பங்குனி 'அமிர்தினி' கண்டதும் அனுப்பிடுவீர்.
சந்தா வந்தபின் புது 'அமிர்தினி' தந்திடுவோம்.
ஆசிரிய ராமாநுஜனை சதா மனதில் வைப்பீர்.
புது ஆண்டில் அமிர்தினி சிறந்து விளங்கும்.
வி.பி. விரும்பின், பத்திரிகை பெற நாளாகும்.
சித்திரை முதலில் காண வரா. அது கஷ்டம்.
மணியாடர் தந்து முதல்தேதி பெறலே நன்று.
புது சந்தா பிறகு அனுப்பலாமென இராதீர்.
முன்பே ஈதல் பெரிய உதவி, உடனே தருக.
அமிர்தினி 10-ம் ஆண்டு காணவாரீர்; மகிழ்வீர்

அமிர்தினி அநுபவ சஞ்சீவி, ஞானோதய தீபம்
80-பக்கம், ஒரு ரூபா, எப்பக்கமும் இன்பமே.
10-ம் ஆண்டுமிகுபரிமளம் வீசும். பரவசமே.
வி.பி. தொல்லை; மணியாடர் தருக அது லாபம்
அமிர்தினி உம் செல்வம் நற்றுணை மறவாதீர்
அமிர்தினியை என்றும்பெற்று வளர்த்திடுவீர்

குழந்தைகள் பக்கம்

தலையாரியின் தப்பர்த்தம்.

ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு மூன்று மனைவிகள் இருந்தனர். அந்த அரசனுடைய அரண்மனைக்கு அருகாமையில் ஒரு பெரிய கோயில் இருந்தது. அந்தக்கோயிலில் காலை, மாலை, இரவு இப்படி மூன்று வேளைகளிலும் மேளதாளத்துடன் ஆராதனைகள் நடந்துகொண்டிருந்தன. ஒருநாள் இரவு 9-மணிக்கு அரண்மனையிலிருப்பவர் யாவரும் போஜனம் செய்துவிட்டனர். தலையாரி மட்டும் இன்னும் சாப்பிட வரவில்லை. எங்கும் நிசப்தமாயிருந்தது. அந்த சமயம் ராஜபத்நிகள் மூவரும் முன் கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அதில் சிறியவள் ''அக்கா! எட்டுவருடத்து எருமைத் தோல் எவவளவு பதமா யிருக்கிறது பார்த்தனையா?'' என்றாள். உடனே அவளுக்கு மூத்தவள் ''போ! போ! பைத்தியக்காரி, பதத்தில் என்னஇருக்கிறது. அதைப் பக்துவமாய்ச் செய்தார்களே அவர்கள் கைப்பாகத்தி லிருக்கிறது'' என்றாள். பின்னும் பெரியவள், ''அப்படியல்ல அது பதத்திலுமில்லை, கைப்பாகத்திலுமில்லை, அது காலத்திற்கேற்ற பண்டம் ஆகையினால் அது இன்பகரமா யிருக்கிறது'' என்றாள். அப்போது போஜனத்திற்கு வந்த தலையாரி, இவர்கள் பேசுவதைத் தெருவாயிலில் நின்று கேட்டான். அடடா!! என்ன யிது!! நானே ஹரிஜனனாயிருந்தும் எருமை தின்கிறதில்லை; அதிலும் தோலாம், பதமாம், காலத்துக்கேற்ற பண்டமாம். இதை வற்றல் போட்டு வைத்துக்கொண்டு சாப்பிடுகிறார்களோ! தெரியவில்லையே! அரண்மனையிலா இப்படி நடக்கும்? நான் சாப்பிடப் போனால் எனக்கும் அதைத் தானே வைப்பார்கள். சீ! எனக்குச் சாதம் வேண்டாம் என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு, தன்னிருப்பிடத்திற்குப் போய் படுத்துக்கொண்டான். மறுநாள் காலை தாதிகள் சென்ற இரவு தலையாரி வந்து சாப்பிடவில்லை என்றார்கள். அந்த சமயம் ராஜா அந்தப்புரத்தி லிருந்தார். உடனே மந்திரியை அழைத்து, ''என் தலையாரி சாப்பிடவில்லை'' என, மந்திரி தலையாரியை விசாரிக்க. தலையாரி, இரவு மூன்று ராஜ ஸ்திரீகளும் பேசிக்கொண்டதைச் சொன்னான். உடனே மந்திரி நடந்த சங்கதியை அரசனிடம் தெரிவித்தான்.

எப்போதும் சித்தினிஜாதிப் பெண்களுக்கு எவ்வளவு அழகுடைய புருஷன்மார் வாய்த்திருப்பினும் வேறு அழகுடைய புருஷர்களைக் காணும்போது அவர்களுக்குள்ளுதிக்கும் ஒருவித அவாவினால் சொந்த நாயகன்மாரை மறந்து அவர்கள்மேல் ஆசைப்படும் ஒரு கெட்ட சுபாவமுண்டாம்.

அரசன் பிரமித்து, மந்திரி! "ஏன் அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டார்கள். அதன் அர்த்தம் என்ன" என்று கேட்க, அதற்கு மந்திரி, "அரசே! என்னமோ பெண்கள் பேசிக்கொண்டார்கள். அதை ஏன் நாம் கவனிக்கவேண்டும்" என்றான்.

அரசன்:—மந்திரி! வேறு யாராவது பேசிவிட்டால் நாம் விசாரிப்போமல்லவா, ஆகையினால் இதையும் கண்டறியவேண்டும். அரண்மனையில் நடந்ததென்று, இதை விட்டுவிடக் கூடாது. ஆகையால், இதை யாவருக்கும் தெரிவித்து, ஒரு சபை கூட்டி, இவர்களை அழைத்து வந்து இதன் அர்த்தம் யாதெனக் கேட்கலாம் என்றான்.

ஃ

உடனே மந்திரி இதைப்பற்றி யாவருக்கும் தண்டோரா போடச் செய்து, அதற்குண்டான ஏற்பாடுகள் செய்துவிட்டு. அரச பத்தினிகளிடம் வந்து சங்கதி தெரிவிக்க, அதற்கு அவர்கள் ஆஹா! ஆக்ஷேபணையின்றி விவரிக்கிறோம் என்றார்கள். ராஜசபையில் யாவரும் நிறைந்திருந்தனர். ஒரு பக்கம் திரைவிடப் பட்டிருந்தது. அங்கிருந்தவர்கள் ராஜஸ்திரீகள் என்ன சொல்லப் போகிறார்களோ என்று எதிர்பார்த்திருந்தனர்.

ஃ

அப்போது இளைய அரசி திரையை நீக்கி வெளியில் வந்து நின்று, "அக்கா! நேற்று நான்சொன்னேனே அதுதான் இவைகள்" என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டாள். பிறகு மூத்தவள் வெளியில் வந்து, "அது இல்லையடி யிது; அதுவாய் இருந்தால் கொம்பிருக்கும்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள். மூன்றுமவள் வந்து, "ஆமாம், கொம்பிருப்பதும் உண்டு, இல்லாததும் உண்டு, கொம்பில்லாதவைகளா யிருக்கலாம்" என்று கூறிவிட்டு உள்ளே போய் விட்டாள்.

ஃ

அரசன்:—மந்திரி! என்ன இது, அதிசயமாயிருக்கிறது. அன்றிரவு பேசினதின் சாரம் கேட்டால், இப்போது என்னமோ சொன்னார்களே, எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே" என்றான். உடனே, மந்திரி அரசே! யான் தெரிவிக்கிறேன் கேளும் என்று சொல்லத் தொடங்கினான். அன்றிரவு அவர்கள் கோயிலில் சப்தித்த, மேள வாத்தியத்தைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். அதில், எட்டு வருடத்திய எருமைத்தோல் எவ்வளவு பதமாயிருக்கிறது என்றதால், தோலினால் செய்த மேளம் எவ்வளவு இனிமையா யிருக்கிறது என்றார்கள். பிறகு பதத்தில் இல்லை, கைப் பாகத்தி லிருக்கிறது என்றதால், அந்தத் தோலைப் பதம் செய்து மேளமாகக் கட்டினார்களே அதைப்பற்றிச் சொன்னது. மூன்றாவது: பதத்திலுமில்லை கைப்பாகத்திலுமில்லை; காலத்துக்கேற்ற பண்டம், என்றதனால் அதாவது, இந்த நிச்சப்தமான வேளையில் கோயில் ஆராதனை சமயத்தில், மேளம் அடிப்பதால் இவ்வளவு இன்பமாயிருக்கிறது என்றார்கள் என்றான் மந்திரி.

அரசன்:—சரி, இப்போது அவர்கள் மூவரும் சொன்னது என்ன?

மந்திரி:—அதையும் தெரிவிக்கிறேன் கேளுங்கள். முதலில் நான் சொன்னேனே அதுதான் இவைகள் என்றதால், நாம் பேசிக்கொண்டதின் சாராம்சம் அறியாது அரசன், இதற்காக ஒரு சபை கூட்டினாரல்லவா?

அது இவர்களுக்கும் தெரியவில்லையே. ஆகையால் நான் சொன்ன எருமைகள்தான் இவர்கள், என்று அர்த்தமாகிறது. இரண்டாவது சொன்னது, அதுவாய் இருந்தால் கொம்பிருக்குமே என்றது; எருமையானால் கொம்பிருக்குமே என்றார்கள். மூன்றாவது கொம்பில்லாததும், இருப்பதும் உண்டு; கொம்பில்லாதவைதான் இவர்கள் என்றதினால் கொம்பில்லாதது கழுதை, ஆகையால் இவர்களை சமுதையாயம் வைத்துக் கொள்ளலாம் என்றார்கள் என்று மந்திரி விளக்கினான். இதுதான் கதை. அப்புறம் ராஜா என்ன செய்தாரோ, சபை எப்படிப்போச்சோ நமக்குத் தெரியாது.

R. கோமளவல்லி அம்மாள்

சம்ஸ்கிருத பண்டிதர்களென்றும், மற்றும் பல பட்டதாரிகளென்றும் பெரிய பெயர் படைத்துவிட்டதினாலேயே மடமடவென்று கற்பனைகள் செய்யவும், புத்தி நுட்பம் உணர்த்தி எழுதவும் கூடுமானதாகிவிடுகிறதா? படிப்பு வேறு; தானே சிந்தித்து எழுதுகிற கூர்மையான அறிவு வேறு. எத்தனையோ பண்டிதர்களும் பட்டதாரிகளும் எழுதிய பல விஷயங்களைப் பத்திராசிரியர்கள் பிரசுரியாமல் குப்பைத் தொட்டியில் போடுகிறார்கள்.

எவ்வழியிலும் சிக்கல்.

மனைவியை யிழந்த ஒருவன் மாமன் பெண்ணையும், தமக்கையின் பெண்ணையும், வேறு ஆறு இடத்துப் பெண்களையும் விவாகத்திற்காக ஆராய்ந்துவிட்டு, ஒன்பதாவதாக வேறோரிடத்தில் மண முடித்து வாழ்க்கையில், அவள் வாய்ப்பட்டியும் விசுவாசமற்றவளும் எதிர்ப்புக்காரியுமாய் இருந்ததைக் கண்டு, இவளைவிட வேறு இடங்களில் பார்த்த பெண்ணை மணந்திருக்கலாமே என்று கலங்கினான். வேறிடத்தில் இவன் பார்த்த எட்டுப் பெண்களும் அற்பாயுளுடன் மடிந்துபோக, அவர்களை மணந்திருந்தால் தான் ஏங்க நேர்ந்திருக்குமே, அதைவிட இப்பட்டியுடன் வாழ்வது மேல்தான் என்று சித்தம் சமாதானமானான். நல்ல உறவின் பெண்ணையடைய விரும்பி எட்டுப் பெண்களில் ஒன்றை மணந்திருந்தால் அங்கு அற்ப ஆயுள்! அன்னியப் பெண்ணை மணந்ததில் அவள் பட்டி! எவ்வழி செல்லினும் சிக்கலா? என் செய்ய?

நொந்துபோன ஒரு நேசனைப் பார்த்து "ஐயோ பாவம், உனக்கிப்படியெல்லாம் நேர்ந்துவிட்டதா? மிகப் பரிதாபம்" என்று இவ்வாறு வாய்ப்பேச்சு மாத்திரம் பேசுவார்களன்றி, தங்களால் செய்யக்கூடிய அளவுக்காவது ஒரு உபகாரமுஞ் செய்யமாட்டார்கள்.

சில பெண்களின் ஈனப் போக்கு.

சில பெண்கள் பிறருக்கோ, தம் கணவனுக்கோ போஜனம் இட்டுவிட்டு அவர்கள் உண்டெழுந்தபின் அவர்கள் இவ்வளவு புசித்தார்கள், சட்டிக் குழம்பும் அப்படியே அவர்களுக்கு வேணும். எவ்வளவு வைத்தாலும் தின்று விடுவார்கள் என்று மறைவாயும் நேரிலும் சொல்லிக் காண்பிப்பார்கள். புசித்துக் கொண்டிருக்கும் நடுவிலேயே குத்திச் சொல்லியும் காண்பிப்பார்கள். சமைத்ததில் பாதியைப் புருஷன் இலையில் அப்படியே அவனுக்காகவே வைத்ததுபோல் வைத்துவிட்டு, தங்களுக்காக இலையில் பாக்கியை வைத்துப் போகட்டுமென்று எண்ணுவார்கள். ஏதோ தங்களின் இலையில் வைத்ததைப் புசித்து எழுந்திருப்பதை விட்டு, இலையில் வைத்ததிலே மனைவிக்கென்று வேறே பங்கிடுகிறது கஷ்டமாயிருக்கிறதென்பதாக அவர்களே தங்கள் மனைவிக்கு வாய் விட்டுத் தெரிவித்துவிடுவதுமுண்டு. அது முதல் தங்கள் இலையில் வைத்ததனைத்தையும் புசித்துக் காலி செய்து விடும் வழக்கத்தைக்கொண்டு விடும்போது, இந்த உத்தம பத்தினிகளும் இனி தங்கள் பங்குக்கு இலையில் வைக்கப்பட்டிராதென்பதைக் கண்டுகொண்டு, சமைத்ததில் பாதியை முன்போல் வைக்காமல், எவ்வளவு ஒருவருக்கு வைக்க முடியுமோ அவ்வளவு வரைக்குமே வைத்துவிட ஆரம்பிக்கிறார்கள்.

ஃ

புசிக்க வரும் வீட்டுக்காரன் தன் இலையில் வைத்ததை அந்த சமயம் புசிக்க முடியாமலிருந்து, அதை மற்றொரு வேளைக்கு எடுத்து வைத்திருந்து உண்ணலாமென்றால், அது திரும்பவும் கிடைக்குமோ கிடைக்காதோ என்று சிந்திக்கவேண்டியதாகி, சரி, இலைக்கு வந்ததைப் புசித்து எழுந்து விடுவோமென்று முற்றிலும் உண்பவனாகிறான். இதற்குத்தகுந்தபடி மனைவியின் ஈன குணங்களும் இருக்கின்றன. சில பெண்கள் பிறருக்கு இடுவதென்றால் எவ்வளவு வேண்டுமானாலும் இட்டு அதில் தங்களுக்கு ஒரு கௌரவம் முளைப்பதாகப் பெருமைப்படுகிறார்கள். அந்த விதமாகத் தம் கணவனுக்கு இடுவதென்றால் கை சுருங்குகிறது. அப்படா, இப்படித் தின்கிறானே, இவ்வளவு உண்ணுகிறானே என்று தோன்றிப் பெருமூச்சு விடுகிறார்கள்.

ஃ

“மற்றவர்கள் எவ்வளவு தின்றார்கள், எப்படிப் புசித்தார்கள் என்

பெருமை படைப்பவர் கல்விச் செல்வத்தினாலும் பற்பல கௌரவதைகளினாலு மாத்திரமன்றி, இயல்பாய் மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய எல்லாவற்றாலும் பெருமைகொள்ள ஏதுவிருக்கிறபடியால், கேவலம் ஓரேழையுங்கூட தனக்கருளப்பட்டிருக்கும் தாய்தந்தை பாக்கியம் புத்திரபாக்கியம் இவைகளைக் குறித்தாவது பெருமை பாராட்டுகிறவனாயிருக்கிறான்.

றெல்லாம் கவனிக்க உங்களுக்குப் புத்தி போகுமே தவிர, நான் தின்றேனே, எனக்கு உண்ணுவதற்கு சட்டியில் இருக்கிறதா? என்பதைப் பற்றி நீங்கள் கவனிக்க மாட்டீர்கள்; சமைத்ததை எல்லாருக்கும் வைத்து விட்டு வெறுஞ்சோற்றை விழுங்குகிறேனே! என்னைக் கவனிக்கக் காணோமே" என்று மனைவி, புருஷன் இலையில் புசித்துக்கொண்டிருக்கும் போதே சிடுசிடு என்று பட்டுக் குத்திக் காட்டுகிறாள். அதற்குக் கணவன் "ஏதோ நான் செலவிட்டு வீட்டிற்கு வாங்கி வந்து போட முடியுமே தவிர, நீ எவ்வளவு தின்றாய், தின்னவில்லை. என்று கவனிப்பது என் வேலை யல்ல; நீயே சமைத்து நீயே பரிமாறும்போது உனக்கு வேண்டியவற்றை நீயே எடுத்து வைத்துக் கொண்டு மற்ற பங்கை அளவறிந்து எல்லோருக்கும் இடவேண்டுமே யொழிய, நான் சட்டிபானைகளைத் தடவிப் பார்த்து உனக்கு வைத்துக் கொண்டிருக்கிறாயா? என்று ஆராய்வது என் வேலையல்ல. மேலும், பகலில் ஒரு பதார்த்தம் வைத்து, அதில் கொஞ்சம் எடுத்து வைத்திருந்து இரவில் உண்ணும்போது மறுபடி இலையில் வைக்கிறாய். இவ்விதம் பகலில் சமைத்ததை ஒரு மிச்சம் எடுத்துத் தனிப்பட வைத்திருக்கிறாயென்பது எனக்குத் தெரியுமா?—அதையெல்லாம் நான் கவனிப்பது ஒழுங்காமா? அப்படிக் கவனிக்கப் புகுந்தால், "இவ்வளவு பிசினறித்தனமாய் சட்டிக்குள் ளெல்லாம் கையிட்டு ஆராய்வதை எங்கும் கண்டதில்லையே! நானு அவ்வளவும் தின்று விடுகிறேன்? ஏன் இப்படிச் சமையலறைக்குள்வந்து ஆக்கியதையெல்லாம் அளந்துபார்த்து ஆராயவேணுமோ" என்று நீயே பழித்துப்பேசத் தொடங்குவாய். ஏதோ புருஷர்கள் தங்கள் இலையில் வைத்ததை உண்டெழுந்து போவார்களே தவிர, தன் மனைவிக்கு உண்ணச் சட்டியில் இருக்கிறதா என்று கவனிப்பது அவர்களின் வேலையல்ல. அன்றன்று சமைத்ததிலே இவ்வளவு வெளியிலே இலையில் இந்த வேளைக்குப் பரிமாறவேண்டும், இவ்வளவு தங்களுக்கென்று வைத்துக்கொள்ளவேண்டும், இவ்வளவு மற்றொரு பொழுதுக்கென்று எடுத்து வைக்கவேண்டுமென்று அளவிடுவதும் எடுத்து வைப்பதும் சமைத்த பெண்களின் வேலையே தவிர, இவற்றை யெல்லாம் கவனிப்பது இலையில் உட்கார்ந்துண்ணும் புருஷனின் வேலையல்ல. ஒரே பந்தியில் உண்ணும்போது ஒருவருக்குக் கொஞ்சமாகவும், மற்றவருக்கு அதிகமாகவும் வைத்திருந்தால், அதை வீட்டுப் புருஷன் பார்க்கும்போது, கொஞ்சமாய் வைத்த இடத்தில் இன்னும் கொஞ்சம் வைக்கும்படி அந்த சமயம் சொல்லக் கூடுமே தவிர, அதுவும் பந்தியில் உட்கார்ந்து மற்றவரின் இலையைப் பார்த்தபோது சொல்லும் படியாய் நேரிடுமே தவிர, சமையல் அறைக்குள் உண்பவர்களை யெல்லாம் இப்படிக் கவனித்துக் கொண்டிருப்பதும் புருஷர்களின் வேலையில்லை. விருந்தினர்களாக வந்தவர்களுக்கு வீட்டுப் பெண்கள் பரிமாற, அவர்கள் புசித்து எழுந்திருக்க, அவ்வளவோடு அந்த விஷயம் முடியுமேயன்றி, அவர்

கடவுள் மற்றெல்லாப் பிராணிகளுக்கும் பால் மடியை அடிவயிற்றினின்று அமைத்திருக்க, ஸ்திரீகளுக்கு மாத்திரம் ஸ்தன்னியங்களை இருதயத்தின் சமீபத்தில் வைத்திருக்கிறார். ஏனெனில், குழந்தைக்குப் பால் ஊட்டும்போது கூடவே அன்பும் அவள் இருதய தடாகத்தினின்றும் சுரக்கும்படியாக அதை அடிக்கடி தட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்றுதான்.

களுக்கு வாழைக்காயில் எத்தனை துணுக்குகள் வைத்தது, முருங்கைக் காயில் எத்தனை யிட்டது. கத்தரிக் காய் பஜ்ஜியில எவ்வளவு பலம் போடப்பட்டது, எத்தனை கரண்டி நெய் ஊற்றியது என்று ஆராய்வது வீட்டுக்காரனின் வேலையாகாது. ஏதோ இவ்வளவுக்காவது வீட்டுக் குடித்தனம் கௌரவமாய் மானமாய் நடக்கிறதே என்று திருப்தி படுவதை விட்டு என் இந்த விசுவாசங்கெட்ட கோணல் போக்கோ?" என்று கணவன் கூறி ஆத்திரப் படுகிறான். மனைவி முகஞ் சுழித்துக்கொள்கிருள். இத்தகைய ஈனகுணப் பெண்டுகளுடன் கூடிவாழத தலைவிதி நேர்ந்திருப்பதும் பூர்வ கர்மபலன் தான் போலும்! இன்னேர் திருந்துவதும் உண்டா? அது இந்த ஜன்மத்தில் எது?

வாய்மட்டும் திறப்பதில்லை.

நமது வீட்டுக்கு ஒருவர் வருகிறார். பல நாள் இருக்கிறார். சந்தோஷ முகமே காட்டுகிறோம் அவரும் திருப்தியுடன் இருக்கிறார் ஆனல், அவரிடம் நாம் வாய்மட்டும் திறப்பதில்லை. ஏதாவது பேசினல், எந்த வார்த்தையில் என்ன தப்பு வருமோ, அதிலிருந்து என்ன மனஸ்தாபம் ஏற்படுமோ வென்று அஞ்சி மௌனமாய் இருந்துவிடச் செய்கிறது. வந்தவர்களும் நமது ஜாக்கிரதையைத் தெரிந்து கொண்டு மௌனமாகிறார்கள்.

நொந்திருப்பவரை நோக வைப்பதா ?

ஒருவர் துயரத்துக்கு ஆளாகித் தவிக்கையில், அவர் முன்பு செய்த தவறுகளையும் குற்றங்களையும் இப்பொழுது நினைத்துப் பார்ப்பதும், பிறரிடம் அவற்றைச் சொல்லிப் பழிப்பாய்ப் பேசித் தாழ்த்துதலும் மானுஷீகத் தன்மையாகாது. ஒரு பெண் தன் கணவனை இறக்கக் கொடுத்துத் தவிக்கையில், முன்பு தன் கணவனை அவள் கொடுமையாக நடத்தி வதைத்தவள் என்று தூற்றுதல் தர்மமல்ல. அந்த சமயம் தேறுதல் கூறுவதுதான் ஜீவகாருண்ணியமே யன்றி, பழைய சங்கதிகளை இழுத்துப் பேசுவது வெந்த புண்ணில் வேல் பாயவிடுவதையொக்கும். மேலும், அவ்வித நடத்தை இரக்கமற்ற நீசத்தனமான மௌடீகமுமாகும்.

நிற்குமோ, நடக்குமோ என்றிருக்கிற ஒரு தொழிற்சாலையில் குமாஸ்தா தேவை யென்ற விளம்பரத்தில் 200—ரூபா ஜாமீன் கட்டவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது இரண்டு மாதம் குமாஸ்தாவுக்கு சம்பளம் தந்து, மூன்றாவது மாதத்தில் தொழிற்சாலையை மூடிவிட்டு ஜாமீன் தொகையை விழுங்கிவிட்டால் என்ன செய்வது ?

பணத்தின் லீலா விநோதம்



"பணமே உன்னால் என்ன குணமே" என்று ஓர் பெரியார் பாடியுள்ளாராம். அவரது உள்ளக் கருத்து எவ்வாறாயினும் லௌகீக வாழ்வில் பணத்தின் குணம் பலதிறப்பட்டதானதால் பணத்தின் பெருமையும் ஒப்பற்றதாகும். பணக்காரர்களிடமுள்ள பல துர்க்குணங்களையும் மறைப்பதல்லாமல், அவர்களிடம் பல நற்குணங்கள் அமைந்திருப்பதாகப் பறை சாற்றுவதில் பணத்தைத் தவிர மற்றெவருக்குத் தான் நிபுணத்துவம் உண்டு? அதே போல், ஏழைகளிடமுள்ள பல நற்குணங்களையும் வெளியே தெரியவிடாமல் மறைத்து, அதற்குப் பதிலாக பல துர்க்குணங்கள் அவர்களிடம் அமைந்திருப்பதாகப் பிரசாரம் செய்வதில் பணத்திற்கு நிகர் உண்டா? ஆகவே, துர்க்குணக் களஞ்சியங்களான, ஆண் பெண்பாலாரது ஆபாசங்களை மறைக்கவும், நற்குணசீலர்களது நன்னடக்கைகளை மறைத்து அவர்கள்மேல் அபாண்டப்பழி சுமத்தவும் பணத்தினால் சாத்தியமாகும் என்று ஏற்படுகிறது அல்லவா? அதை விளக்கும் சில குறிப்புகளைக் கீழே காண்க.

ராமரத்தினம் B. A; L. T. மாதம் 150 ரூபாய் சம்பளத்தில் ஓர் ஆசிரியர். அவரது சொந்த ஊரிலிருந்து 4-ரூபாய் ரயில் சார்ஜில் செல்லவேண்டியதான ஒரு நகரத்தில் அவருக்கு உத்தியோகம். சொந்த ஊரில், மின்சார விளக்கு, விசிறி, வசதிகளுடன் கூடிய ஓர் மூன்றடுக்கு மாடி வீடு இருப்பதுடன், வருமான வரி நீங்கப்பெற்ற (50,000) ரூபாய் ரொக்கம் 'பாங்கி'ல் தூங்கிக்கொண்டிருக்கிறது. தவிர, மாதா மாதம் மேல் வரும்படி 50 ரூபாய்களுக்குக் குறையாது. வீட்டில் இவரது இளைய மனைவியான விசாலாக்ஷியும் அவளுக்குத் துணையாக அவளது தாயாரான நாகம்மாளும் தான் இருப்பவர்கள். விசாலாக்ஷி ஏழைக்குடியில் பிறந்தவள். ஆயினும் கணவனது பணம், படிப்பு, பதவி முதலியவைகளை தனது இளமை அழகு புத்தி, இவைகளால் ஈடு செய்த 20-வயதுள்ள விசாலாக்ஷியும், 40-வயதுள்ள ராமரத்தினமும் பொருத்தமுள்ள தம்பதிகளாகவே விளங்குகிறார்கள். எனினும், ஐயரது பரம தரித்திர சுபாவமும், சிடுசிடுப்பும் ஒன்று சேர்ந்து விசாலாக்ஷியைத் தீயவழியில் செலுத்தியதுடன், நாகம்மாளையும், வீட்டில் உள்ள சாமான்களை ஒன்றுக்குப் பாதி சிறவாடு விற்கவும், அப்பளாம் வடாம் இட்டு விற்கவும் தூண்டிவிட்

தகப்பனுடைய பக்ஷம் நன்னடக்கையை மாத்திரம் சார்ந்திருக்கிற பக்ஷம். பிள்ளை நடக்கை கெட்டவழியாயின் அவனைச் சத்துருவாகப் பகைக்குங் குணம் தகப்பனுக்குண்டு. ஆனால் தாய்க்குரிய பக்ஷமோ அப்படிப்பட்டதல்ல. பிள்ளை நன்னடக்கையுள்ளவனாயிருந்தாலுஞ் சரி, துர்நடத்தையுள்ளவனாயிருந்தாலுஞ் சரி அன்றைப்பொழுது அவன் உருப்பெற்றபோதே கூட உற்பத்தியான பக்ஷத்தை அவனைவிட்டு நீக்காள்.

டன. விசாலாக்ஷியின் ஆசை நாயக னது மனைவியின் மூலம்தான், நாகம் மாளது திருட்டுத்தனமான வியாபா ரம் நடந்து வந்தது. தாயாருக்கும் பெண்ணுக்கும் ஒரே வீட்டில் பரிச் சயம் ஏற்பட்டுவிட்டபடியால், காலை 10-மணிக்குப் பள்ளிக்கூடம் செல் லும் ராமரத்தினம் மாலை 5-மணிக் குத் திரும்பிவரும் வரையிலும் அவர்கள் பாடு வேட்டைதான். இரு வரும் தங்கள் தங்களது இஷ்டபூர்த் திகளை அடையப்பெறுவது சுமார் இரண்டு வருஷங்களாகவே நடந்து வருகிறது. ஸர்வக்ஞன் என்று தன்னை விளம்பரப்படுத்திக்கொள் ளும் ராமரத்தினத்தைத் தவிர, மற்ற அதே தெருவில் வசிக்கும் அவரது நண்பர்களுக்கும் ஸகா ஆசிரியர்க ளுக்கும், பூரா விஷயங்களும் நன்று கத் தெரியும். அவர்கள் அவரை நேரில் காணும்பொழுது பிரியமாகச் சம்பாஷித்து மறைவில் அவருடைய இல்வாழ்க்கையின் ஆபாசங்களைக் குறித்துக் குதூகலமாகப் பேசிக் காலங்கழிப்பார்கள்.

விசாலாக்ஷியின் பால்யகாலத்துப் பள்ளித் தோழியும், சமவயதினளும் ஆன ஜானகியும் அதே ஊரில்தான் வசிக்கிறாள். அவளது கணவனுக்கு மாதம் 20-ரூபாய் சம்பளத்தில் கடை யில் குமாஸ்தா வேலை. ஒரே ஊரில் பிறந்து வளர்ந்து ஒரே ஊரில் வாழ்க் கைப்பட்ட இருவரும், உத்தியோக சம்மந்தமாகவும் ஒரே ஊரில் வசிக்க நேர்ந்ததால், அவ்வூருக்கு வந்தது முதல் ஜானகியும் விசாலாக்ஷியும் நெருங்கிப் பழகினதில் ஆச்சரிய மில்லை. தாயும் பெண்ணும் சேர்ந்து செய்யும் காரியங்களை அறிந்த ஜானகி அதிக வருத்தப்பட்டு அவர்களை நல் வழியில் திருப்பி குடும்ப கவுரவத் தைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடு பட்டாள். தான் நேரில் விசாலாக்ஷி யைக் கண்டு, வெளியில் ஆண் பெண் கள் பலரும் அவளைப்பற்றி அவதூறா கப் பேசிவருவது தன் மனதை வருத் துகிறதென்றும், ஆகவே, அவளை திருத்திக்கொண்டு அவதூறுக்கு வழி இல்லாத முறையில் நடந்துகொள்ளு மாறும் வற்புறுத்தினதுடன், தன் கணவனைக்கொண்டு விசாலாக்ஷியின் கணவனுக்கும் விஷயங்களை அறிவிக் கச் சொன்னாள். பிறர் விஷயங்களில் தலையிட்டுக்கொள்ளுவதில் ஏற்படும் சங்கடங்களை நன்கு உணர்ந்த ஜான கியின் கணவன், பல இரவுகள் யோசனை செய்து முடிவில் அனுதா பத்தின் காரணமாக ஓர்நாள் விஷயங் களை ராமரத்தினத்திடம் ஸூசகமா கக் கூறிவிட்டான்.

அவரும் இதைப்பற்றித் துப்பு துலக்கப் புறப்பட்டார். ஆனால் அவர் அனுஷ்டித்த முறை மோசமானது. விசாலாக்ஷியின் ஆசை நாயகனிடம் சென்று, "என்ன ஐயா, எனது மாமி யார் அப்பளாம் வடாம் இட்டு விற்கி றாளாமே, உமக்குத் தெரியுமா? இன் னும் நான் வீட்டிலிராத நேரங்களில், என் மனைவி அடிக்கடி இங்கு வந்து போகிறாளாமே? இவைகளின் உண்மை என்ன?" என்று கேட்டார் ராமரத்தினம். நாவன்மை படைத்த

அறிவினும் உயர்ந்தது நற்குணம். அந்தக் குணமில்லாத படிப்பாளிகளே அதிகம். படித்துப் பரீக்ஷை தந்தவரிற் பலர் கேவலம் உலக சம்பந்தமான காரியங்களிற் புகுந்து உள்ளம் ஒன்றும் உடல் ஒன்றுமாகக் காலம் கழிக்கக் காண்கின்றோம். எவ்வளவோ மோசக்காரர்களாகவும் நயவஞ்சகர்களாகவும் இருப்பதைப் பார்க்கையில் இந்தகையோர் கற்ற கல்வியால் உலகுக்கு என்ன பிரயோஜனம்?

அவனும் கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு உபயோகப்படுத்திக்கொண்டு "ஒன்றுமே கிடையாதே, எல்லாம் புதுமையாக இருக்கிறதே. யார் சொன்னது இப்படிப்பட்ட வார்த்தைகள்? ஒரு பிசகும் நடக்கவில்லையே" என்று ஆணித்தரமாக அடித்துப் பேசி, பதில் சொன்னதுடன் நடந்த விஷயத்தையும் விசாலாக்ஷிக்குத் தெரியப்படுத்திவிட்டான். விசாலாக்ஷியும் தன் பொய்யுரைகளால், தன் கணவனுக்கு ஜானகியின் புருஷனிடத்தில் வெறுப்புண்டாகுமாறு செய்துவிட்டாள். விசாரணையில திருப்திகொண்ட ராமரத்தினமும், மறுநாள் முதற்கொண்டு, தன் மனைவியை ஜானகியுடன் பேசவேண்டாமென்று தடுத்துவிட்டதுடன், தானும் ஜானகியின் புருஷனுடன் பேசுவதை நிறுத்திவிட்டார்.

பரம ஏழைகளான ஜானகி தம்பதிகள் பெரியவம்புக்காரர்களென்றும், விசாலாக்ஷியும் அவளது தாயும் மகா உத்தமிகளென்றும் அவரது தீர்மானம். பணத்தால் அவர்களது தீய ஒழுக்கம் மறைக்கப்பட்டது. ஏழையின் சொற்களுக்குப் பயன் இல்லை. தாயும் பெண்ணும் முன்னிலும் பன்மடங்கு மும்முரமாக தங்கள் தீய ஒழுக்கத்தில் ஈடுபடுகிறார்கள். ராமரத்தினத்திற்கு அவர்களிடம் கடுகளவும் ஸந்தேகம் கிடையாது பணத்தின் பெருமைதான் என்னே!

II

கிருஷ்ணையர் மாதம் 60-ரூபா சம்பளத்தில் ஓர் உத்தியோகஸ்தர். அவருக்கு 10,000 ரூபா ரொக்க லேவாதேவியும், வருஷத்தில் 200 கலம் நெல் விளையக்கூடிய நிலங்களும் ஏற்பட்ட சொத்தாகும். குழந்தைகளுக்கும் குறைவில்லை. அவர் வீட்டிற்கு எதிர் வீட்டில் 10-வேலி மிராசுதாரரான வீரப்பிள்ளையும், பக்கத்து வீட்டில் பில் கலெக்டர் ரங்கையரும் வசித்து வருகிறார்கள். ரங்கையர் வீட்டுப் பெண்கள் குழந்தைகள் அடிக்கடி கிருஷ்ணையர் வீட்டிற்கு வந்து அவரது மனைவியுடன் பேசிக்கொண்டிருப்பதுண்டு. பக்கத்து வீட்டை ஒரு நாளும் மதித்துக் கவனியாத கிருஷ்ணையரின் மனைவியோ, எதிர் வீட்டிற்கு அடிக்கடி போய் வீரப்பிள்ளையின் மனைவியினிடம் பேசிக்கொண்டிருப்பதுண்டு காரணம் இருவரும் பணத்தில் மிதப்பவர்கள் என்ற எண்ணம் இருவருக்கும் ஏற்பட்டிருப்பதே. கிருஷ்ணையர் வீட்டுக் குழந்தைகளும், வீட்டில் இராத மற்ற நேரங்களில், வீரப்பிள்ளையின் வீட்டில்தான் விளையாடுவார்கள்.

ஒரு நாள் ஊரில் திருவிழா. எவ்வீட்டிலும் கும்பல். வழக்கம்போல் கிருஷ்ணையர் குழந்தைகள் நகைகள் அணிந்துகொண்டு எதிர் வீட்டில் வந்திருந்த விருந்தினர்களுடனும் குழந்தைகளுடனும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அதே தினம் ரங்கையர் வீட்டிற்கு வந்திருந்த ஏழை ஸ்திரீ ஒருத்தி கிருஷ்ணையர் வீட்டிற்கு வந்து குழந்தை

ஒருகாலத்தில் ஜவுளிக்கடைகள் பிரபலமாயிருந்த இடத்தில் மற்றொரு காலம் தையற்கடைகள் நிரம்பிவிடுகின்றன. புஸ்தகக் கடைகளிருந்த இடத்தில் சில்லரைக் கடைகள் தோன்றுகின்றன. வியாபாரங்கள் எத்தனையோ விதங்களில் மாறிப்போகின்றன. பஸ்கள் வந்துவிடவே ஜட்காவண்டிக்காரர்களின் ஜீவியம் பெரும்பாலும கெட்டுவிட்டது. இவ்விதமே ஒவ்வொரு பிழைப்புக்கும் எதிர்ப்புறம் அழிவும் ஏற்பட்டுக் கண் கலங்க வைக்கிறது.

களிடம் குலாவிக்கொண்டிருந்தாள். குழந்தைகள் எதிர் வீட்டில் விளையாடினது காலையில். பக்கத்து வீட்டு ஏழைப்பெண் கிருஷ்ணையர் வீட்டிற்கு வந்தது மாலையில்; குழந்தையின் கையிலிருந்த மோதிரம் ஒன்று காலையிலேயே மறைந்து விட்டதென்ற செய்தி பெற்றோர்களுக்குத் தெரிந்து எங்கும் தேடினர். அகப்படவில்லை. அதற்கு மறுநாள் கிருஷ்ணையர் பில் கலெக்டர் ரங்கையரைப் பார்த்து "உமது வீட்டிற்கு நேற்றையதினம் வந்திருந்த பெண் என் குழந்தையின் மோதிரத்தைத் திருடிவிட்டாள். அதைத் திரும்ப வாங்கிக் கொடுக்க முடியுமா?" என்று கேட்டார். ரங்கையரோ, அவள் அம்மாதிரி செய்யமாட்டாளென்று கூறி ஸமாதானப்படுத்தினர். ஆயினும், பலனில்லை. "குழந்தைகள் வேறெங்கும் செல்லவில்லை. காலையில் எதிர்வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மாலையில் உங்கள் வீட்டு விருந்தினப்பெண் இங்கு வந்திருந்தாள். எதிர் வீட்டில் ஒருவரும் எடுக்கமாட்டார்கள். ஆனதால் அந்தப் பெண்தான் எடுத்திருக்கவேண்டும். போனால் போகிறது" என்று பதில் சொல்லி, வந்திருந்த ஏழைப்பெண்ணைத் 'திருடி' என்று பட்டம் சூட்டிவிட்டார் ஸ்ரீமான் கிருஷ்ணையர். திருட்டுப்போனது ஓர் இடத்தில்! பழி சுமத்தப்பட்டது மற்றோர் இடத்தில்!! பணத்தினால் திருட்டு மறைக்கப்பட்டது, பணமின்மையால் நற்குணம் மறைக்கப்பட்டுத் திருட்டுப் பட்டமும் கிடைத்தது. இவைகளெல்லாம் பணத்தின் திருவிளையாடல்கள் என்பதைத் தவிர வேறென்னென்று சொல்வதோ?

L. தருசாமி ஐயர்.

தனக்குச் சரியென்று தோன்றுகிற விஷயத்திலே பிடிவாத புத்தி காட்டுவது பிசகாகாது. இப்பிடிவாத குணம் நல்ல மனசாக்ஷியுடைய சிலருக்குத்தான் அமையும். பிடிவாத குணம் பொதுவாகத் துன்பத்தை விளைக்குமென்று ஒருபுறம் கருதினும், மனச்சாட்சிக்குச் சரி என்று ஏற்படுகிற காலத்தில் பிடிவாத குணம் இல்லாமற் போனால், பிரயோஜனமில்லை. யுத்த களத்தில் கடும் போர் புரியும் வீரனுக்குப் பிடிவாத குணம் இல்லாமற் போனால், அவ் வீரனுக்குத் தைரியமும் பலமும் உண்டாகாததுபோல், பொது விஷயங்களில் பிடிவாத குணமில்லாமற் போனால் காரியங்கள் நன்கு நடைபெறாது.

பெண் பள்ளிக்கூடத்து உபாத்தியாயனிகள் வெகு பொறுமைசாலிகளாய் எதையும் சகித்துக்கொண்டுபோக வேண்டியிருக்கிறது. ஒரு பெண் மூன்றுநாளாகப் பாடசாலைக்கு வராமலிருந்ததற்காக அதைக் கண்டிக்க முடிகிறதில்லை. கண்டிக்கப் புகினோ அந்தச் சிறுமி, நான் என்ன செய்வேன், என் அம்மா மாதவிலக்காய் விட்டது, வீட்டில் நானே சமைக்கவேண்டியிருந்தால் பள்ளிக்கூடம் வரமுடியவில்லை என்கிறாள். அதற்குமேல் அச்சிறுமியை எப்படிக் கோபிப்பது? திடீரென்று 6-வது வகுப்பிலுள்ள சிறுமி பள்ளிக்கூடத்துக்கு வராதிருந்து விடுகிறாள். விசாரிப்பினோ, அவள் புஷ்பவதியாய் விட்டாளென்றும், இனி பள்ளிக்கூடம் வராள் என்றும் தெரிகிறது. பெண் கல்வி பெரும்பாலுமே இவ்விதம் தாழ்ந்த நிலையிலேயே கிடக்கிறது.

ரிச்சர்டின் மனவேதனை.

ஜார்ஜ் மெரிடித்" (George Meridith, எனும் ஆங்கில ஆசிரியருடைய வாக்கு கீழ்வருமாறு:—"அது இரக்கமற்ற வன்னெஞ்சுள்ள பாம்புபோலிருந்தது இளநெஞ்சகத்தை அப்பாம்பு சுற்றி நெருக்கி, கடித்து, கவ்வி, இழுத்து, வெறிகொள்ளச் செய்து பைத்தியக்காரனாக்கிற்று."

களங்கமற்ற நடத்தையும், பளிங்குபோன்ற குணமுமுடைய ரிச்சர்ட்" (Richard) எனும் சிறுவன் வேட்டையாடத் தன் தோழனோடு அயலாருக்குச் சொந்தமான இடத்திற்குச் செல்கிறான். அச்சொந்தக்காரர் ரிச்சார்டினுடைய தந்தைக்கு ஜன்மப் பகையாளி. ரிச்சர்ட்டுக்கு அது தெரியாது. தனது பகைஞனின் குமாரன் தன் நிலத்தில் வேட்டையாட வந்துவிட்டதற்குக் கோபித்து, குதிரைச் சவுக் (ஜாட்டி)யால் அச்சிறுவனை அடிக்கிறான் அந்த அடி களங்கமற்ற அச்சிறுவன்மேல் எப்படி விழுந்தது என்பதை வர்ணிக்கும் வாக்கியமே மேலே குறிப்பிட்டதாகும்.

நிற்க, அந்த அடிபட்ட சிறுவன் பழிக்குப் பழியாகத் தன்னை அடித்தவனுடைய வைக்கற்போரைக் கொளுத்திவிடுகிறான். பாபம்! அச்சிறுவனுடைய சிநேகனே தீயிட்டான் என்று சிறை செய்யப்படுகிறான். உடனே ரிச்சர்ட் தன்னை அடித்தவனிடம்சென்று தானே தீயிட்டதாகத் தெரிவித்துக்கொண்டு தன் நண்பனை விடுவிக்கிறான். இதிலும் ரிச்சர்டின் மனப் பரிசுத்தமே வெளியாகின்றது. மனப் பரிசுத்தமுள்ளவனை எதிர்ப்பது கஷ்டம். அதுபோலவே பிறரது தூஷணைக் கடிதம்—இழிசொல்—முதலியன களங்கமற்ற ஒருவனை எதுவும் செய்யாது.

தோல் உரித்த பழம்.

ஆடைபணிதல் என்பது மனிதர்களுக்கு மட்டுமில்லை. பழங்களும் தங்களின் மிருதுத்தன்மைக்கு ஒரு மேல்காப்பாகவும், ஒரு அழகாகவும் இருக்கத் தமக்கென்று ஒரு மேல் தோலைக் கொண்டிருக்கின்றன. ஒன்றை யனுபவிக்க நினைவு தோன்றுதிருக்கையில், அது மேல்தோலோ, மேலாடையோ அற்று இருந்தால், அது பார்வைக்கு அசங்கிதமாகத் தோற்றுவதான எண்ணத்தை யுண்டாக்குகிறது. தோல் உரித்த வாழைப் பழம் ஒரு பக்கத்தில் கிடந்தால் அது பார்க்க அசங்கிதமாகப் படுகிறது. அதே பழத்தையுண்டு அனுபவிக்க நினைக்கும்போது அந்தப் பழத்தின் மேல் தோலை அச்சமயம்தான் எடுத்துவிடும்போது, அதை உண்ண நினைத்துள்ள ஆவலால், அந்தப் பழம் அவ்வேளை மேல் தோல் இல்லாதிருந்தும் அசங்கிதமாகத் தோற்றப்படாமல் பிரியத்தோடும் அதைப் புசித்து இன்புறும்படியாகிறது ஆவல் இருக்கையில், அனுபவிக்க நினைக்கையில்,மேல் தோல் இல்லாததானது ஒரு அசங்கிதமாகத் தோற்றுவதில்லை. தானே தோலுரித்த வாழைப்பழம் ஒரு அசங்கிதமாகத் தனக்குப் படுவதில்லை. பிறரால் தோலுரித்துக் கிடக்கும் வாழைப்பழத்தைக் காணில் அது அசங்கிதமாய்ப்பட்டு அதை உண்ணவும் மனம் வெறுக்கிறது தோலுடனுள்ள வாழைப்பழம் கற்புடனுள்ள பெண்ணுக்குச் சரி. தோலற்ற வாழைப்பழமோ கற்பழிந்த நங்கைக்கு ஒப்பாகும். தோலுரிப்பவனே அப்பழத்தைப் புசித்து அனுபவிக்கும் நாயகனாகக் கொள்ளுதல் பொருந்தும்.



(கடிதங்களைப்பற்றிய உபந்நியாஸம்.)

"வெண்மை நிறம் ஒன்றிலிருந்து எவ்வளவு விதமான வர்ணங்களை இறக்குகின்றோம்!"

—ஓர் ஆங்கிலப் பெரியார்.

இன்று கூடிய நமது கடையில் பழங்காலத்துப் பத்திராசிரிய கனவானொருவர் விஜயம்செய்து, கடிதங்கள் பரஸ்பரம் எழுதிக்கொள்வதைப்பற்றிப் பேசினார். "நான் ஆசிரியனாகையால் கடிதங்கள் எனக்கு இரண்டு விதங்களில் உபயோகமாகின்றன. ஒன்று எனக்கு வரும் கடிதங்கள்—அதனை எழுதுபவர்களின் குணங்களைத் தெரிவிக்கின்றன. மற்றொன்று; என்னுடைய வியாஸங்களுக்குத் தத்துவ விசாரணையை யுண்டுபண்ணும் விஷயங்களாக உபயோகப்படுகின்றன. சிற்சில சமயங்களில் கடிதம் முழுவதும் உபயோகப்படுவதில்லை. அதிலுள்ள சிற்சில வார்த்தைகள், வாக்கியங்கள் மறைந்து கிடக்கும் என் அறிவைத் தட்டி எழுப்பிக் கூர்மைப்படுத்துகின்றன. என்னுடைய மனோரதமான நவீன உலகத்திலே அந்த வார்த்தைகள் இரத்தினக்கற்களாகப் பொறிக்கப்படுகின்றன. வேறு சில சமயங்களில் என்னைப் புகழ்ந்து எழுதி இருக்கும் வாக்கியங்களை நீக்கிவிட்டு, அக்கடிதங்களின் நடை அலங்காரம் இவைகளை அகற்றி, இயற்கை ரூபத்தோடுள்ள குறிப்புகளை எடுத்து என்னுடைய வியாஸங்களின் நடுவில் என்னுடையதே போல் புகுத்துகின்றேன்.

ஃ

இந்த இரண்டு விதங்களையன்றி மற்றுமொரு முறையில் கடிதம் எனக்கு நன்மையை விளைவிக்கின்றது. கடிதங்களில் எழுதப்பட்டிருக்கும் அங்கலாய்ப்பு, முறையீடு, அன்பு, அளவுகடந்த ஸ்துதி—இவைகளின் சாராம்ஸ வரிகளைப் பொறுக்கி என் பத்திரிகைகளின் அடியில் போட்டு விடுகிறேன். அந்த அடிவரிகள் செய்யுங் காரியங்கள் உங்களுக்குத் தெரியாது. அது குற்றங் குறையுள்ளவர்களின் மனதில் அம்புபோல் பாய்ந்து, இடித்து அவர்கள் செய்வது பிழையென்று உணர்த்துகின்றன.

ஃ

உலகத்திலே பணம் எல்லாரிடத்திலுமேயிருக்கிறது. அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு சிலரிடத்தில் அளவான பொருளும், சிலரிடத்தில் கொஞ்சமான பொருளும் இருக்கும். ஒரு காசேனு மில்லாதவன் உலகத்திலில்லை அது இல்லாதவன் உலகத்தையே துறந்தவன் தான்.

சிலபேர், இரகஸ்யமாக எனக்கு எழுதப்படும் கடிதங்களை இப்படிச் சின்னபின்னமாக ஆக்கி எழுதுபவர்களின் மனோபாவங்களைச் சந்தி சிரிக்க நடுவில் இழுத்துவிடலாமா என்று கேட்கலாம். அவர்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். என் அறிவை உபயோகப்படுத்தி ஒரு முழுக்கடிதத்திலிருந்து சிறு வாக்கியங்களைப் பொறுக்கி எடுத்து, அதனை உபயோகித்தால் அது அதனை எழுதியவர்களின் மனோபாவத்தைக் காட்டாது. என்னுடைய அறிவின் விளக்கத்தையும், அது எவ்வளவு தூரம் படிப்போருக்கு நன்மையைச்செய்யும் என்று எண்ணி அச்சிட்ட என் மனோபாவத்தையும், என் உயரிய நோக்கத்தையுமே காட்டுவதாகும். ஆகவே, அந்த சிறுமணித்திரள்களுக்கு நான் மெருகு எற்றியே உபயோகிப்பதால் என்னை நிந்திக்கமுடியாது. எவ்வளவு அருமையாக அதை எடுத்து என்னால் பிரயோகிக்க முடிந்த தென்பதைக் கண்டு நான் ஒவ்வொரு தடவையும் சந்தோஷப்படுகிறேன். இதை இன்னும் தெளிவுபடுத்த உத்தேசித்துக் கீழே சில உதாரணங்களைக் காட்டுகிறேன்.

ஃ

இதோ பாருங்கள். நேற்று எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

“நீங்கள் நேற்று மாலை வந்தபோது உங்களுடன் பல பெண்கள் சுற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். உங்களின் அரிய பிரசங்கத்தைக் கேட்டு நான் உங்களிடம் ஆசை கொண்டேன். உங்களிடம் அணுகி உங்களை எந்தப் பாசாங்கு செய்தாவது தொட்டுப்பார்க்க ஆசைப்பட்டேன் அப்போது நீங்கள் ஒரு கிரேக்க பழமொழியைச் சொன்னீர்கள். அதைக் கேட்டதுமுதல் என் ஆசை அதிகமாயிற்று.”

ஃ

நான் சொன்ன பழமொழியை அப்படியே கிரேக்க பாஷையில் எழுதிக் கடிதத்தை முடித்திருந்தாள். உடனே என் மனைவிக்குக் கோபம் வந்துவிட்டது. அமர்க்களம்செய்தாள். நான் அந்தப் பழமொழியை மொழி பெயர்த்துக் காட்டினேன். அதன் அர்த்தம் ‘ஒழுக்கத்தைவிடப் பெண்களுக்கு ஆடை ஆபரணங்கள் அழகு படுத்தாது’ என்பதேயாகும். இதைக் கேட்டதும் என் மனைவியின் கோபம் அடங்கிற்று.

ஃ

இந்தக் கடிதம் எவ்வளவு சாரமாக இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியவில்லையா? நீங்கள் எழுதும் கடிதங்களில் வீணே அன்னிய பாஷைகளைப் புகுத்தி எழுதினால் தொந்தரவே விளையும். இவ்விதம் எழுதுவதால் என் நண்பர் பட்ட பாட்டையே அனுபவிப்பீர்கள்.

ஃ

படித்த பெண்களிற் சிலர் மாதவிலக்காகும் காலத்தில் அந்த மூன்று நாளிலும் காலத்தைக் கழிக்க பல புஸ்தகங்களைத் தங்களுக்குத் துணையாக வைத்துக்கொண்டு ஓயாது வாசித்தவாறு இருப்பர். மூக்குப்பொடி போடுவோர் அடிக்கடி பொடி டப்பியில் கைவைப்பதுபோலப் படிப்பில் பிரியமுள்ளவர்களும் எதையேனும் வாசித்தவண்ணம் இருப்பரன்றி வீண்காலம் போக்க சம்மதப்படமாட்டார்கள்.

அன்புள்ள தம்பி,

மங்களம்.

ஐந்தணுச் செலவில் அனுப்பிய நின் திருவுருவம் கண்டு இன்புற்றேன். நின்னை நேரில் காண்பதை விட இது மிக்க அழகியது. நெற்றியில் ஏதுமில்லாத கிறிஸ்துவ வாலிபரத்நமான நின்னை இங்குள்ள ஜான்மேரி விவாகம் செய்துகொள்ள மிகவும் விரும்புகிருள் நீ ஒரு ஹிந்துவென்று அவளுக்கு நான் இன்னமும் சொல்லவில்லை.

அன்புள்ளோன்.

இக்கடிதத்தில் எவ்வளவு பரிமளம் வீசுகிறது. ஹாஸ்யம், மதப்பற்று, தற்கால நாகரீகத்திற்கு ஒரு இடி— இவ்வளவும் அடங்கி இருக்கவில்லையா? 'நீ ஒரு ஹிந்துவென்று சொல்லவில்லை.' என்று முடித்ததால் கிறிஸ்துவர்கள் மதப்பற்று வுடையவர்கள்; ஹிந்துவென்று தெரிந்தால் மதவேற்றுமைக்காகத் தங்கள் காதலைக்கூட மாற்றிக்கொள்ளும் சக்தி வாய்ந்தவர்கள்; பெண் காதல் கொண்டால் உடனே எல்லாம் சாதித்துக் கொள்ளலாம் என்று எண்ணுவது மூடத்தனம்; ஒரு ஹிந்துவாக இருந்தும், கிறிஸ்துவர்கள் தங்கள் மதத்தில் கொண்டுள்ள பற்றுதலைப் பார்த்தாவது உன்மதத்தில் பற்றுவைக்கலாகாதா?—என்ற தத்துவங்களெல்லாம் பொருந்தி இருக்க வில்லையா?

ஃ

நண்பர்கள் எழுதும் கடிதத்தில் எவ்வளவு ஜீவாதார நாடிகள் ஓடுகின்றன! அத்தனை எழுத்துகளையும் அவர் கையாலேயா எழுதினர் என்பதை நோக்குமிடத்து எவ்வளவு இன்பத்தை ஊட்டுகின்றது? ஒவ்வொரு எழுத்தும் நம்மிடம் பேசுவது போலல்லவா இருக்கின்றது. அவர் அங்கே கோபமாகத் திட்டினல், இங்கே அந்த எழுத்துக்கள் நம்மை முறைத்துப் பார்க்கின்றன. அங்கே அன்பு, காதல், சிரிப்பு—ஆகியவற்றேடு எழுதியிருந்தால் எல்லாம் இங்கே பிரதிபலிக்கின்றன. திடீரென்று ஒருவனுக்குக் காதல் கடிதம் வந்து விடட்டும்! அவன் ஆடும் கூத்துக்களைப் பிறகு பாருங்கள்! இன்று ஒருவர் எழுதிய கடிதம் நாளை அவர் இறந்து விட்டால் அப்போது அக்கடிதம் நமக்கு எவ்வளவு ஆதரவைத் தருகின்றன. அதில் காணும் எழுத்துக்கள், வடிவங்கள், நடை—எல்லாம் சேர்ந்து அவருடைய உருவத்தை நம் முன்பு கொண்டுவந்து நிறுத்தவில்லையா? இந்த ஒரு கடிதம் அவர் இறந்த பிறகு அவரிடமாக எதிர்பார்க்க முடியுமா? எழுத்துப்பிரதியாக இருக்கும் இக்கடிதத்திற்கும் அச்சாகிய எழுத்துக்களுக்கும் எவ்வளவு வித்தியாஸம்? எவ்வளவு இன்பத்தை இது தருகிறது!

இருபது வருடங்களுக்கு முன்னே சென்றுவிட்ட ஒருவருடைய கையெழுத்தைப் பார்க்க நீ எவ்வளவு ஆசையுடன் இருப்பாய் என்பதைச் சற்று நினைத்துப் பார்? அதுதான் போகட்டும், மகாத்மா காந்தி அடிகள், தாகூர், சரோஜினி, ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி, மாக்டனல்ட், ஜார்ஜ் பர்னட்ஷா—ஆகிய தற்போ

எல்லோரும் நல்ல நூல்களை வாசிக்கிருர்கள். பிறர்க்கும் போதிக்கிருர்கள். தாங்கள் வாசித்தவர்களென்று வெளியில் காட்டிக்கொள்ளுகிருர்கள். ஆனல், அவர்கள் வாசித்த அந்த நூல்களில் சொல்லியிருக்கிறபடி முதலாவது தாங்கள் நடக்கப் பிரயாசைப்படுகிறதில்லை.

தைய மகான்கள் தங்கள் கைப்பட எழுதிய கடிதங்களைப் பார்க்க உங்களுக்கு எவ்வளவு ஆசையிருக்கும் என்பது எனக்குத்தெரியாமலா யிருக்கிறது? என்முர். இந்த இனிய பிரசங்கத்தைச் செவியுற்ற நமது கடை நண்பர்கள் அனைவரும் அவரது அரிய அனுபவ ஞானத்துக்காகக் கொண்டாடினுர்கள். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

பகதூர்-பொன்வண்டு செட்டியார்.

ஒருவர் ஒரு தீயகாரியத்திற்குப் பிரயத்தனப்பட்டிருக்கிற நேரத்தில் ஒவ்வொரு நற்செயல் செய்ய வந்து தெரியாதவிதமாய் அதைத் தடைப்படுத்தப் பார்க்கும். ஆனுல், தீமைக்கு உடன்படுகிறவர்களுக்கு அத்தடைகளால் பெரிய வயிற்றெரிச்சல் தோன்றும்.



ஹாஸ்ய சஞ்சீவினி



நண்பர்:—தமிழ்ப் பண்டிதரே! என்ன சாதத்தில் ஜலம் ஊற்றிக் கொண்டு சாப்பிடுகிறீரே? அவ்வளவு கஷ்டமிலையா?

பண்டிதர்:—எப்போதும் தான் கஷ்டம். அதிலும் இந்த மாதம் சம்பளம் இன்னும் வரவில்லை. வீட்டில் மனைவியோ புது அரிசி வேண்டாமென்றும், சாதம் பெரிது பெரிதாய்ப் புசிக்க முடியாமலிருக்கிறதென்றும் சொல்லுகிறாள். புதுஅரிசி ரூபாய்க்கு ஏழுபடி. பழய அரிசியோ 5-படி. இரண்டு படி தள்ளி எப்படிப் பழய அரிசி வாங்குவது? நான் பசி தீர்ந்ததா? வயிற்றுக்குத் திருப்தியானதா? என்பதை மட்டுமே கவனித்துக் கொண்டு போகிறவன். இதனால் வீட்டில் சண்டை. என்ன செய்யட்டும்?

நண்பர்:—அரிசி சங்கதி இருக்கட்டும். ஒரு குழம்பு காய்கறி சமைத்துக்கொள்ளக் கூடாதா?

பண்டிதர்:—இன்று காலையில் காபிக்கு வெல்லமில்லை என்று மனைவி சொன்னாள். என் கையில் பணமில்லாததால் மௌனமாக இருந்துவிட்டேன். அதில் மனைவிக்குக் கோபம் குதித்துக்கொண்டு, நான் கடையிலிருந்து காய்கறி வாங்கிவந்திருந்தும், வீட்டிலேயே காய்கறிகள் இருந்தும், எதுவும் சமைக்காமலும், குழம்பும் வைக்காமலும் வெறும் சாதத்தை மட்டுமே ஆக்கிவைத்து விட்டாள். இப்படிச் செய்தால் நான் உண்பதற்குக் கஷ்டப்படுவேனென்றும், கோபிப்பேனென்றும், அப்போது ஒரு சண்டை பிடிக்கலாமென்றும் எண்ணிக்கொண்டாள் போலும்! நானோ வறுமையிலும், செல்வத்திலும் நன்கு புறண்டெடுத்து எழுந்தவன். பாலும் சக்கரையுமிட்டும் புசிப்பேன். உப்பிலாக் கூழும் உண்ணுவேன். அப்படிப் புசிப்பேனென்பதைக் காட்டும் பொருட்டாக நானே இன்று முதலில் சாதத்தில் ஜலத்தை விட்டுக்கொண்டு ஊறுகாயைத் தொட்டுக்கொண்டு உண்ண உட்கார்ந்து விட்டேன். இதற்குமேல் அவள் என்ன செய்ய முடியும்? அவளும் நாலு நாளைக்கு இப்படியே தண்ணீரும் பருக்கையும் உண்டு வந்தால் எல்லா ஆணவமும் அடங்கி ஒடுங்கி விடும். நாலு பக்கமும் பணம் வர வேண்டி யிருக்கும்போதே, இப்படித் தரித்திரகோலம் காண்பித்து, மனைவியின் உண்மைக் குணத்தை முன்னதாக அறிவதே மேல்.

ஃ

ஒரு வீட்டின் தெருவில், வாங்கின கடனைக் கொடுக்கவில்லையென்று மார்வாடி சரமாரியாய்த் திட்டிக்கொண்டிருந்தான். அந்த சமயம் ஒரு பிச்சைக்காரன் அங்கு வந்து கண்டபடி பாடத் தொடங்கினான். அச்சமமம் வீட்டுக்காரியின் பெண் தன் தாயாரைப் பார்த்து, "அம்மா, அப்பாவை ஒரு கிராம

உத்தியோகம் கிடைக்காமல் சிலர் வக்கீலாகிறார்கள்; சிலர் உபாத்தியாயராகிறார்கள். சட்டை, தலைப்பாகை, பேனா, மேஜை, நாற்காலி இவற்றையே அவர்கள் விரும்புவதால் வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றில் சிந்தை செல்வதில்லை.

போன் வாங்கிக் கொடுக்கச் சொல்லம்மா, என்றாள்.

தாயார்:—சீ! சும்மாயிரு. இப்போதுதான் வெளியே இருவர் பாடுகிறதைக் கேட்கிறோமே. இன்னும் கிராமபோன் வேறே வேணுமா? இந்தப் பாட்டுகளே போதும், கேட்டுக் கொண்டிரு.

மகள்:—இல்லையம்மா, கிராமபோன் பாடிக்கொண்டிருந்தால், கடன்காரர்கள் பாடுவது நம் காதுக்குக் கேட்காதிருக்குமே.

R. கோமளவல்லி அம்மாள்.

ஃ

—"தாங்கள் எந்த வேலையிலிருக்கிறீர்?"

—"இந்தப் பாழும் ரயிலில் தான் மாட்டிக்கொண்டிருக்கிறேன்."

—"ஹா! நீங்கள் என்ன இஞ்சினு, ரயிலில் மாட்டிக்கொள்ள?

(R. K.)

ஃ

ஒருவர் காய்கறி வாங்கக் கடைக்குப் புறப்பட்டார். வாயிற்படியைத் தாண்டியதும் பால்காரி எதிரில் வந்தாள்.

பால்காரி:—இரண்டு மாத பாக்கி தரவேண்டும். செலவுக்கு அதிகக் கஷ்டம்.

அவர்:—நீ என் கையை எதிர் பார்க்கிறாய். நான் இன்னொருவரின் கையை எதிர்பார்த்து நிற்கிறேன். எனக்குப் பணம் வந்ததும், உனக்கும் வந்துவிடும் போய்வா என்றார். இதற்குள் தயிர்க்காரி வந்து தன் பாக்கியைக் கேட்டாள். எண்ணெய்க் கடைக்காரன் எதிர்ப்பட்டுத் தன் பாக்கியைக் கேட்டான். இருவருக்கும் பதில் சொல்லி யனுப்பிவிட்டு, மளிகைக் கடைக்குச் சென்றார்.

மளிகை செட்டியார்:—தங்கள் கணக்கு நெடுநாளாக அப்படியேயிருக்கிறதே. எவ்வளவு பாக்கியென்று தெரியுமா? ரூபாய் 14—0—6 ஆகிறது.

அவர்:—சரிதான் வந்துவிடும். இந்தா ரூபா 2—0—6 கணக்கில் வரவு வைத்துக்கொள்ளுங்கள். பாக்கி 12-ரூபாய் பிறகு ஆகட்டும்.

என்று கூறித் தந்துவிட்டுக் காய்கறிகள் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தார். திண்ணையில் அவர் மனைவி ஜவுளிக்காரனிடம் ஒன்பது ரூபாய்க்குத் துணிகள் வாங்கிக்கொண்டு, வளையற்காரனிடம் முக்கால் ரூபாய்க்கு வளையல்கள் தானும் தன் பெண்ணுமாகப் போட்டுக்கொண்டு, "இவர்களுக்குப் பணம் கொடுத்துவிடுங்கள்" என்று உத்திரவிட்டாள். வீட்டுக்காரர் மனம் கலங்கியவராய் இதோ நோட்டுக்குச் சில்லரை கொண்டுவருகிறேன் என்று எங்கோ சென்றார். திரும்பி வரவேயில்லை. மாலையில் வீட்டுக்கு வந்து எங்கும் பணம் கிடைக்கவில்லை; அவர்களை எப்படி அனுப்பினாய் என்று மனைவியைக் கேட்டார் அதற்கு அவள் நாளைக்கு வருமாறு சொன்னேன்; காலையில்

பந்துக்களா யிருந்தாலும், அவர்களின் வீட்டில் குடிக்கூலி இருக்கப் புகுந்தால் வாடகை கொடுத்தே ஆகவேண்டும். தம் உறவின் சொந்தத்தைக் காண்பித்து இலவசத்திலிருக்கப் பல்லையிளித்தால் இந்தக் காலத்தில் அதற்கு ஒப்புவார் அருமை.

கட்டாயம் வருவார்கள், கொடுத்து விடுங்கள் என்றான். வீட்டுக்காரர் பெருமூச்சு விட்டபடி நின்றார்.

ஃ

வாங்குபவர்:—ஒரு படி கோதுமை மாவு தவிடு இல்லாமல் சல்லித்துக் கொடுங்கள். போனதடவை வாங்கியதில் பாதி தவிடாக இருந்தது.

பலசரக்குக் கடைப்பிள்ளை:— "அது அப்படித்தான் இருக்கும்." தவிடு கலந்தேதான் கிடக்கும். அது அப்படித்தான் இருக்கும் தவிடு இல்லாவிட்டால் கோதுமை மாவு குடலில் ஒட்டிக்கொண்டு கெடுதியுண்டாக்குமைய்யா.

இந்த சமயம் நேற்று பக்கெட்டு ஒன்று வாங்கியவர், அது ஓட்டையாய் அடியில் ஒழுகுகிறது என்று திருப்பிக் கொண்டுவந்து வேறு தரும்படி வேண்டினார்.

ப-கடைபிள்ளை:—"அது அப்படித்தான் இருக்கும்." அடியிலே ஜலம் ஒழுகாமலிருக்குமா? அப்படித்தான் இருக்கும். வேறு நீங்கள் வாங்கிச் சென்றாலும் அப்படித்தானிருக்கும்.

இதற்குள் இன்னொருவர் எட்டணாவுக்குக் கடலை நெய் வாங்கிக் கொண்டு, நெய் மிகவும் இறுகிக் கெட்டியாய் இருக்கிறதே, வேறு நெய் கொடுங்கள் என்றார்.

ப-கடைபிள்ளை:—கடலை வாங்கும்போது நெய் "அப்படித்தான் இருக்கும்" பணம் கொடுத்து வாங்காதபோது "அப்படித்தான் இருக்கும்" வேண்டாமென்றால் வேறு கடைக்குப் போங்கள்.

என்று கூறிவிட்டு, அருகிலிருந்தவரைப் பார்த்து,

ப—கடைபிள்ளை:—என்ன ஐயா, நாலு மாசம் சூல், சீக்கிரம் குட்டிபோடும் என்று ஏமாற்றி அந்தப் பசுவை எனக்கு விற்றீரே. ஒரு வருஷத்திற்கு மேலாகிறது. ஒரு குட்டியும் போடக் காணோமே? (என்றார்.)

பசு விற்றவர்:—"அது அப்படித்தான் இருக்கும்." எப்படியும் அடுத்த வருஷம் குட்டி போட்டுவிடும்.

என்றார். அப்பொழுது கடை வேலைக்காரன் காய்கறிகள் வாங்கிவர, அதில் வாழைக்காயைப் பார்த்துவிட்டு,

ப—கடைபிள்ளை:—என்னடா இந்தப் பழுத்த வாழைக்காயை வாங்கி வந்தாய்? உனக்குப் புத்தி யிருக்கிறதா? (என்றார்.)

பசு விற்றவர்:—"அது அப்படித்தான் இருக்கும்." பழுத்திருந்தால் தான் சமைக்கிற கஷ்டமில்லாமல் பழமாகவே சாப்பிட்டு விடலாம். மரத்திலிருந்தும் பறித்து நாளாய் விட்டதால், "அது அப்படித்தான் இருக்கும்." (என்றார்.)

பலசரக்குக்கடைப்பிள்ளை தனது வார்த்தையையே தனக்குப் பதி

லாகக் கூறியதைக் கேட்டதும் தமக்கு உண்டான கோப வயிற்றெரிச்சலை அடக்கி, வயிற்றுக்கு விளக்கெண்ணெய் தடவிக் கொண்டு சாந்தப் படுத்த முயல்வதானர்.

ஃ

தனவான்:—அந்தத் தமிழ்ப் பண்டிதர் கோவிந்தம் பிள்ளை பெரிய பிடுங்கல் மனுஷ்யன். தனக்கு உடம்பில் இரத்தமில்லை யென்றும், மிக்க பலஹீனமென்றும் சொல்லி நாலரை ரூபாயுள்ள மருந்தொன்றை வாங்கித் தரும்படிக் கேட்டுக்கொண்டார். நாம் "ஆகட்டும்" என்று தலையசைத்து விட்டதில், இந்த இரண்டு மாதமாக அவர் பல தடவை வந்து கேட்டு விட்டார். இப்போதுதான் பத்து நாளாக அவர் வரவில்லை.

கனவான்:—இனி அவரால் தங்களுக்குத் தொந்திரவு இருக்கமாட்டாது. தங்கள் மருந்து அவருக்குத் தேவையில்லை. அவர் இறந்து மூன்று நாட்களாயின தங்கள் மருந்து வேண்டாத ஊருக்கு அவர் போய் விட்டார். இனி தங்களிடம் வரமாட்டார்.

ஃ

கோமளா:—சீதா, உனக்கு விவாகமாகி மாமி வீட்டுக்குச் சென்றால், அங்கே உனக்கு அதிகக் கஷ்டமாய் ஒன்றும் இருக்காது என்று நினைக்கிறேன்.

சீதா:—ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

கோமளா:—உன் தாயார் உன்னைப் படுத்துகிற பாட்டைப் பார்த்தால், இனி மாமி வீட்டில் இவ்வளவு பாடு படவேண்டியிருக்காது என்று எனக்குத் தோன்றியதால் சொன்னேன். உன் தாய் தாயாகக் காணோமே மாற்றாந்தாய் போலல்லவா உன்னைக் கொடுமைப் படுத்துகிறாள். சிடுசிடு என்று விழுகிறாள். சின்ன சங்கதிக்குக்கூட அடிக்க, இடிக்க, கையிலிருக்கிற பாத்திரத்தால் மோத, கன்னத்திலே அறைய வருகிறாளே. பள்ளிக்கூடத்துக்கும் நீ சரியாக வருகிறதில்லையே?

சீதா:—நான் என்ன செய்யட்டும்? அடிக்கடி அம்மா என் தந்தையுடன் சண்டையிட்டுக்கொண்டு அன்றைக்குத் தான் சமைக்க முடியாதென்று சொல்லி விடுகிறது சமையல் வேலை என் தலையில் விழுகிறது. அதற்காகப் பால் அன்றைக்கு நான் பள்ளிக்கூடம் போவதெப்படி? என்னவோ என் தலை எழுத்து. வீட்டுக்கு வருகிறவர்கள் போகிறவர்களின் எதிரில் எல்லாம் என்னைக் கேவலமாய்ப் பேசுகிறது. என்றைக்கு என் தாய்க்கு

நிகரிலாத நிபுணத்துவமும் வித்வசதுவமும் படைத்திருந்தும் எந்த வேலையிலும் தாங்கள் நிலைத்து நில்லாமல் நிமிஷத்திற்கு ஒரு இடமாக மாறிக்கொண்டு நிச்சயபுத்தி யற்றவர்களாய்த் திரிகிறார்கள். சத்தியமே பேசவேண்டுமென்று எழுதமட்டும் அறிவார்; அவ்விதம் தாங்கள் நடக்க அறியார். பிறருக்குப் போதிப்பார்; தாம் அவ்விதம் செய்யார். ஒரு காலணாவுக்கு நம்பவும் வழியில்லை. பிறரிடமிருந்து பெற்றதைத் திருப்பித் தருவதும் அபூர்வம். பெரிய நிர்மாணகாரியங்களை நடத்தி முடிக்கத் தாங்கள் தலையிட்டிருப்பதாகத் தங்களை விளம்பரப்படுத்திக்கொள்வர். காரியமும் நடப்பதுபோல் காட்டுவர்; ஆனல் இடையில் கைவிட்டு மறைந்திடுவர். கையில் காசிருந்தால் தங்கள் பாய்க்கு மைசூர்பாகும், ஹல்வாவும், நெய் காராபூந்தியும் போடுவர். இவர்கள் நடித்துப் பயனென்ன?

நல்ல புத்தி உண்டாகுமோ? என்றைக்குத்தான் வீடு கலகம் சண்டையில்லாமல் சமாதானமாயிருக்குமோ?

ஃ

மனைவி:—கையிலிருந்த பொன் வளையல்கள் ஒடிந்து விட்டதால், நாலணாவுக்குக் கண்ணாடி வளையல்கள் வாங்கிப் போட்டுக்கொண்டேன். இது நன்றாயிருக்கிறதா?

புருஷன்:—நான் இறந்த பிறகு நீ இருக்கப்போகிற அலங்கோலத்தை இப்போதே என் முன்பு காட்ட வந்துவிட்டாயா? முன்பு கலகம் சண்டையில் பொன் வளையல்களைக் கழற்றி எறிந்ததுபோல் இனி கண்ணாடி வளையல்களைக் கழற்ற முடியாதல்லவா!

"கருணைக்கடல்" என்று சிலரைச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு அந்தக் "கடல்" ஏதோ உதவிகளைச் செய்ததாக இருக்கலாமே தவிர, மற்றவர்களுக்கோ ஐயோ! அது "கருமிக் கடல்" ஆகவே இருக்கிறது! நெஞ்சிலே கொஞ்சமும் இரக்கத்தைக் காண முடிகிறதில்லை. எவ்வளவு பரிதாபமாய்த் தன் பிணி கஷ்டங்களைச் சொல்லிக் கொண்டாலும் அந்தக் கருணைக் கடல் சீச்சீ போ போ என்று பிச்சையிடாது துரத்துகிறதிலேயே முதல் நெம்பரா யிருக்கிறது!

எழுதிவைத்த குறிப்பு ஒரு சாவிக்குச் சமம்.

ஒருவர் தன் ஞாபகத்தில் தோன்றிய ஒரு சிந்தனையின் குறிப்பைக் காகிதத்தில் எழுதிவைக்கின்றார். அந்தக் குறிப்பு ஒரு பெட்டியின் சாவிக்குச் சரி. அந்தச் சாவியைக் கொண்டு ஞாபகப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள சிந்தனைப் பொக்கிஷங்களை யெல்லாம் எடுத்துக்கொள்ளலாம். சில சமயங்களில தான் எழுதிய சிறு குறிப்பு எந்த சிந்தனையினுடையதாக எழுதிவைத்ததென்று தனக்கே விளங்காமற் போய், அதைக் குப்பைத்தொட்டியில் எறிய நேர்வதுமுண்டு. இது இன்ன பெட்டிக்கு இன்ன சாவி யென்பது தெரியாமல் மறந்து போவதற்கு ஒப்பாகும்.

பாங்கியில் நகைகளை வைத்துக் கடன் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வர, வீட்டிலோ விருந்துக்குப் பத்துபேர் வந்து குந்தியிருப்பதைக் கண்டு, "ஐயோ! இவர்களுக்காகத்தானா பணம் வாங்கிவந்தேன்; நான் எதற்காகப் பணம் வாங்கினேனோ அதற்கு முழுதும் செலவிட முடியாதுபோலிருக்கிறதே" என்று வயிறு எரிந்தானாம் ஒருவன். தன் கஷ்டத்தைப்பற்றி வாய் திறந்தாலோ வந்தது விரோதம்!

தன்னுடையதில் அசங்கிதமில்லை.

தன்னுடையது, பிறருடையது என்ற வேற்றுமை தோன்றும் பொழுதுதான் ஒன்று அசங்கிதமாகப் படாததும், படுவதும் உண்டாகின்றது. தனது குழந்தையின் பல ஜலாதிகள் தனக்கு அசங்கிதமாகப் படுவதில்லை. அவற்றை எடுத்து விட்டு அந்த இடத்தைச் சுத்தி செய்கையிலும் அது சாதாரணமாகவே தோன்றுகிறது. பிறரது குழந்தையின் மலஜலாதிகளைக் காணுகையில் அது அஸங்கிதமாகத் தோன்றி ஒதுங்கவும் பண்ணுகிறது. தனது மலத்தைக் கழுவிக்கொள்கையில் அதைக் கையால் தொடும் வேளையிலேயே அந்த அஸங்கிதம் தனக்குத் தோற்றுதிருக்க அதேசமயம் ஜலத்தையும் விட்டுக்கொண்டு சுத்தி செய்துகொள்ளப் புத்தி போகிறது. தனது கணவனின் மோகச் செய்கைகள் தனக்கு அசங்கிதமாகப்படுவதில்லை. அதேவிதமான பிறருடைய மோகச் செயல்கள் தனக்கு வெறுப்பையும் அஸங்கிதத்தையும் விளைக்கின்றது. தனக்கு அன்பானவர்களின் எச்சில், கோழை, மலஜலாதிகள், துர்நாற்றம் தனக்கு அசங்கிதமாகப்படாது. பிறருடையதாகில் அஸங்கிதமாய் வாந்தி வருகிறது. தம்பி, தமயன், தந்தை, குமாரன் நித்திரையில் ஆடை விலகிடின் மூடுவதில் பின்னடைவதில்லை. பிறர் அவ்விதம் தூங்கினே அஸங்கிதப்பட்டுத் தூரப்போக வைக்கிறது. தான் வியாதிப் படுக்கையில் கிடக்கும்போது தன்னைச் சேர்ந்தவர்கள் தன் அருகில் இருக்கவேண்டுமென்பதானது, தன்மீது அஸங்கிதப்படாதவர்கள் தன் பக்கத்தில் இருந்து உதவவேண்டுமென்பதான கருத்தைக் காட்டுவதாகும். அசங்கிதம் தன்னுடையதிலில்லை; பிறருடையதிலேயே.

தன் வேலைகளைப் பிரித்துக் கொடுத்தல்.

ஒரு பத்திராசிரியருக்கு ஓயாது எழுதிக்கொண்டிருப்பதே வேலையல்ல. தன் வேலைகளில் பலவற்றை உதவி ஆசிரியர்களிடம் ஒப்புவித்து அதைச் செய்யும் வகையை விளக்கி அவற்றை அவர்கள் செய்ய ஏவிவிட்டு பிரதானமான சில வேலைகளைமட்டும் தனக்கென்று வைத்துக்கொண்டு ஓய்வும் சாவகாசமும் அமைதியுமாய் இருப்பதே முறையாகும். இவ்விதமே ஒரு வர்த்தக ஸ்தலத்தின் தலைவர் அதன் பல பகுதியான வேலைகளை மற்றவர்கள் செய்யப் பங்கிட்டுத் தந்து தாம் தலைமை ஸ்தானத்திலிருந்து முக்கியமான விஷயங்களை மட்டும் கவனிப்பது இயல்பு. அவ்விதமே, ஒரு வீட்டின் அரசி தனது குமாரனைத் தன் மருகியிடம் ஒப்புவித்து, அவனுக்கான வேலைகளை மருகியே செய்யும்படி விட்டுவிட்டு யாவும் சரியாய் நடக்கிறதா என்ற மேற்பார்வையின் தலைமையை மட்டும் தான் வகித்துக்கொள்கிறாள். தன் கணவனை உபசரிப்பதின் ஒரு பகுதியையும், அந்தக் கணவனுக்குச் செய்யவேண்டிய சிறு வேலைகளின் ஒரு பகுதியையும் தன் குமார்த்தியிடம் ஒப்புவித்து, அந்தக் குமார்த்தியே தன் தந்தைக்குச் செய்யும்படி விட்டுவிடுகிறாள். இவ்விதம் தான் செய்யவேண்டிய வேலைகளைப் பிறரிடம் தந்தாலும், எல்லா வேலைகளினுடையவும் முழுப் பொறுப்பும் பாரமும் கவலையும் அந்த வீட்டு அரசியின் தலையிலேயே சுமந்துள்ளது. மற்றவர் இல்லாதபோதும், செய்ய முடியாதபோதும் தானே அவற்றைச் செய்ய முற்படும் கடமையும் சுறுசுறுப்பும் தன்னிற் கொண்டே அந்தத் தலைமையை வகிக்கிறாள். தலைமை ஸ்தானம் என்பது சாமான்யமானதில்லை.

கவிதா விலாஸம்



உழைத்த நெஞ்சின் சிந்தனை.

வறுமை தொலைத்திடக் கருதி, வளர் இளமை
முதலாக வருந்தி யானும்
உறு துயரம் சொலப்போமோ? உழைத்த பல
பாடுகளை உன்னப்போமோ?
நறுநிலைமை உறும்போது நல்லவர்போல்
பலர் வந்து நாளும் நின்று
பெறும் பணத்தைத் தீர்ப்பாராய்ப் பேச்சினிலே
இனியவராய்ப் பெருகினாரே! (1)

ஒருவர் செலின், மற்றொருவர் உடன் வருவர்;
மனையில் என்றும் ஓயாக் கூட்டம்;
வரும் பணத்திற் பெரும்பகுதி வருபவர்க்கே
செலவழியும்; வாழ்வில் யானும்
பொருள் மிகுத்துச் சிறப்பதெங்கே? புகழுரைகள்
என் துயரைப் போக்கவல்ல
அருந்துணையாய் அமைந்திடுமோ? அவரென்னை
இந்நாளில் அடைகுவாரோ? (2)

அன்றென்னை அடுத்திருந்து "ஐய! நீ
காத்தருள்க; அபயம்"—என்றோர்,
இன்றென்னைக் கண்டிடிலோ, "என்?"—என்றோர்
மொழி கேட்க இரங்கிலாரே;
தின்ற பல விருந்துகளைச் சிறிதளவுங்
கருதாரே; தெருவில் கண்டால்,
அன்பு மொழி ஒன்றேனும் அறையாராய்
மறைவர் அந்த அற்பர் தாமே! (3)

இப்போது நாவல் விற்பனை அபூர்வமாய் இருப்பதின் காரணம் தெரியவில்லை. நாவலைப்போல் கல்வி அபிவிருத்திக்கு முக்கியமான சாதகம் அத்தனை சுலபமானதாக வேறொன்றில்லை. விளையாட்டுபோலவே அறிவை வளர்த்துப் பெருக்குவது நாவல்களும் கதைகளும்தான். முன்பு ஒரு தினுசுக்கு மாதம் நூறு விற்றது போய் இப்போது ஒரு தினுசுக்குப் பத்து விற்பதும் கஷ்டமாயிருக்கிறது.

பார்த்துவிடில் நேர்நின்று பல்லிளித்துப்
பசப்பிடுவோர்; பரிவிலாமல்
வார்த்தை யுபசாரங்கள் வழங்கி
அனுப்புவர்; என்வாய் வரண்டபோதும்—
தீர்த்தமுமே கேட்பினன்றி, சிக்காது;
"காப்பியுண்டு செல்க" என்பார்!
வார்த்தையது பாசாங்கே! மனத்தினிலே
அன்பில்லார் மனிதரேயோ? (4)

இத்தகையோர் இயல்பறிந்தும், இடுவதில் யான்
குறையவிலை இன்றுகாறும்;
எத்தனையோ செலவிட்டும் இன்றளவும்
நன்றியிலை; யான் உழைத்து,
மெத்த வருந்திச் சேர்த்த மேன்மை பொருள்
அழித்ததுவே விளைந்த லாபம்!
அத்தனையும் மிகுத்திருப்பின், அவதி மிகும்
இன்று துணை ஆகுமன்றோ! (5)

ஆதியிலே வஞ்சகரை அறிந்(து) அகற்றி
யிருந்தேனேல், அல்லலின்றிப்
பாதி பணக்காரனெனப் பலர் புகழப்
பெற்றிருப்பேன்; பகர் அந்நாளில்
ஓதும் அந்த புத்தியைக் கொண்(டு) உயராதே
இந்நாளில் உன்னி என்ன?
பாதகரை நம்பி இட்டுப் பரிதவிக்கும்
நெஞ்(சு) இன்று பதைப்பதேன்னே! (6)

உற்றார் தம் இயல்பிதுவாய் ஒழிந்திட,
பற்பல வழியில் உதவி முன்பு
பெற்றாராம் தோழர்களின் பெருமோசங்களைக்
கருதப் பெருகும் துன்பம்
சற்றேயோ? ஆபத்தில் தலைமறைந்து
விலகிவிடும் தந்திரங்கள்
கற்றாரை உணராமல், களித்து செல
வழித்த பணம் கணக்குண்டோயோ? (7)

என்னதான் உயர்ந்த தையல் மிஷினை வாங்கினாலும் முதலில் தனக்குத் தைக்குந் தொழில் தெரிந்திருக்கவேண்டும். தைக்கும் பயிற்சியில்லாமல் தையல் மிஷின் வாங்கிப் பயனில்லை. அதுபோல், ஈயம், வெள்ளி, பொன் பாத்திரங்களாகவே சமையற் பாத்திரங்களை வாங்கினாலும் சமைக்கத் தெரிய விடில் பயனென்ன? வீட்டுக் குடித்தனம் தெரியாதவளுக்கு நாட்டுத்துரைத் தனம் தெரிந்து காரியமென்ன?

எத்தனை நாள் உழைத்திடினும் இதயத்தில்
கருணையிலார்க்(கு) ஏது நன்றி ?
சித்தமதிற் பணத்திமிரே செறிந்தோர் என்
பாடுகளைச் சிந்திப்பாரோ ?
உத்தம நற்றலைவர் சிலர் உளரேனினும்,
அவரிடத்தில் உழைக்கும் பேறு
வித்தகனுர் அருளின்றி விளைந்திடுமோ ?
விதிவலிமை வெல்லப்போமோ ? (8)

தனி தொடங்கும் தொழில் எதுவும் தழைக்கவில்லை ;
பிறர்க்(கு) உழைப்பின் சாரும் விர்த்தி ;
எனினுஞ் சுதந்திரத் தொழிலில் இச்சை மிகக்
கொள்கின்ற(து) என்றன் நெஞ்சு ;
மனிதர்களின் வாழ்வினிலே, மன உறுதி
இருக்கும் வரை வருத்தமில்லை ;
இனியும் உயர்வுறுங் காலம் எய்துமென
நம்பி மகிழ்ந்(து) இருக்கின்றேனே ! (9)

இறைவன் அடியிணை மலரே இணையற்ற
தனித் துணையென்(று) எண்ணியுள்ளேன் ;
உறவினரில்—தோழர்களில்—உத்தமரும்
வஞ்சகரும் உணர்ந்து கொண்டேன் ;
அறவழியே நல் வழி—மெய் யன்பர்களே
துணைவரெனல் அறிந்துகொண்டேன் ;
இறைவனையே வணங்கி இனி ஏமாற(து),
இருக்கும் நிலை எய்துவேனே ! (10)

ஆரியூர்—வ. பத்மநாப பிள்ளை.

வெற்றிலைப்பாக்குக் கடைகளும், வேறு பல சில்லறைக் கடைகளும் தீபாவளி சமயத்தில் பட்டாசுக் கடைகளாக மாறிவிடுகின்றன. இந்தக் கடைகளில் முன்னம் காலணு பொடி, வெற்றிலை ஒருசமயம் நாம் வாங்கியிருப்பினும் அதற்காக நம்மீது பக்ஷம் காட்டிப் பேசுவோராகிறுர்கள். இதே கடையில் தீபாவளிக்கு நாலைந்து ரூபாய்க்குப் பட்டாசு மதாப்புகள் வாங்கினுலும், அதற்காக அந்தக் கடைககாரர்கள ஒரு அன்பும் உணர்த்துவதில்லை; ஒரு காசு குறைத்துத் தருவதுமில்லை; அதை இதைக் கேட்டுச் சற்றே அதிக நேரம் அந்தக் கடையில் தாமதித்துவிட்டாலோ, வியாபாரம் கெடுகிறது, சீக்கிரம் வாங்கிக்கொண்டு போங்கள் என்று கண்டிதமாய்ப் பேசவும் ஆரம்பித்துவிடுகிறுர்கள் தீபாவளியின் மகிமை அந்தக் கடைக்காரர்களைப் புதுப் பெருமையில் ஆழ்த்திவிடுகின்றது போலும்! ஆனுல், இந்தப் பெருமையெல்லாம் தீபாவளிககுப் பிறகு பறந்து போய்ப் பழய மண்கிண்ணிக ளாகிவிடுகிறுர்கள்.

நம்பிக்கையற்ற இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள்.

ஸர்க்கார் கணித நிபுணர் 1933-ம் வருஷக் கணக்கு விதரயதாஸ்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:—"சில இந்திய லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனிகள் திட்டமான இன்ஷியூரன்ஸ் தொகையைக் கொடுக்காமல், ஒரு வருஷத்தில் கிடைக்கும் வருவாயை ஒரு வருஷத்தில் எவ்வளவு பேருக்குப் பணம் கொடுக்கும்படி நேரிடுகிறதோ அவ்வளவு பேருக்குள் பிரித்துக் கொடுக்கும் முறையில் வேலைசெய்து வருகின்றன. * * 18 முதல் 60-வயது வரையில் உள்ளவர்களைப் பாலிஸிதாரர்களாகச் சேர்த்துக்கொள்கின்றன. இந்த மாதிரியான ஏற்பாடு சரியானதாக இல்லாதிருப்பதுடன், இது பாலிஸிதாரர்களும், ஏஜண்டுகளும் பிறகு கம்பெனியும் மோசடி செய்வதற்கு இடம் கொடுக்கும். இது இந்தியாவின் இன்ஷியூரன்ஸ் தொழிலுக்குப் பெருங்கேட்டை விளைவிக்கிறது" என்கிறார்.

8-ரூபாய் செலுத்தி இறந்தவரின் வாரீசுக்கு 300-ரூபாய் கொடுக்கப்பட்டதென்றும், 10-ரூபா செலுத்தியவருக்கு விவாக காலத்தில் 400-ரூபா கொடுக்கப்பட்டதென்றும் எவரும் மயங்கும்படி செய்கிற விளம்பரங்களில் ஜனங்கள் பிரமித்துப்போய் அந்த இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் சேருகிறார்கள். சில வருஷங்களுக்கெல்லாம் அந்தக் கம்பெனிகள் நின்றுவிட, ஜனங்கள் தாங்கள் செலுத்திய தொகைகளை இழந்து அங்கலாய்க்கின்றனர். பேராசை பெருநஷ்டம் என்பது கடைசியில் உண்மையாகிறது. வைத்திய பரிசோதனையற்ற இன்ஷியூரன்ஸ்கம்பெனிகளில்சேருவது தவறு. அவை நிச்சயமுள்ளதல்ல.

கொடுத்தது கேட்டால் அடுத்தது பகை.

ஒருவர் கடனாகவோ, நம்பிக்கையின்பேரில் வைத்துவைக்கும்படியாகவோ, இரவலாகவோ கொடுத்திருந்ததைப் பிறகு திருப்பிக் கேட்பின், அவ்விதம் தர மனம் வருவதில்லை. கேட்பவரிடத்தும் பகை கொள்கின்றனர். ஒன்றைத் தந்திரமாய்ப் பெறக் காத்திருப்பவரும், பிரயத்தனம் செய்பவரும், கோரியதைப் பெறாவிடில் தூறுகிறவரும் தீங்கிழைப்பவருமாகின்றனர். "என்றும் ஈயாத மகாராஜன் தான் கொடுக்கவில்லை; தினமும் தரும் அயோக்யன் என் இன்று பிச்சையிடவில்லை?" யென ஒரு வறிஞன் மொழிந்ததாய்க் கதையுண்டு ஒருவருக்கு அடிக்கடி பொருளைக் கொடுத்து வழக்கப்படுத்தி ஆசையை வளர்த்து, பின்னர் கொடாமல் நிறுத்தின் கோபமே உதிக்கிறது. இவ்விதம் சினம் கொள்வோர் ஸ்வயநலத்தைக் கோரிப் பாபகிருத்யம் செய்யும் மிருகத்தன்மையுடையவரே. கொடுத்தால் நல்லவன், கொடாவிடிற் பொல்லாதவன். ஈந்தால் யோக்யன்; ஈயாவிடின் அயோக்யன் என்பது அதைப்பெற நாடுவோரின் கெட்ட தன்மையைக் குறிக்கிறது. ஒருவரிடமிருந்து ஒன்றைப் பெற்றுக்கொள்ள மனம் இசையுமே யன்றி, தான் கொடுப்பதற்கு ஒப்பாது. ஒருவர் செய்யும் சன்மானத்தைப் பெற்றுக் கொள்கிறோம். பிறருக்கு ஸன்மானம் செய்யப் பின்வாங்குகிறோம். இது இயற்கைக் குணமாய் அமைந்திருக்கிறது. ஒரு பொருளைக் கிரகிக்கும்வரை அவரிடம் அன்பு பாராட்டிப் பின்னர் ஒதுங்கிவிடுவதே அதிகம் பொருள் தேடுவதிலேயே எல்லோரும் திருஷ்டியாகின்றனர். பொருள்தான் பிறரைப் பொருள்படுத்தச் செய்கிறது. வெல்லமிருக்கும் தட்டில் ஈ.



1. உன் வீட்டுக் காரியங்களைக் கவனிக்கவேண்டிய தவசியமாயிருப்பதைப் பெண் கொள்ளப் போகுமிடத்தில் தெரிவிக்காதே. உன் விவாகம் முடிந்த பின் ஏளனமாய்க் நகைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

2. மாப்பிள்ளை வீட்டாருக்குக் கலியாணம் விரைவில் முடியவேண்டுமென்பதைப் பெண்வீட்டார்கண்டால் "நீங்கள் இப்போது ரூபாய் நூறு கொடுத்தால் உடனே கலியாண காரியத்தை நடத்தி விடலாம்; பின்னிட்டு அப்பணத்தைத் தருவோம்" என்கிறார்கள். இதை விசுவசித்துப் பணத்தை இன்னொருவரிடம் சடன் வாங்கிக் கொடுக்க, அந்தக் காரியம் முடிந்தபின்போ பெண்ணை வேறிடத்தில் கொடுத்து விடுகிறார்கள்.

3. இவ்வருடப் பரீட்சையில் சித்தி பெறவில்லை யென்று உன் மனதைச் சோரவிடாதே. தோல்வியே வெற்றிக்கு அறிகுறி. ஆனதால் மேலும் பிரயாசைப்பட்டால் சட்டாயம் ஜெயமடைவாய். உன்னுடைய தைரியத்தை உன் மனதின் சோர்வுக்குப் பலிகொடுத்து விடாதே.

4. ஆண்டவன் நீதியுள்ளவர். அவர் செய்வது யாவும் நமது நன்மைக்கே என்பதைக் கனவிலும் மறவாதே. உன் அனுபவத்தில் அதி விரைவில் கண்டுகொள்வாய்.

5. ஓர் உத்தியோகம் கிடைத்தவுடன் எஜமான் கையில் உன் வாழ்வு இருக்கிறதென்றெண்ணி அவருடைய கட்டளைகளின்படி நட. இல்லையேல் உத்தியோகத்திற்குப் பங்கம் வந்து ஒரு வேளை கஞ்சிக்கு வழியில்லாமல் கண் கலங்கும்படியாகி, அவ் வெஜமானின் மற்றைய உத்தியோகஸ்தர்களால் பரிகசிக்கப்படுவாய்.

6. எப்பொருளையும் இரவல் கொடுப்பதை விட இலவசமாய், அவர்களையே எடுத்துக் கொள்ளும்படி செய்வது பிறகு திரும்பி வரவில்லையே என்று கவலைப் படாதிருக்க முடியும்.

7. கோட் சொல்லிகளுடன் சிநேகம் செய்யும்போது முன் யோசனையாயிரு. அதிகப் பேச்சும் அந்தரங்க விஷயங்களும் வெளியிடாதே.

8. "சிக்கனம்," "டாம்பீகம்," "சோம்பல்" "தரித்திரம்" என்னும் பதங்களின் பொருளை நன்குணர்ந்து அதின்படி நடப்பவர்களே இவ் வுலகவாழ்க்கையை இனிதுடன் நடத்தப் பிறந்தவர்களாவர்.

9. 100 ரூபாய் சம்பாதித்து 99 ரூபாய் செலவு செய்பவன் ஐஸ்வர்யவான். 100 ரூபாய் சம்பாதித்து 101 ரூபாய் செலவு செய்பவன் நித்திய தரித்திரன்.

10. சடன் கேட்கும்போது தான் அதிக யோக்கியனென்றும், பிறர் பொருளை இச்சிப்பதில்லையென்றும் வெகு தடபுடலாய்க் கதைத்துப் பணத்தை வாங்கிக்கொண்டு வருடம் மூன்றாகியும் கொடுக்க மனமில்லை. கடன் கொடுத்தவர் கேட்கும்போது நான் இல்லையென்றா சொன்னேன்?

பிரியமானல் மாதம் இரண்டு ரூபாய் வாங்கிக் கொள்ளும். பிரியமில்லா விட்டால் உமக்கு வேண்டியதைச் செய்யும் என்கிறார். கடைசியில் அந்த இரண்டு ரூபாயாவது கொடுப்பார் என்று பார்த்தால் அதற்கும் வழி காணோம்.

11. உன்னால் முடியாத காரியத்தை முடியுமென்று வாக்களிக்காதே. இதனால் அநேக பொல்லாப்புகள் சம்பவிக்கும்.

12. உனக்கு ஒரு பொருள் அவசியம் வேணுமென்று கண்டால் மாத்திரம் அதற்கு விலை கொடுத்து வாங்கு. கையில் நாலு பணத்தைக் கண்டவுடன் நினைத்த பொருள்களை வாங்குவது கேவலம். சிறு பிள்ளைகளின் விளையாட்டை யொக்கும்.

13 அநேக நூல்களைக் கற்றவரினும், பிரபஞ்ச அநுபவங்களை நன்குணர்ந்து அதைத் தன் னிருதயத்திலேயே வைத்திராது பிறரறியச்செய்வது உலகத்திற்கோர் தொண்டு செய்தலை யொக்கும்

14. உன் மனைவியையோ சகோதரியையோ ஓர் ஆடவன் பார்த்து விட்டால் "சுருக்" என்று கோபம் வருகிறதே? நீ மற்ற ஸ்திரீகளைப் பார்ப்பதும் கண் சிமிட்டுவதும் யோக்கியமா?

15. வெள்ளைக்காரத் துரைமார்களிடம் வேலைசெய்யும் "பட்லர்" மார்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைத்து கால்சட்டை பூட்ஸ் முதலானது மாட்டி வேறு உத்தியோகஸ்தர்களாக்கியபின், தாம் இன்னாரின் பிள்ளைகள், தம் தந்தையின் தொழில் இன்னது என்று சொல்ல வெட்கப்படுகிறார்கள். தந்தையின் வயிறே பற்றுகிறது.

P. M. A. மரியா தாஸ்,

ஸிலோன்.

ஒருவன் மற்றொருவனை வைவதாலேயே திட்டு கேட்டுக்கொண்டவன் நாசமாய்ப் போய் விடுகிறதில்லை; அதனால் சம்பத்து கெட்டுவிடுவதில்லை. முன் இருந்த கௌரவம் சிதறிப்போய்விடுவதில்லை. நிந்தித்து உரையாடுபவனுக்கு வாய்க் கேடுதான். ஒரு கர்ப்பிணியைப்பார்த்து, அப்படியே கட்டையில் ஏறிவிடு என்று தூஷித்தால், அதனாலேயே ஒன்றும் நேரிட்டுவிடுவதில்லை. ஆனால் சிலரது வாக்கில் விஷம் இருப்பதால் பலித்துவிடுமோவென்று நடுங்குவதும் உண்டு. நாம் நியாயமாயிருக்கையில் அந்தத்திட்டு ஒன்றுமே செய்யாது என்று நல்லவிதமாக அர்த்தம் செய்துகொள்வதே நலம். அதன் பொருள் நல்லதாக அர்த்தப்படுவது போலவே அவர்களுக்கு நன்மையே உண்டாகும்.

கணவன் கொடுமைப்படுத்துகிறானென்று தங்களின் பெண்ணை அவனிடமிருந்து பிரித்துத் தங்களின் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுவோர். பிறகு கணவனே தங்களை வலியக் கெஞ்சிக்கேட்க வருவானென்றும், தங்கள் பெண்ணில்லாமல் அவன் எப்படிக் குடித்தனம் செய்ய முடியுமென்றும் பெருமையாய்ச் சொல்லிக் கொள்கிறார்கள். அந்தக் கணவன் மறு விவாகம் செய்துகொண்டுவிட்டாலோ— அப்போது இவர்கள் யாது செய்வர்?

கண்டிக்க முடியாத சமயங்கள்.

தன் மனைவியைத் தன் குமாரன் அடித்து சண்டையிட்டானெனக் கேட்கையில், தான் உடனே தன் குமாரனைக் கண்டிப்பதற்கில்லாமல் சாந்தமாகப் புத்தி சொல்லவே அந்த சமயம் சிந்தை போகிறது. என் மனைவியிடம் உனக்கு என்ன வார்த்தை?—என்ன சண்டை?—வேறு குடித்தனமாக நீ விலகிவிடு என்று கண்டிக்க முடிகிறதில்லை.

நடு இரவில் விழித்துத் தன் மனைவியைத் தன்னருகில் காணுதிருக்கவே எழுந்து வந்து பார்க்கையில், அறைக்கு வெளியே அன்று ஊரிலிருந்து வந்த அவள் தம்பியுடன் சயனித்துப் பேசிக்கொண்டிருப்பதைக்கேட்கிறுர் பிறகு தம்பி தூங்கிய உடனே, அப்போது தன் மனைவி தன்னருகே சயனிக்க வருவதைக் காண்கிறுர். என் உன் தம்பியிடம் படுத்து இரவெல்லாம் பேசிக்கொண்டு கிடந்தாய் என்று தன் மனைவியைக் கண்டிக்க முடிகிறதில்லை.

748—இன்று ஸ்டேஷனுக்கு வரவேயில்லையென்று போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் முறையிட, அதைப் போலீஸ் இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டு தன் வீட்டிற்குள் நுழைகையில், அங்கு 748-எண்ணுள்ள கான்ஸ்டேபிளைப் பார்க்கிறுர். தனது மனைவி மயக்கமாய்க் கிடக்க, கான்ஸ்டேபில் விசிறிக்கொண்டு அருகே உட்கார்ந்திருப்பதைக் காண்கிறுர். இன்ஸ்பெக்டரைக் கண்டதும், 'அம்மாவுக்கு இன்று 5, 6, தடவை விடாத மயக்கம் வந்தது' என்று ஆத்திரமாய்க் கண்ணீரோடு' கூறுகிறுன். அவன் அன்று வேலைக்கு வராததைப்பற்றிக் கண்டிக்க முடிகிறதா? அவனது அன்பில் இன்ஸ்பெக்டர் மயங்குகிறுர்.

மிருதுவான முட்கள்.

பிலாப்பழத்தின் முட்கள் எவ்வளவு கூர்மையா யிருப்பினும் அது குத்தி இரத்தம் வடிவதில்லை ஆயினும், அது முள்தான். அதன் மிருதுத்தன்மையானது அது முட்களாயிருந்தும் துன்புறுத்துகிறதில்லை. உள்ளன்புடையோரின் மிருதுத்தன்மை அவர்கள் எவ்வளவு கோபிப்பினும ஒரு கோபமாக மனதிற் படுவதில்லை. ஒரு சிறு குழந்தையைக் கண்டித்து எவ்வளவுதான் அடித்தபோதிலும், அடுத்த நிமிஷம் தன்னை யடித்த தாயாரிடமே கொஞ்சப்போகின்றது கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும் எதிர்த்துக்கொள்கிற கோப தாபங்கள் நீடித்து நில்லாமல் மிருதுவான முட்கள்போல் சீக்கிரம் சமாதானப் படுவதான மிருதுத்தன்மையடைந்து விடுகின்றன. காமத்தின் செயல்கள் கொடியதாயினும், துர்வியாதிகட்குக் காரணமாயினும், இல்லற வாழ்வில் அது சாந்தமும் மிருதுத்தன்மையும் கொண்டிருக்கின்றது. உபாத்தியாயரின் கோபமுட்கள் மாணவர்க்கு நலமே செய்கின்றது. வைத்தியரின் கசப்பு மருந்தான முள், வாந்தியையும் அருவருப்பையும் விளைவிப்பினும் பிணி தீர்த்து ஆரோக்கியப்படுத்துகின்றது. பிரசவ அவஸ்தை எத்தனையோ கொரேமான கதறச்செய்கிற முள் ஆயினும், புத்திர பாக்கியத்தை நல்கிடுகின்றது. உலகின் பாதையில் பிறரிடம் மிருதுவான முட்களாகவே நாம் நடப்பது நன்றாகும்.

நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களின்
மணிமகுட அமைப்பு.

உலகத்தை யாளும் இராஜாக்களுக் காயினும் இராணிகளுக் காயினும், அவர்கள் இராஜ்யாதிபத்தியத்தைப் பெற்றுக் கொண்டதற்கு நிதரிசனமாய், முதல் முதல் இராஜ சின்னமாகக் கிடைப்பவை இராஜ சிங்காசனமும் மணிமகுடமுமேயாம். அவ்வண்ணமே பூர்வ காலந் தொடங்கித் தேசங்களை யாண்ட மன்னர்கள் பரம்பரையாக முன்னோர்கள் பெற்று வந்த சிங்காசனத்தில் வீற்றிருந்து மணிமகுடங்களை முடியில் தரித்து அரசாக்ஷி செலுத்திவந்தனர். இக் காலத்து மகாராஜாக்களும் தம் அரசாட்சிக்கு அறிகுறியானகிரீடத்தைத் தரித்துக் கொண்டே ராஜ்யபரிபாலனம் செய்து வருகின்றார்கள். அவற்றுள் நமது தேசத்தை யாளும் ஜார்ஜ் மன்னர்பிரான் தமது ராஜ்ய பாலனத்துக்கு அறிகுறியாக முடியில் தரித்திருக்கும் மணிமகுடம் மிகவும் அற்புதமானது. இது விக்டோரியா மகாராணியாரும், அவருக்குப் பின் எட்வர்ட் சக்ரவர்த்தியாரும் அணிந்ததாகும். அதன் விலை கோடி ரூபாய்க்கு மேலும் ஓடுகின்றதென்று உத்தேசிக்கிறார்கள். அதில் அமைத்திருக்கும் ஒவ்வொரு ரத்தினமே அநே மாயிரம் ரூபாய் விலை பெற்றது. பழய கிரீடங்களிலும், மற்றும் பல உயர்ந்த ஆபரணங்களிலும் இருந்த சிறந்த நானாவித ரத்தினங்களைக் கொண்டு 1838-ம் ௵ செய்யப்பட்டது.

ஃ

இந்தக் கிரீடம் முத்து, வச்சிரம், மரகதம், மாணிக்கம், இந்திரநீலம் முதலிய மேலான ரத்தினங்கள் இழைக்கப் பெற்றது. இம்மணி முடியானது உள்ளே வெண்பட்டு வைத்துத் தைத்த சிவப்பு மஹமல் குல்லாவின் மேல் அமைக்கப்பட்டிருக்கின்றது. அம்முடியின் அடியிலே நவரத்தின் கசிதமான நெற்றிக்கட்டு ஒன்று உளது. அந்த நெற்றிக்கட்டின் கீழ் ஓரத்திலே 129-முத்துக்கள் அமைந்த ஒரு முத்துக் கோவையும், மேல் ஓரத்தில் 112-முத்துக்கள் அமைந்த ஒரு முத்துக் கோவையும் இருக்கின்றன. அவ்விரண்டு முத்து வரிசைகளுக்கும் மத்தியில் கிரீடத்தின் முன்புறத்திலே மிகப் பெரிதான இந்திரநீலமணி ஒன்று பதித்திருக்கின்றது. அந்த ரத்தினம் முழுவதும் செவ்வையாய்ச் சாணை பிடிக்கப்பட வில்லையாயினும், ஜகஜ்ஜோதியான காந்தி யுடையது. இந்த நீல ரத்தினம் 4-வது ஜார்ஜ்

1882-வருஷத்தில், புதுக்கோட்டை ராஜா இராமச்சந்திர தொண்டமான் பகதூர் அவர்களும், அவர் வம்ச பரம்பரையாரும் பதினொன்று குண்டு மரியாதையை அனுபவித்து வரும்படியும், இனி மேற்படி ராஜாவை மேன்மை தங்கிய என்று பொருள் படுகிற "ஹிஸ் ஹைனஸ்" என்ற பதங்களைத் தொடர்ந்து மகாராஜாவென்று வழங்கும்படியாகவும் சிறந்த பட்டப்பெயரை விக்டோரியா சக்ரவர்த்தினியார் அளித்தனர்.

அரசரின் ராஜ முடியில் அமைப்ப தற்காகவே வாங்கிய தென்கிறார்கள்.

ஃ

அந்த நெற்றிக்கட்டின் பின் புறத்தில் அவ்வண்ணமே ஒரு நீல ரத்தினமும், பக்கங்களில் ஒவ்வொரு பக்கத்துக்கும் மும்மூன்றாக ஆறு நீல மணியும், அவற்றின் இடையில் எட்டு வச்சிரக் கற்களும், அவ்வேழு நீல மணிகளுக்குக் கீழும் மேலும் 14-வச்சிரக் கற்களும். 8-மரகத மணிகளும், அம் மரகத மணிகளைச் சுற்றி 128-வச்சிரக் கற்களும் பதித்திருக்கின்றன. அந்த மரகத மணிகளுக்கும் நீல மணிகளுக்கும் இடையிலே 160-வைரக்கற்களும் அடங்கிய 16-சித்திரப் பூக்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. இந்த நெற்றிக்கட்டுக்கு மேலே எட்டு வச்சிர மணிகளால் சூழப்பட்ட எட்டு நீலமணிகளும், அவற்றின் இடையே 148-வைரங்கங் அடங்கிய எட்டு தோரணங்களும் சித்திரிக்கப்பட் டிருக்கின்றன.

ஃ

அந்த மகுடத்தின் மத்தியிலே முன் புறத்தில் வைரக்கற்களால் விசித்திரமான சிலுவை யொன்று சித்திரிக்கப்பட் டிருக்கின்றது. அச் சிலுவையின் மத்தியில் மிகவும் மேன்மை பெற்ற மாணிக்கம் ஒன்று உளது. அந்த மாணிக்கம் பல ராஜாக்கள் தரித்துக் கடைசியில் நமது விக்டோரியா மகா ராணியாருடைய இந்த மணிமுடிக்கு வந்ததென்கிறார்கள். அந்த மாணிக்கத்தின் மத்தியில் ஒரு ரந்திரம்செய்து, அந்த ரந்திரத்தின் நுனியில் மற்றொரு சிறிய மாணிக்கம் அமைத் திருக்கின்றனர். அதைச் சுற்றி 75-வைரக்கற்கள் இழைத்துச் சிலுவை உருவம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்,

ஃ

இவ்வாறு சிலுவை யுருவம் சித்தரித்திருப்பது மணிமகுடத்தின் முன்புறத்தில் மாத்திரமல்ல; அதற்கு நேராகப் பின்புறத்திலும் இரண்டு பக்கங்களிலுமாய்ப் பக்கத்துக்கு ஒவ்வொன்றாகப் பின்னும் மூன்று சிலுவை யுருவங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றின் மத்தியிலும் ஒவ்வொரு மரகத ரத்தினமும், ஒரு பக்கத்துச் சிலுவைக்கு 132-வைரமும், மற்றொரு புறத்துச் சிலுவைக்கு 124-ம், பின்புறத்துச் சிலுவைக்கு 130-ம் அமைக்கப்பட் டிருக்கின்றன. இந் நான்கு சிலுவைகளுக்கு இடையிடையே வில் வதனம் போன்ற நான்கு வடிவங்கள் சித்திரித்திருக்கின்றனர். அவற்றின் மத்தியில் நான்கு மாணிக்கங்களும், சுற்றிலும் முறையே 85-86-86-87-வச்சிர மணிகளும் இழைக்கப்பட் டிருக்கின்றன. அந்தச் சிலுவைகளுக்கு மேல் பல இலைகளும் காய்களும் அடங்கிய வளைவுகள் அமைந்திருக்கின்றன. இலைகள் பற்பல விதமான 728-வச்சிரக் கற்களும், காய்கள் 32-முத்துக்களும் அமைத்துச் செதுக்கப் பெற்றவை.

ஃ

எதுவும் அதது இருக்கவேண்டிய இடத்திலிருந்தால் தான் மதிப்புடன் விலை போகுமாம். இடம் பெயர்ந்தால் மதிப்பு கெடுமாம். விவாகமாகாத பெண் தான் இருக்கவேண்டிய பெரியவர்களின் பாதுகாப்பில் இருந்தால்தான் எவரும் விரும்பிவந்து கேட்டு விவாகமும் நடைபெறும். விற்கக்கூடிய கடையில் சரக்குகள் இருந்தால்தான் சரியான விலைக்குப்போகும். ரோமம், நகம், பற்கள், பெண், இடம் பெயர்ந்து வெளிப்படின் மதிப்பிழந்துபோம்.

அந்த வளைவிலுள்ள வைர மணிகள் மொத்தம் 783-எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த வளைவுகளின் உச்சியிலிருந்து, வைரக்கற்களில் அமைத்துக் கட்டிய நான்கு முத்து மாலைகள் தொங்குகின்றன. அவ்வளைவுக்கு மேலே நவரத்தின கசிதமாய்க் கிச்சிலிப் பழம்போல் உருண்டை வடிவமான ஒரு சிகரம் அமைந்திருக்கின்றது. அதன் கீழ்ப்பாதி 304-ரத்தினங்களாலும், மேல் பாதி 244-ரத்தினங்களாலும், நடு வலயங்கள் 33-வைரங்களாலும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வண்ணம் அதி அற்புதமாய் நியமிக்கப்பட்ட மணிமுடியின் சிகரத்தில் ஒரு சிலுவை யுண்டு; அதன் மத்தியில், நான்கு பெரிய வைரங்களாலும், 108-சிறிய வைரங்களாலும் சூழப்பட்ட நீலமணியொன்று பதித்திருக்கின்றது.

ஃ

இம்மணி மகுடத்திலுள்ள ரத்தினங்களாவன:—செவ்வையாய் உருவம் ஏற்படுத்தப்படாத பெரிய மாணிக்கம் 1, பெரிய நீலமணி 1. சிறிய நீலமணிகள் 16, மரகதமணிகள் 11, மாணிக்கம் 4, பலவகையான வச்சிரக்கற்கள் 2783, முத்துக்கள் 277—என்று சொல்லுகிறார்கள்.

ஃ

வெகு விசித்திரமாக நிருமிக்கப்பட்ட ஜகஜ்ஜோதியான இந்த ரத்தின கிரீடத்தைப் பார்த்தவர் வெகு சிலர் தான். ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களை அநேகர் பார்த்திருக்கலாமாயினும், அவர்களின் மணிமுடியைப் பார்த்திரார்கள். ஏனெனில், சக்ரவர்த்தியவர்கள் இம் மணி முடியைச் சிரசில் தரித்துக் கொள்வது ஏதோ சில காலங்களில் மாத்திரமே. இதைத் தலையில் தாங்குவது உலகத்தைத் தாங்குவதுபோல் வெகு பாரமாய் இருக்குமாகையால், சில ஸமயங்களில் சக்கரவர்த்தியாரின் சிரசில் தரிப்பதற்குப் பதிலாக முன்னே ஒருவர் கையில் தாங்கி நிற்பதுமுண்டு. வெளியே சவாரி போவது முதலிய மற்றக் காலங்களிலோ சாதாரணமான பிரபுக்களைப் போலவே சக்ரவர்த்தியாரும் ஒரு தொப்பியையே தரித்துக் கொண்டு போவது வழக்கமாகையால், அந்த ஸமயங்களில் சக்ரவர்த்தி யவர்களைக் காண்பவர்களுக்கும் அவர்களது மணிமுடியைக் காணக் கிடைப்பது அரிது. இம் மணிமுடியின் உருவமேதான் நமது தேசத்தில் வழங்குகிற ரூபாய் முதலிய நாணயங்களில் காணப்படுகிற சக்ரவர்த்தியாரின் சிரசில் அமைந்திருக்கின்றதாயினும், அது மிகச் சிறியதாயிருப்பதால், அதன் வடிவழகு நமக்கு இத்தனை தெளிவாய்த் தோன்றுவதில்லை. இந்த மாமணிமுடி என்றும் வாழ்க.

நன்கு படித்தவர்கள் நாற்காலி உத்தியோகம் தேடுவார்களேயன்றி, தொழிலில் புத்தியைச் செலுத்தமாட்டார்கள். 20-ரூபாய் சம்பளமானாலும், அதற்காகவே ஓடுவார்கள். பிழைப்பு கிடைக்காவிடினும், மாமியார் வீட்டிலும், மனைவியிடமும் காட்டிக்கொள்கிற முறுக்கு கிறுக்குகளுக்கும் அதிகார டம்பங்களுக்கும் குறைச்சலில்லை. அதிகம் படித்திருக்கிறோம் என்பதான கர்வ சிந்தையைத் தவிர, தாமே புதிதாக ஒரு தொழிலில் முயன்று முன்னுக்கு வரத்தகுந்த அறிவுக்கூர்மையைக் காணோம்!

17-ஸம்ஸ்கிருத மகா கவிகள்

—அவர்களின் ஜீவிய வரலாறு—

(839-ம் பக்கத் தொடர்ச்சி.)

17. ஸ்ரீ ஹர்ஷன்.

காச்மீரதேசத்தில் ஸங்கிராம ராஜா என்னொரு அரசன் கி. பி. 1003-ம் வருஷம் முதல் 25-வருஷம் வரையில் ஆண்டு வந்தான். இவனது காலத்திற்குப் பிறகு இவனது மூத்த குமாரனுகிய ஹரி என்பவர் பட்டத்திற்கு வந்து 22-நாள் ராஜ்ஜிய பரிபாலனம் பண்ணித் தமது தாயாராலேயே அகற்றப்பட்டார். அவருக்குப் பிறகு அவர் தம்பி அநந்தன் என்பவர் பட்டத்திற்கு வந்து 53-வருஷம் ஆண்டார். அநந்தனது குமாரர் கலஸன். அவர் பட்டத்திற்கு வந்து 78-வருஷம் ஆண்டார். கலஸனுடைய மகன் ஸ்ரீ ஹர்ஷன். கலஸனுக்குத் தமது குமாரனுடைய நடத்தை சரிப்படாமலிருந்தபடியால், தான் இறந்து போகும்பொழுது தமது ராச்சியத்தை உத்கர்ஷன் என்ற ஒரு மந்திரியிடம் ஒப்புவித்தார். ஆனுல், ஜனங்கள் அதை விரும்பாமல், கலஸன் இறந்த 22-ம் நாளில் ஸ்ரீ ஹர்ஷனையே ராஜாவாக நியமித்துக்கொண்டார்கள். ஸ்ரீ ஹர்ஷன் காச்மீர தேசத்தரசனுனது கி. பி. 1089-ம் வருஷம். அவ்வருஷம் முதல் கி. பி. 1101-ம் வருஷம் வரையில் இவர் ஆண்டுவந்தமையால், அக்காலத்திற்குள்ளாகவே தான் ரத்னுவளி முதலான நாடகங்கள் இவரால் இயற்றப் பெற்றிருக்கவேண்டும். ஸ்ரீ ஹர்ஷன் அநேக பாஷைகள் கற்றவரென்றும், கவிகளாய் நாடாளும் அரசர் முதலியவர்களுக்குக் கற்பகத்தருவென்றும், அநேக ஆதாரங்களால் நமக்குத் தெரிய வருகின்றது. சில அங்கிலேயர்கள், ஸ்ரீ ஹர்ஷன் ரத்நாவளி முதலான கிரந்தங்களை எழுதினவரல்லவென்றும், தாவகர் முதமுதலான சில கவிகள் அவைகளை எழுதி அரசனது பெயரைக் கிரந்த கர்த்தாவாக வைத்தார்களென்றும் சொல்லுகிறுர்கள். இது மிகவும் தப்பான அபிப்பிராயம். ஸ்ரீ ஹர்ஸன் ஆட்சி செலுத்திய காலத்தின் கடைசி பாகத்தில் பல சண்டைகளில் சிக்கிக்கொண்டு கி. பி. 1101-வது வருஷம் ஒரு யுத்தத்தில் மாண்டார். கிரீடாதிபத்தியம் வகித்தும் இடைக்கால மரணமே பிராப்தமானது. இவருவருடைய தாயார் பெயர் சூர்யவதி. இந்த அம்மாள் தன் குமாரன் மேல் அதிக பிரீதி பாராட்டி வந்தவளாதலால், அவன் இறந்து விடவே சகிக்கக் கூடாத துக்கத்தில் மூழ்கினவளானுள். இவள் மனக் கவலையை மாற்றுவதற்காகவே சோமதேவர் "கதாசரித் சாகரத்தை" எழுதினது. "இரத்நாவலி" நாடகத்தில் ஸம்ஸ்கிருத பாஷையின் அழகு மிகவும் அதிகம்.

17-ஸம்ஸ்கிருத மகாகவிகள்
வரலாறு முற்றிற்று.

துரௌபதி கூந்தல் முடித்தல்.

—மஹா பாரதப் போரின் சுருக்கம்—

(872-ம் பக்கத் தொடர்ச்சி.)

VI

இவ்வாறிருக்கையில் போர்க்களத்திலே பீமசேனன் துரியோதனனைக் கொன்று விட்டு யுத்த வெற்றி பெற்று அந்த உதிரத்துடனே தான் முன்பு செய்த பிரதிக்கினைப்படி துரௌபதியின் கூந்தலை முடிக்கவேண்டுமென்று பேரிரைச்சலாய் அட்டகாசம் செய்து துரௌபதியைத் தேடிக்கொண்டு ஓடிவந்தான். வெகு தூரத்திலிருந்து அவனைப் பார்த்த கஞ்சுகி, பீமார்ச்சுனர்களைக் கொன்று விட்டுத் துரியோதனனே ஓடி வருகிறானென நினைத்து அதைத் தரும புத்திரரிடம் தெரிவிக்க, அவர் அர்ச்சுனனும் மாண்டு போனதாய் எண்ணிப் பின்னும் அதிகமாய்ப் புலம்பலானார். அச்சமயத்தில் பீமசேனன் அதிக சமீபமாக வந்து துரௌபதியைக் கண்ணுற்று, இதோ நான் வந்து உன் கூந்தலை முடிக்கிறேன் என்றுகூற, துரௌபதி பயத்தினால் பீமன் கூறியது செவியிற் படாமல் துரியோதனன் என்றே அவனை நினைத்து, அவன் தன்னைப் பிடித்து மானபங்கப் படுத்துவதற்கு முன்னமே தீக்குளித்து விடவேண்டுமென்று துரிதப்பட்டாள்.

∴

அதைக்கண்டு தருமபுத்திரர், நீ பயப்படாதே; இதோ நான் இவனைப் பிடித்துக் கொன்று விடுகிறேன் என்று சொல்லி, அவன் கிட்ட வந்தவுடனே அவனைப் பிடித்து இறுக்கிக் கட்டிக்கொண்டு, அடா துஷ்டா, துரியோதனா, குலத்தை யழிக்க வேர்ப்புழுவாய்ப் பிறந்த கொடியோனே, இதோ உன்னைக் கொன்று விட்டு மறுவேலை செய்கிறேன் என்று அதிக கோபத்துடன் கூற, பீமன் தன்னை அவர் துரியோதனனென்றெண்ணிப் பயந்திருப்பதாய் அறிந்து, ‟அண்ணா! இதென்ன? துரியோதனன் இன்னும் இவ்வுலகிலிருக்கிறானோ, அவன் பெயர் ஒன்றுதவிர, மற்றவை யாவும் அழிந்து போயினவென்பது தமக்குத் தெரியாதோ? அவனுடல் நாய் நரி பிடுங்கப் போர்க்களத்தில் கிடக்கின்றது. பீமசேனன் அவனைக் கொன்று துரௌபதியையும் தங்களையும் சந்தோஷிப்பிக்க இதோ வந்து நிற்கிறானென்று பலவாறு சொல்லித் தேற்ற, அவர் பலதரம் உற்றுப் பார்த்துப் பிறகு பீமசேனன் எனத் தெரிந்து கொண்டு, மிகவும் மகிழ்ச்சிகொண்டு அவனைக் கட்டி அணைத்து ஆநந்தக் கண்ணீர் பெருகினார். உடனே பீமன் துரௌபதியினிடம் சென்று அவள் கூந்தலை முடித்துத் தன் பிரதிக்கினையை நிறைவேற்றினான். அச்சமயத்தில் வானவர்கள் ஆகாயத்தினின்றும் வாத்திய கோஷம் செய்து புஷ்ப வருஷம் வருஷித்தார்கள்.

∴

இதற்குள் கிருஷ்ணனும் அருச்சுனனுடன் அவ்விடம் வந்து தர்ம புத்திரருக்கு மரியாதை செய்து, பட்டாபிஷேகத்திற்கு வேண்டியவை யாவும் சித்தமாயிருக்கின்றன, வியாசர்,வால்மீகி, ஜாபாலி முதலிய முனிவர்களும் மற்றும் ராஜகுமாரர்களும் தமது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; இதற்கிடையில் சார்வாகன் ஏதோ தம்மை வஞ்சனை செய்ய வந்ததாய்க் கேள்வியுற்றுத் தம்மைப் பார்க்க ஓடி வந்தோம்; நகுலன் சார்வாகனைப் பிடித்துக் கொண்டான் என்று சொல்லி அவரைக் களிக்கச் செய்தார். பிறகு, கிருஷ்ணன் கூடவே இருந்து வேத விபவமாகத் தர்மபுத்திரருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

ஃ

தர்ம புத்திரர் கிருஷ்ணனை நோக்கி, "கிருஷ்ணா, தமது ஸஹாயத்தாலே நாங்கள் ஐவரும் பிழைத்தோம். பண்ணின பிரதிக்ஞைகளையும் நிறைவேற்றிக் கொண்டோம். முக்கியமாய்த் துரௌபதியின் மனோரதம் முற்றிலும் நிறைவேறி விட்டது. இனிமேலும் ஜனங்கள் தீர்க்காயுசுக்காரர்களா யிருக்கவும், ராச்சியம் நிருபத்திரவமா யிருக்கவும், தம்மிடத்தில் எங்களுக்கு பக்தி என்றைக்கும் மாறாதிருக்கவும் அனுக்கிரகம் செய்யவேணுமென்று பிரார்த்தித்தார். கிருஷ்ண பகவானும் அப்படியே ஆகட்டுமென்று அனுக்கிரகித்து, அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு துவாரகாபுரிக்கு எழுந்தருளினார்.

ஃ

தருமபுத்திரர் மனுநீதி முறை வழுவாது அரசு செலுத்திக்கொண்டு, தம்பிமார்களுடன் திருதராஷ்டிரன், காந்தாரி இவர்களைப் பிள்ளைகளை விடப் பதின் மடங்கு அதிகமான ஆதரவுடன் பாதுகாத்துக்கொண்டு, தங்கள் தாயாகிய குந்தி தேவியுடனே அஸ்தினாபுரியில் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தார். சுபம்.

துரௌபதி கூந்தல் முடித்தல்
முற்றிற்று.

உண்ணச் சோறில்லாதவன் உணவை விட்டுவிட்டு உபவாசம் இருப்பது தியாகமன்று; தங்க இடமின்றித் தவிக்கும் ஒருவன் வீடின்றித் திரிவது தியாகமல்ல. பணமில்லாதவன் சுகங்களையும் போகங்களையும் விட்டிருப்பது தியாகமல்ல; போகபாக்கியங்கள் அனைத்தையும் அனுபவிக்கும் ஒருவன் அவைகளைத் தள்ளி யொழித்துத் துறவிபோல் நிற்பதே உண்மையான தியாகமாகும்.

கட்டுரைகள் நீண்டுவிடுவதும், கதைகள் பல பக்கங்களுக்கு வளர்ந்து விடுவதும் வாசகர்களுக்குப் படிக்க சிரமமா யிருக்கிறதாய் முறையிடுவதாக நமது சகோதரப் பத்திராசிரியர் ஒருவர் தம் பத்திரிகையில் குறிப்பிடுகிறார். "இன்னும் வரும்" என்று பல பகுதிகளாய் வெளியிடின் அதில் தாகம் தீரப் பருகிச் சுவைக்க முடியவில்லை யென்கிறார் ஒரு சாரார். ஒன்றிரண்டு பத்திரிகையில் முடிக்க—நீண்டதாகப் பிரசுரிப்பனே ஒரே விஷயம் இத்தனை பக்கமா என்கிறார்கள் மற்றொரு சாரார். ஆதலின், அழகு கெடாமல், வளர்ப்பின்றி விஷயத்தையே சுருக்கிப் பிரசுரிக்க இயன்றவரை முயலுதல் அவசியமாகிறது.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

எந்தச் சூரியோதயம் நல்லது? எது கெட்டது?



விகடன் இரவிலே எழுதிக்கொண்டிருக்கையிலே, "எந்தச் சூரியோதயம் நல்லது? எது கெட்டது? என்கிற கேள்வியொன்று புதிதாகத் திடீரென்று எழுந்தது? ஒன்றை எழுதிக் கொண்டிருக்கையிலேயே இன்னொரு யோசனை யுண்டாவதும் இந்தப் படித்த கூட்டத்துக்கே எப்போதும் வழக்கந்தான்." எந்தச் சூரியோதயம் நல்லது?—எது கெட்டது" என்று விகடன் என்னையே கேட்டுக்கொண்டேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக முடிந்து தீருகிறது. ஒவ்வொரு தினத்துச் சம்பவங்களும் ஒவ்வொரு தினுசாயிருக்கிறது. கண்ணீருடனே, சந்தோஷத்தோடோ, லாபமாகவோ, நஷ்டமாகவோ எப்படியோ ஒருதினம் முடிந்துபோய் விடுகிறது; பிறகு இருளும் சூழ்கிறது. இரவு பன்னிரண்டுமணியும் கடந்து அப்பால் புது நாளும் பிறக்கிறது. எப்போதுமே புது நாட்கள் இரவில் தான் உதிக்கின்றன. பிறகு மணியும் மூன்று நான்குக்கு எட்டி ஐந்துக்கு வரும்போது சூழ்ந்து நின்ற இருளும் ஓடத் தொடங்குகின்றது!

ஃ

எவ்வளவு வேகமாய் அந்த இருள் ஓடத் தொடங்குகிற தென்கிறீர்களோ? விகடன் இதைஎழுதிக்கொண்டிருக்கையிலேயே இருளும் மறைந்து வெளிச்சம் தோன்றவும் ஆரம்பித்துக் கொண்டதால், அந்த இருள் ஓடின ஓட்டத்துக்கு சில உதாரணங்களைத் தருகிறேன். கச்சேரி உத்தியோகஸ்தர்கள் பொழுதாய் விட்டால் ஓடிப் போகிறது போல இருளும் ஓடிற்று! வீதியில் மேளதாளத்துடன் ஊர்வலம் வந்தால் சிறுவர்கள் எவ்விதம் ஓடுவார்களோ—ரமணீயானவள் புஷ்பவதியானால் அவளுடைய ரூபத்தின் லக்ஷண காந்தியானது நான்கு திக்குகளுக்கும் எப்படி வியாபிக்கிறதோ—புஷ்பத்தினுடைய ஸுவாஸனையானது குளிர்ந்த காற்றுப்பட்ட மாத்திரத்தில் நானா திக்குகளுக்கும் எப்படி விரைவில் போகிறதோ—நதிக்கரையில் இருக்கும்போது இருட்டி விட்டால் குலஸ்திரீகள் பாதி அச்சத்தி

ஞல் தங்களுடைய சுந்தரமான முகத்தை மூடிக்கொண்டு மாமியார் நாத்தனுர்களுடைய திரஸ்கார பயத்தினுல் வீட்டின் பக்கமாய் எப்படிச் சீக்கிரமாய் ஓடி நடந்து போகிருர்களோ—வக்கீல் பிரபுக்கள், அவர்கள் ஆசையைக் காட்டிலும் கக்ஷிக்காரர்கள் அதிக பீஸ் கொடுத்ததால்,—அப்படிப்பட்ட ஸம்பவமே எங்கும் கிடையாதானுலும் திடீரென்று அப்படி நேர்ந்து கொண்டால்,—எப்படி மனச் சந்தோஷத்துடன் சீக்கிரமாய்க் கோர்ட்டுச்குப் புறப்படுவார்களோ—புதியதாய்க் கல்யாணமான (முதல்) பெண்டாட்டி அபாயமான வியாதியில் பிராண பயத்திலிருப்பதாகச் சமாசாரம் தந்தி வந்தால், அன்னிய நாட்டில் இருக்கும் கணவன் தன் தேசத்தின் பக்கமாய் எப்படித் தடபுடலாய்ப் புறப்படுவானே—எங்கேயானுலும் ஒரு வேலை காலியானுல் மனுக்கள் மஹா வேகத்தினுல் எப்படிப் புறப்படுகிறதோ—யாராவது ஒரு பெரிய மனுஷ்யருடைய புத்திரர்கள் பெரிய பதவிக்கு வந்தால் அவர்களுடைய தந்தையார் உண்ணுமல் தின்னுமல் பாடுபட்டுச் சேர்த்த பணக்குவியல்களான து ஷாப்புக் கடைகளுக்கும் தாஸி வீடுகளுக்கும் டம்பச் செலவுகளுக்கும் எப்படிச் சந்தோஷத்துடனும் ஓடுகிறதோ—அன்றியும் அவர்களுடைய தரிசனைப் பிரார்த்தனைகளுக்காக எப்படி மேல் மூச்சினுல் பலரும் ஓடிவருவார்களோ—புஷ்பமானது மலர்ந்தால், அதன் ரஸத்தைக் குடிக்க விரும்புகிற ஆசையினுல், வண்டுகள் எப்படி ரீங்காரம் செய்துகொண்டு பறந்து ஓடுமோ—புதிதாய்க் கல்யாணமானவளுடைய புருஷன் தாய் வீட்டிற்குச் சென்றிருக்கும் தன் மனைவியை அழைத்துவர, அவள் பிரிவாலும், மதன விகாரத்தாலும் வருந்தி எப்படி மாமனுர் வீட்டை நோக்கி அவசரத்தினுல் ஓடுவனே—பெரிய கடை வீதிகளில் சரக்குகளுடைய சொந்தக்காரர்கள் போய்க்கொண்டிருந்தால் தரகர்கள் நடுவழியிலேயே அநேக நய வார்த்தைகளைச் செலவு செய்துகொண்டு எப்படி அவர்கள் பின் தொடர்ந்து ஓடுவார்களோ—கச்சேரியில் துரையார்கள் நேரில் வந்து சொந்தமாய் மேற்பார்வை பார்க்கும் போது ரைட்டர் குமஸ்தாக்களுடைய பேனக்கள் அக்ஷரங்களைக் கடிதங்களின்மேல் சரசரவென்று சப்தம் செய்துகொண்டு எப்படிப் புறப்படுகின்றனவோ—எங்கேயாவது சிரார்த்தாதிகள் ஆனுல், பிராமண மஹா ஜனங்களுடைய பிரவாகமானது எப்படி வேகத்துடனும் பேராசைகொண்டு செல்கின்றதோ—பழிப்பு வார்த்தைகள் காற்றைவிட முன்னுல், எப்படி ஜனங்கள் வாயினின்றும் முன் பின் யோசனை யில்லாமல் வெளிப்படுகின்றனவோ—நூது சாந்தி தம்பதிகளுடைய முதலும் கடைசியுமில்லாத பேச்சுக் கதைகள் ஸய்யாக்கிரகத்தினுள்ளே கொசு வலைக்குள் ராத்திரியெல்லாம் பூர்த்தியாகாமல் எப்படிப் புறப்பட்டுக் கொண்டிருக்குமோ—பயணத்திலே மேகத்தினுல் மூடப்பட்ட ஆகாசத்தைப் பார்த்தவுடன் பயணம் செய்பவர்கள் தமதிருப்பிடத்தைத் தேடிக்கொண்டு எப்படி ஓடிப் போவார்களோ—வீதியில் குரங்காட்டி மற்றும் தெம்மங் கூத்தாடிகளுடைய ஆட்டத்திற்கு மத்தள சப்தம கேட்டால், அந்தப் பக்கத்திற்குக் குழந்தைகள் உற்சா

ஒரு சீமான் ஒரு ஏழையை வைதாலும், அது நியாயந்தான் என்று கூறிக்கொண்டு அந்த சீமானின் புன்சிரிப்பில் குளிர் காய்கிவர்களுமிருக்கிறார்கள்.

கத்தினல் எப்படி ஓடிப்போவார்களோ—சீட்டாட்டத்திற்கு உட்கார்ந்தால், அசட்டு அம்மாஞ்சியினுடைய துட்டுகளெல்லாம் எப்படிக் கைவிட்டுக் காலியாகுமோ—புவதியான பதிவிரதையினுடைய தேகம் பாரமானல், பதியினுடைய சரீரத்திலெல்லாம் எப்படி வியர்வை வெளிவந்து ஓடுமோ—எலெக்ஷன் சமயத்தில் கமிஷனர் ஆகவேண்டுமென்று அபேக்ஷிக்கிறவர்களெல்லோரும் ஆகாசத்தை வில்லாய் வளைப்பதாயும், மணலைக் கயிருய்த் திரிப்பதாயும், வெகு ஜன உபகாரம் செய்வதாயும், வசீகர வார்த்தைகளை வேண்டியமட்டும் கொட்டிக்கொடுத்துக் கொண்டு ஓட்டுக்காக ஜனங்களுடைய வீட்டுப் பிரதிவாசல்களுக்கும் எப்படிக் கையில் லாந்தர்களைப் பிடித்துக்கொண்டு ஓடிப் போகிருர்சளோ—ஆகாசத்தில் பூர்ணசந்திரன் சிரிப்பதைப் பார்த்தால், கோகிலங்கள் பஞ்சம ராகமான "கூ கூ" சட்தத்தைக் கேட்டால், வசந்தகாலத்துத் தென்றல் காற்ருனது தேகத்தில் ஸ்பரிசமானல்—பட்டால், உடனே விரகிணியின் மனமானது தனது ஏகாந்தத்தை மிகுதியும் நொந்து கொண்டு மதன விகாரத்தால் தூரவாஸியான பதியைக் குறித்து; அல்லது விரகனுடைய மனமானது வெகு தூரதிலிருக்கும் தனது விரகிணியை. காதலியைக் குறித்து எப்படி வியாகூலத்தினல் எப்படி விடர்த்தமாய் நாடித் தேடி ஓடிப்போகிறதோ—அது போலவே இருளும் விகடனை விட்டு நீங்கி வெகு சீக்கிரமாக ஓடிற்று; ஓடியே போயிற்று.

ஃ

இங்ஙனமாக, இருள் ஒழிந்து போய்விடவே, பால சூர்யன் கீழ் திசையின்கண்ணே மிகு உற்சாகத்துடனும் தோன்றினன். சூரியன் உதயமானல் யாருக்கு ஆநந்தம்? யாருக்குத் துக்கம்? எந்தச் சூரியோதயம் நல்லது? எந்தச் சூரியோதயம் கெட்டது? இதுவே விகடனின் மனத்தில் எழுந்த கேள்வி! இதற்கு இனி விடையும் சொல்லுகிறேன்.

ஃ

ஆநந்தம் யாருக்கு? புதிதாய்க் கல்யாணமான யுவகனுக்கு; என்னத்திற்கு: அவன் எப்போது என்று எதிர்பார்த்துப் பரிதாபமாய்க் காத்து நிற்கின்ற அவனுடைய கன்னிகைப் பருவமுள்ள மனைவிக்கு நவயௌவனத்திற்காக வேண்டிய வயதில் ஒரு நாள் அதிகமாச்சுது. இன்னும் யாருக்கு? கடன் கொடுத்தவனுக்கு; என்னத்திற் சென்ருல், ஒரு நாள் வட்டி ஏறிற்று. இன்னும் யாருக்கு? ஒரு வாரத்தில் திரும்பி வருகிறேனென்று சொல்லிப்போன அந்நிய தேசஸஞ்சாரியான யுவகனுடைய காதலியாகிய யுவதிக்கு; ஏனென்ருல், கணவன் பின் தன்னி

சிறந்த காரணங்கள் சிறந்த செய்கைகளுக்கு மூல காரணங்களாகின்றன. அவரவர்களின் மேன்மையான குணத்துக்குத் தக்கபடியே நண்பர்களும், காரணங்களும், நல்வாழ்வும், நல்லொழுக்கமும் அமைகின்றன மனைவி தனக்கு ரதிசுகமளிக்க மறுப்பினுங்கூட அன்னிய மாதரை நினைக்கப் புத்தி போகாத உத்தமர்களும் எத்தனையோ பேர். ஒரு எல்லை, ஒரு கட்டுப்பாடு இவைகளுக்குள் நிற்பதற்குத் தங்களைப் பக்குவப்படுத்திக்கொண்டோர் எஞ்ஞான்றும் அந்த எல்லையின் நிதானத்தைத் தாண்டி மீறி அப்பாற் செல்லவோ, தவறு வழியிற் புகவோ மாட்டார்கள். அது அன்னோர் கொண்ட உறுதிப்பிடியாகும்.

டத்திற்குத் திரும்பிவரும் நாளில்ஒரு தினம் இன்று குறைந்து போயிற்று. அவன் வந்ததும் முன்போல் ஆநந்த மடையலாம். இன்னும் யாருக்கு? தாயாருக்கு; ஏனென்றால் அவளு டைய கைக்குழந்தை ஒரு தினம் வய தில் பெரியதாயிற்று. இன்னும் யா ருக்கு? ஜெயிலி லிருக்கும் திருட னுக்கு; என்னத்திற்கு? அவனுடைய தண்டனையில் ஒரு நாள் குறைவு பட்டது

ஃ

துக்கம் யாருக்கு? தினதுக்கி களான தரித்திரர்களுக்கு; என்னத் திற்கு? இன்றைபதினம் வயிற்றில் மறுபடியும் பசி யுண்டாயிற்று. இன் னும் யாருக்கு? கடன் வாங்கியவ னுக்கு; ஏனென்றால், தினம் தோன் றியதும் கடனின் பாரம் அதிகமா யிற்று இன்னும் யாருக்கு? துஷ்ட புத்தியுள்ள பாலகர்களுக்கு; என்னத் திற்கு? தாயார் தகப்பனூர்கள் மறு படியும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பு வார்களானதால். இன்னும் யாருக்கு? ரூபவதியான யுவதிக்கு: என்னத் திற்கு? அவளுடைய யௌவனத்தில் ஒரு நாள் குறைந்து விட்டது. இப் படியாக யாருடைய சுக துக்கங்களை யும் கவனியாமல் பிராதக்காலமானது (அதாவது விடியற் காலமானது) பூ மண்டலத்தைச் சந்திக்க சீக்கிரம் சீக்கிரமாய் நெருங்கியது.

ஃ

எல்லா சூரியோதயங்களும் சம மாகவே இருக்கும். நேற்றுப் பிர காசித்த அதே சூரியன் இன்றும் வழக்கம்போல் கீழ் திசைச் சிகரம் வந்து, சிறிது சிறிதாகத் தனது அக் கினி அவதாரத்தை எடுத்துக் கொண்டு கிரமமாக மேற்குப்புறம் புறப்பட்டுப் போகிறுன். எல்லா சூர்யோதயங்களிலும் புஷ்பங்கள் மலர்கின்றன. தினம் போல் குளிர்மையான காற்று வீசு கின்றது. அதே சூர்யனுடைய ஸ்வர்ணமயமான கிரணங்கள் பிரகா சிக்கின்றன. இப்படி இவை எப்போ தும்போலவே ஒன்றாக இருந்தாலும், ஒரு சூரியோதயத்துடன் இன் னொரு சூரியோதயம் சேர்ந்து ஒரு மித்துப் போகாததற்கு என்ன காரணம்?

ஃ

கழிந்துபோன நேற்றைய சூர்யோ தயத்தில் யார் நூறாயிரம் தாஸ தாஸிகளினுல் ஸேவிக்கப்பட்டு, அபரி மிதமான ஐச்வரியமுடையவர்களாகி, ஏராளமான யானை, குதிரை வாக னுதிகளில் ஏறி, விரித்த கையுடன் தரித்திரர்களுக்குத் தானம் செய்து கொண்டிருந்ததைப் பார்த்தோமோ; அவரை இன்றையதின சூரியோதய காலத்தில் பார்த்தால் அந்த மகா புருஷன் யாதொரு சகாயமுமில்லா மல், வறுமையாளனுய்க் கிழிந்த துணி களை யுடுத்தி வெறுங் கால்களினுல் நடந்து, கால்கள் பாளம் பாளமாய் விரிந்து, பணக்காரர்களுடைய வாசல்கள்தோறும் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கின்றுன். கழிந்துபோன நேற்றைய சூர்யோதய காலத்தில் யார் கெட்டியாய்ச் சிரித்துக்கொண் டிருந்ததைப் பார்த்தோமோ, இன் றைய சூரியோதயத்தில் அதே மனுஷ் யன் இறைந்த குரலுடன் ஆகாசத்தை

வழியில் ஒவ்வொரு பெண்ணைக் காணும்போதும்—இவர்கள் தம் கணவர்களால் எவ்வளவு வருத்தப்படுகின்றனரோ—என்ற எண்ணம் மேலிடுகிறது. ஏனெனில், சில ஆடவர்களின் இரும்பு நெஞ்சத்தைக் கண்டுள்ளவர்களின் மனம் அவ்வாறு நினைக்க வைக்கிறது.

எட்டும்படியாக அழுதுகொண்டிருக்கிறான். கழிந்துபோன நேற்றைய சூரியோதயத்தில் பரம ஸாது, பரம ஹம்ஸனென்று தெரிந்து யாருக்கு நமஸ்காரத்தைச் செய்துகொண்டிருந்தோமோ. அந்த மனுஷ்யன் இன்றையதினம் என்னமா யிருக்கிறான்? நேற்றுப் பார்த்ததுபோல் இல்லை; அவன் ஸ்திரீ லோலனாய் கேளீ* ஸரோவரத்தில் மூழ்கி எழுந்திருக்கிற அம்லனாய் இருக்கிறான். கழிந்துபோன நேற்றையதினம் யார் பரம ஹிந்துவாய் ஸநாதன ஹிந்து தர்மத்திற் பிரவர்த்தகனாய் இருந்தானோ, அவனை இன்றைய சூரியோதத்தில் பார்த்தால்; அவன் ஒரு அன்னிய மதத்தைத் தழுவியவனாகி, அவனது வீட்டு வாசலில் அன்றைய அவனது காலை உணவுக்காகவென்று பட்லர் மாம்ஸ ஆகாரத்தட்டைப் பிடித்து நின்றுகொண்டிருக்கிறான். கழிந்த தினம் காலையில் நாநாவித சாஸ்திர ஸம்பந்தமான யுக்திகளைச் சொல்லிக்கொண்டு, சாஸ்திராலோசனை செய்து கொண்டிருந்த பிராமண சிரேஷ்டனை இன்று காலையில் பார்க்கும்போது, அவன் ஐரோப்பியன் "பஸ்ட் கிளாஸ்' ஹோட்டலில் மேஜையின் முன்புறம் உட்கார்ந்துகொண்டு வாடின முகமுள்ளவனாய், பிராமணனென்று கண்டு பிடிக்கவும் கூடாதவனாய், தன் தேஜஸ் முற்றிலும் இழந்து நிகிருஷ்டமான மாம்ஸ ஆகாரத்திலும் குடிவெறியிலும் மயங்கியவனாய்க் காணப்படுகிறான்.


ஒரு சூரியோதயத்திற்கும் இன்னொரு சூரியோதயத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்? ஒரு சூரியோதயத்தில் விவாகமாகாத கன்னிகை! மற்றொரு சூரியோதயத்தில் மணமாலை சூடிய மணமகள்! ஒரு சூரியோதயத்தில் கர்ப்பத்திலுள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பது தெரியாதிருந்தது! மற்றொரு சூரியோதயத்தில் குழந்தை பிறந்து ஆண் பெண் விவரம் தெரிந்து விட்டது! இவ்விதமே. ஒவ்வொரு சூரியோதயமும் நல்லதும் கெட்டதும்—சந்தேகமும் தெளிவும்—இன்பமும் துன்பமும்—கலகமும்—சமாதானமும்—ஆக இரு தன்மையுடனேயே கலந்துகொண்டிருப்பதிலே, விகடன் எந்தச் சூரியோதயம் நல்லது?—எந்தச் சூரியோதயம் கெட்டது?—என்பதை நிச்சயிக்கக் கூடவில்லை. உலகத்தாரின் மனப்போக்குக்கும், அவரவர்களுக்கு நேரிடுகிற இன்ப துன்பங்கட்கும் தக்கபடி சூரியோதயத்தை நல்லதாகவோ கெட்டதாகவோ சொல்லிக் கொள்ளுகிறார்களென்றே விகடனுடையயோசனைக்குத் தோன்றுகிறது! அவரவரது மனப்பான்மைக்குத் தக்கபடியே நல்லது—கெட்டது எதுவும் தோற்றும்படியா யிருக்கும் போலும்! ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!

"அமிர்தினி"—"விகடப்பிரதாபன்" இவ்விருவருடையவும் பத்தாம் ஆண்டின் புது சந்தாவை இன்றே மணியாடர் செய்யுங்கள்.

ஃ

சிலர் பிறருடைய சமாசாரங்களை நோண்டி நோண்டி விசாரித்துத் தெரிந்துகொள்கிறவர்களாகவே இருக்கிறார்களேயன்றித் தங்களின் சொந்தச் செய்திகளை வெளியிடுவதே யில்லை. இது ஒரு கபட சமர்த்து.

ஒரு காரியத்தின் முடிவு எப்படியோ! அது ஈசன் செயல். ஆனால், நாம் வெற்றி பெறுவோமென்ற துணிவுடன் வேலை செய்வதவசியம்.



ராமசாமியைப் பார்ப்பதற்காக அவன் வீட்டிற்குக் கிருஷ்ணசாமி வந்து நாலு நாள் தங்குகிறான். கிருஷ்ணசாமியை வழியில் ரெங்கசாமி கண்டு அவனும் அவனோடு தங்குகிறான். ரங்கசாமியை முத்துசாமி பார்த்து எப்போது இங்கு வந்தாயென்று விசாரித்துவிட்டு, தன் மனைவி மக்களோடு அவனும் வந்து குந்துகிறான். எந்த இடத்திலே இலவசமாய் ஆக்கிக் கொட்டுகிறார்களோ அங்கே கூட்டமும் குசுவும் கூச்சலும் அதிகமாகுமாம்!

வட்டிக்கு ஆசைப்பட்டு அறிவு மறந்து, பொருளைத் தந்து, பட்டினி கிடந்து நான் பரிதபிப்ப தெக்காலம் என்கிறார் ஒரு விகடகவி!

கல்யாணமானதும் எல்லோரையும் துரத்திவிட்டு, நானும் என் மனைவியும் தனிக் குடித்தனம் செய்யப்போன இரண்டாம் மாதத்தில், என் மனைவி, "நீ வீட்டிலேயே உட்கார்ந்திருக்கிறாய், செலவுக்குப் பணம் காசு தருவதில்லை, புஷ்பம் வாங்கவும் முடியவில்லை, உன்னிடத்திலிருக்க மாட்டேன்" என்று அடுத்த தெருவிலுள்ள தன் தாய் வீட்டுக்கு ஓடி விட்டாள் என்று ஒருவர் விகடனிடம் சொல்லிக்கொள்ள, அதற்கு விகடன், உன்னூரில் பெண் எடுத்தாலே இப்படி ஓட்டமாகத்தான் இருக்கும்; தூரத்து ஊரில் பெண் பார்த்திருந்தால் இப்படி இராது; மேலும், பெண் ஒரு மாமியின்கீழ் இருந்தால் தான் அடங்கி நடந்து ஒழுங்குக்கு வருவாள்; அப்படி யில்லாவிடில் மீறிய மனப்போக்குதான் என்று பதில் சொல்லி யனுப்பினனாம்!

ரொம்ப ரொம்ப செட்டும் தரித்திரமுமாக நடந்து கொண்டால், பெண் குழந்தைகளே அதிகம் பிறந்து பிறகு பெரிய செலவுகளை வைப்பார்களாம்!

முதலில் ஒருவர் தருவதாகச் சொன்னது நாள் ஆக ஆக இல்லையென்றாகி விடுமாம்!

ஒரு பெண்ணை அதிகாரம் செய்ய வகையற்றவர்கள்தான், அந்தப் பெண்ணுக்கு மிகவும் வேண்டியவர்கள் போல் பிரியம் காட்டுவார்களாம்!

சமையல் ஆகிற இடத்திலேயே புசித்தால் அங்கு நடக்கிற கலகம் சண்டைகளெல்லாம் பார்க்கும்படியாகித் தானும் அதில் சம்பந்தப்பட வேண்டி வருமாம்!

தனக்கு எண்ணெய்ச் செலவு இல்லாதிருக்கத் தான் விருந்துக்குப் போகிற வீட்டிலேயே எண்ணெயிட்டு ஸ்நானம் செய்து வந்து விட வேண்டுமாம்!

தாசியைத் தாசி என்றாலும், மலடியை மலடி என்றாலும் உடனே கோபம் வருமாம்!

கோயிலுக்கு ஒரு வீட்டை எழுதிவைத்தால், அதில் கோயில் குருக்கள் குடி வந்து பிறகு வீட்டையே விழுங்கி விடுவாராம்!

செல்வம் வந்துற்றபோது தெய்வமும் சிநேகமாகுமாம்!

நல்ல வாழ்விலிருக்கும்போதே தன் பெண்ணை நல்ல இடத்தில் கொடுத்துவிட வேண்டுமாம்!

கல்யாண வீட்டிலே ஒரு நகையைத் தந்தவர் மறந்தால், வாங்கினவர் கொடாராம்!

சந்திரனில்லா இரவும், சமுசார ஒழுங்கில்லாத வீடும், நெய்யில்லா சாதமும், தாம்பூலமில்லாத விருந்தும், அடியுதை இல்லாத வாழ்வும், தொந்தியில்லாத ரூபமும் பயன்படாதாம்!

மங்களவல்லி

"இது நியாயமா?" என்று தான் எல்லோரும் கேட்கின்றனர். பிடிவாதக்காரருக்கு நியாயம் எப்படி விளங்கும்? கருணை எப்படித் தோன்றும்? சதானந்த முதலியார் தமது ஆநங்கத்திற்கு இடையூறாக எவர் எது கூறினாலும், ஊர் முற்றிலுமே தூற்றினும் அதற்கெல்லாம் செவி கொடுப்பவரல்ல. தாம் பிடித்த பிடியை நிறைவேற்றியே தீருவார். அதற்கான செல்வத் திமிரும் அவருக்கு இருந்ததால் "பணமே பலம்" என்பது சரியாயிற்று. அவர் பத்து வருஷங்களுக்கு முன்பு மோகனா என்ற தாசியை வைத்துக் கொண்டு தமது மனைவியை அவளுக்கு உட்பட்டு நடக்கும்படியாகக் கொடுமைப் படுத்தியது ஊர் அறிந்த செய்திதான். அவருக்குப் பிறந்த குமாரனும் மனைவியும் போன பின்பும் அவர் நிலைமையில் ஏதேனும் புது மாறுதல் தோன்றிற்றா எனில் இல்லவேயில்லை. எல்லா பாக்கியமும் மோகனாவே என்று அவளுடைய இன்பசுகத்திலேயே மயங்கி யிருந்தார். மஹா பதிவிரதையான அவரது மனைவியின் சாபமோ யாதோ மோகனாவின் காலம் மலடித்தனமாகவே கழிந்து முடிந்து அவள் இறந்து நான்கு மாதங்கள் தானாயிற்று. அதற்குள் மற்றொரு விவாகத்துக்கு ஏற்பாடு செய்து விட்டார். முதலியாருக்கு மார்கழிமாதம் அமாவாசையுடன் அறுபது வயது பூர்த்தியாகிறது. இந்த வயதில் விவாகமா?—"இது நியாயமா?" என்று எல்லோரும் ஏசலாயினர். பேசலாயினர்.

ஃ

எந்தத் தூற்றுதலையும் முதலியார் கவனிக்கவேயில்லை. வழக்கம் போலவே பிடிவாதம் காட்டினார். எப்போதும் கண்டிப்பு மனுஷ்யர். சொன்னது சொன்னதே தான். அதை மாற்றுவதில்லை. அவர் பார்த்து வைத்த பெண் மங்களவல்லி பருவ பக்குவயுவதி. அதிரூபவதி. தந்தையில்லை. தாயின் வளர்ப்பில் வளர்ந்து புஷ்பித்த பூங்கொடி. தைமாத அமாவாசை கடந்த ஏழாம்நாள் விவாகத்திற்கு முகூர்த்தம் என்று குறிப்பிட்டானது. பெண்ணின் தாயாரை எவ்வளவோ பேர் நிந்தித்தும் அவளும் ஒரு பிடிவாதக்காரியாக "அங்குதான் தருவேன்" என்று சொல்லிக்கொண்டு நின்றாள். கோர்ட்டு மூலமாய் இந்த விவாகத்தைத் தடுப்பதென்று சிலர் முயன்று வழக்கு தொடர்ந்தனர். அதை விசாரித்த மாஜிஸ்திரேட்டினிடம் முதலியார் என்னவோ எழுதிய ஒரு காகிதத்தை நீட்டவே வழக்கை ஒரு மாதத்திற்குப் பின்பு விசாரிப்பதாகவும், விவாகத்திற்குத் தடை உத்திரவு இப்போது அவசியமாய்க் காணவில்லை யென்னும் கூறிவிட்டார். விவாகத்திற்கு இன்னும் ஆறுநாட்களே இருக்கையில், அந்த வழக்கை ஒரு மாதத்திற்குப் பிறகு விசாரிப்பதாகக் கூறினால், விவாகம் முடிந்த பிறகு விசாரணை செய்வதா? இது என்ன உத்திரவு என்று வழக்கு தொடுத்தவர்கள் மனம் நொந்தனர்.

ஃ

விவாக தினமும் வந்தது. பக்கத்துக் கிராமத்தில் விவாகத்திற்கு ஏற்பாடாயிருந்தது. தன் ஊரில் நடத்தினல் கலகம் உண்டாகலாமென்று ஊரை மாற்றினர் போலும்! அவர் விவாகத்தோடு இன்னெரு விவாகமும் அதே மணப் பந்தலில் நடக்க சகலமும் சித்தமாயின. ஊர் முழுதும் தாதாவின் விவாகத்தைக் காணப் பெருங் கூட்டம் திரண்டது. முதலியாருக்கு நிச்சயித்த மணப்பெண் வந்து உட்கார்ந்து நலுங்கிட்டுக் கொண்டாள். அதற்குப் பிறகு முதலியாருக்கு நலுங்கிடவேண்டும். அந்த சமயம் முதலியார் அதிக வேலையாக இருந்ததால் மற்றெரு கலியாணத்து மணமகன் வந்துட்கார்ந்து நலுங்கிட்டுக் கொள்ளட்டும், பிறகு நான் வருகிறேன் என்றார். பணக்காரரின் வார்த்தைக்கு எதிர் பேச்சுண்டா? புரோகிதரும் அவ்விதமே நடத்தினர். இளவயதுள்ள வாலிபன் அங்கு வந்து நலுங்கிட்டுக் கொண்டான். அதற்குப்பின் முதலியாரும் நலுங்கிட்டுக் கொண்டார். விவாகத்தில் கலகமில்லாதிருக்கப் போலீஸ் இன்ஸ்பெக்டரும் மாஜிஸ்திரேட்டினல் அனுப்பப் பட்டிருந்தார். எல்லாம் பணம் செய்யும் காரியம்.

ஃ



முகூர்த்த நேரம் வந்தது. முகத்தை மூடிக்கொண்டு ஒரு பெண் புதிதாய் அங்கு வந்து நின்றாள். முதலியார் மாங்கல்யத்தை எடுத்து அந்தப் பெண்ணின் கழுத்தில் கட்டினர். அதே நேரத்தில் மற்றெரு மண அறைப் பந்தலில் முதலியார் பார்த்திருந்த பெண்ணுக்கும் ஒரு வாலிபனுக்கும் மாங்கல்ய தாரணமாயிற்று. சூழ்ந்திருந்தவர்கள் இதைச்கண்டு பிரமித்தனர். மங்களவல்லியை முதலியார் விவாகம் செய்து கொள்ளாமல் ஒரு வாலிபன் மாங்கல்யம் சூட்டியது ஆச்சரியத்தைத் தந்தது. முதலியார் மாங்கல்யம் சூட்டிய பெண்ணும் தனது முகமூடியை நீக்கினள். அவள் முகத்தைக் கண்டதும் உறவினரெல்லாம் வியப்புற்று ஆ! இவள் ஜானகியல்லவா, எங்கிருந்து வந்து முளைத்தாள் என்று எல்லோரும் அந்தப் பெண்ணைச் சுற்றிக்கொண்டு க்ஷேமம் விசாரித்தனர். அந்தப் பெண்தான் முதலியாரின் முதல் மனைவி. அங்கு மணமகனய் மங்களவல்லியை மணந்த வாலிபனன கோபாலன் முதலியாருடைய குமாரனவன். இவ்விதம் ஊரார் பிரமிக்கும்படி விவாகத்தை நடத்தப் போவதாயும் அதை ரகசியத்தில் வைத்துக்கொண்டு அந்தப்படியே நடக்கிறதா என்று பார்க்கப் போலீஸாரை யனுப்பி வைக்கலாமென்றும் முதலியார் மாஜிஸ்திரேட்டினிடம் மனுவை நீட்டியதால் தான் அதிகாரியும் விவாகத்திற்குத் தடையுத்தரவு செய்யவில்லை. முறைப்படி போலீஸாரை மட்டும் அனுப்பப ஏற்பாடு செய்தார்.


ஃ

முதலியாரின் கொடுமைகளைப் பொறுக்காத ஜானகி தனது எட்டு வயது குமாரனேடும் அவருக்குச் சொல்லாமலே தாய் வீட்டுக்கு ஓடி விட்

டாள். அங்கிருந்துகொண்டு மோகனு தொலையுமட்டும் தான் வரமுடியாய தென்று ரிஜிஸ்தர் கடிதம் அனுப்பினுள். முதலியாரும் மூர்க்க புருஷராத லால் "உன் இஷ்டப்படி இருந்து கொள்ளலாம்" என்று ஒரு கார்டில் ஒரே வரியில் பதில் தந்து விட்டார். ஜானகி தன் தாய் வீடு சேர்ந்த காலம் அவள் தமையனுக்கு உத்தியோக மாற்றுதலாகிச் சென்னை போகவேண்டிய சமயமாயிருந்தது. அவர்களுடன் ஜானகி தன் குமாரனேடும் சென்னை சேர்ந்து இந்தப பத்து வருஷகாலமாகத் தமையனிடமே இருந்து விட்டாள். முதலியாரும் தன் மனைவியைப் போய்ப் பார்க்கவில்லை. தன் குமாரனை யாவது காண ஆசையிருக்காதா? மூர்க்க முதலியார் புத்திர வாஞ்சையையும் கருதாமல் எல்லாம் மோகனுவே என்று அவள் மோகத்தில் மயங்கிக் கிடந் தார். கடைசியில் மோகனு மாண்டுவிட, வீட்டிற்கு வேறு பெண் துணை இல்லாததால் தன் மனைவிக்கு ஒரு ரிஜிஸ்தர் கடிதம் தந்தார். அதிலும், "மோகனு இறந்தாள், இப்போதாவது நீ என்னிடம் வருகிருயா? அல்லது மறுமணம் புரியட்டுமா?" என்று இரண்டே வரிகள் எழுதியிருந்தார். கொண்டவனின் குணம் பத்தினிக்குத் தெரியாதா? தான் உடனே போகா விட்டால் மறு விவாகம் செய்துகொள்ளத் தவருர் என்று ஜானகி பயந்து, உத்தரவுப்படி வருவதாகப் பதில் கடிதம் தந்தாள். இந்தக் கடிதத்தைப் பார்த்த பிறகு முதலியாருக்கு ஒரு புது யோசனை தோன்றிற்று. தனது அறுபதாவது சஷ்டியப்த பூர்த்தி விவாகத்தைச் சிறப்பாக நடத்துவிப்ப தென்றும், அதே தினத்தில் தனது குமாரனுக்கும் திருமணம் நிறைவேற்றுவ தென்றும் முடிவு செய்து, மங்களவல்லியின் தாயாரைக்கண்டு பேசித் தமது குமாரனுக்கு மங்களவல்லியை நிச்சயித்தார் இதை ஊரார் தவறுதலாக முதலியாரே மங்களவல்லியை மணந்துகொள்ளப் போவதாக எண்ணி, "இது நியாயமா?" என்று முதலியாரைக் கேட்க ஆரம்பித்தனர் எந்த சங்கதியி லும் எதிர்த்து நிற்பதே தமது வழக்கமாகக்கொண்ட முதலியார், மங்கள வல்லியின் தாயாரிடம் தனக்கே கொடுக்கப் போவதாக எல்லோரிடமும் சொல்லும்படி ஏற்பாடு செய்துவிட்டு, தம்மைக் கேட்பவரிடமெல்லாம் "ஆம், அப்படித்தான் செய்வேன்" என்றுரைத்து மீசையை முறுக்கத் தொடங்கி ஞர். தமது மனைவிக்கும் கடிதம் எழுதி முகத்தை மூடிக்கொண்டு விவாகப் பந்தலுக்குள் நுழையுமாறு தெரிவித்திருந்தார். கணவனின் கட்டளைப் படியே அவளும் நடந்து கொண்டாள். முதலியார் போட்ட திட்டத்தின் படியே இரு விவாகங்களும் ஆநந்தமாய் நடந்தேறின.

ஃ

எதிர்பாராத விதமாக விவாகம் இவ்விதம் மங்களமாய் நிறைவேறவே, விரோதப் பட்டிருந்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடிக் கொண்டு திருமண விருந்தினராயினர் முதலியார் தாம் செய்த வேலையை எல்லோரிடமும் சொல்லிச் சிரித்தார். முதலியார் மூர்க்கராயினும் அதி உல்லாஸ புருஷர். விவாகமும் உல்லாஸமாகவே நிறைவேறியது. பத்து வருஷகாலம் பிரிந் திருந்த ஜானகி தன் மருகி மங்கள வல்லியுடனும் தன் வீட்டிற்குள் நுழைந்து மகிழ் பூத்தாள். முதலியார் இப்போது புது மாப்பிள்ளையாகத் தமது பழய மனைவியுடன் விளங்குகிருர். இப்படி விளங்கவும் பாக்கியம் செய்திருக்க வேண்டுமல்லவா?



காதற் பொறாமையா? அல்லது பொறாமைக் காதலா ?:—

[ஒரு தமிழ் நாவல். அநேக படங்களுடன் கூடியது. ஸ்ரீமான் வி. என். ரங்கசாமி ஐயங்கார் அவர்கள் இயற்றியது. விலை ரூ 1-8-0. சென்னை, பிராட்வே, "தாருல் இஸ்லாம்" கம்பெனியார் பதிப்பித்தது.]

'ஈஸ்ட்லின்' என்ற ஆங்கில கதையின் ஸம்பவங்களில் முற்பகுதி பிற்பகுதியை விலக்கி இடையிலுள்ள நயங்களைத் தழுவித் தமிழுக்கேற்றவாறு அநுபவ விநோதமாய் விசால ஹிருதயத்துடன் விஸ்தரிக்கப் பெற்றுள்ளது. வாசிப்பதற்கு ருசிகரமே. கதையின் அமைப்பு, முடிவு இவற்றைப்பற்றி அபிப்பிராய பேதம் உண்டாவது இதில் சாதாரணம்தான். மாற்றாந்தாயின் இயல்பு முதலியனவற்றை ஆசிரியர் பட்டறிந்த அநுபவமாய் விளக்கியுள்ளார்.

ஃ

தீண்டாத சாஸ்திரியின் திருவிளையாடல்:—

[ஒரு ஹாஸ்ய நாடகம். அட்வகேட் ஸ்ரீமான் எஸ். வி. ஸ்ரீநிவாஸன் அவர்கள் பி. ஏ. பி. எல். இயற்றியது. விலை 1 அணா. ஸ்ரீரங்கம் மேலடைய வளஞ்சான் தெரு, 633-ம் நெம்பர் வீட்டில் ஆசிரியரிடம் கிடைக்கும்.]

இது ஆவணிமாத "அமிர்தினி"யில் வெளிவந்த "தீண்டாமையின் ரகசியம்" என்பதின் மறு பதிப்பாகும். "அமிர்தினி" ஆசிரியர் இதற்கு சிறு முகவுரையொன்றும் வரைந்துள்ளார். புஸ்தகம் பார்க்க அழகாய், கதை படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாய், உல்லாஸமாயும் உள்ளது. பத்திரிகையில் வெளிவரும் வியாசத்தின் அழகு ஒருவிதம். அது தனிப் புஸ்தகமாக வெளிவரும்போது அதன் அழகு மற்றொரு விதமாய் சோபிக்கிறது.

ஃ

இராஜேந்திர சுந்தரி:—

[ஒரு நாவல். இதற்குத் "தியாகச் செல்வனின் தீரச்செயல்" என்ற மறுபெயரும் உண்டு. இரண்டு பாகங்கள் கொண்டது. ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியாரவர்கள் இயற்றியது, விலை சதம் 75. லக்ஷ்மி கம்பெனி, 89. கோவில் தெரு, கும்பனிரோட், கொழும்பு.]

கதை விஸ்தாரமாய் பல அத்தியாயங்களுடன் ஆங்காங்கு பல ஸம்பவங்களும் தொடர் கதைகளுமாகச் சென்று தேசபக்தி நயம் உணர்த்திப் பூர்த்தி பெறுகின்றது. நல்ல காகிதத்தில் நன்றாய் அச்சிடப்பட்டு அழகாய்ப் பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. கதாசிரியரது படங்கள் இருவித அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. அனாவசியமாக ஒரு வரிகூட அதிகப்படாதபடி சுருக்கியும், கதைக்குவேண்டிய கற்பனாசக்தி நயங்களை அதிகமாக நெருக்கிச் சேர்த்தும், விரிவின்றி வரைவதில்தான் நாவலுக்குள்ள சிலாக்கியம் அதிகப்படும்.



செல்வரங்கன் கண்ட உண்மை.

பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்து பூலோகம் ஆண்ட இராஜாவைப்போல், செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளர்ந்து செல்வத்திலே வாழ்ந்த செல்வரங்கன் பெரிய தாராளச் செலவுக்காரன். அவன் வீடு எப்போதும் உறவினரால் சூழப்பட்டிருக்கும். வந்தவர்கள் நாலைந்துநாள் தங்கியே புறப்படுவார்கள். எல்லோரும் நெருங்கிய பந்துக்கள் தான். வேண்டிய சிநேகிதர்கள் தான். ஆனால், சமயத்துக்குமட்டும் உதவமாட்டார்கள். செல்வரங்கனின் மனைவி செந்தாமரையோ பெருமைப்பேய் பிடித்தவள். பெரிய செலவுகள் வைப்பதில் மேதாவி. காபிக்கு அரைப்படி பால் போதாதென்று குழந்தைக்காக வைத்திருக்கிற பாலையும் சேர்த்துக் காபியில் ஊற்றிவிட்டு, அன்றுமுழுதும் பாலுக்குப் பதிலாகக் காபியையே குழந்தைக்குத் தருபவள். செட்டு சிக்கனம் என்பதையே எண்ணாதவள். கர்வி! வீண் பெருமைக்காரி! செல்வரங்கனின் பக்கமும் கூட்டம்! செந்தாமரையினருகிலும் கூட்டம்.



ஃ


செல்வரங்கன் தன் வீட்டுச் செலவுகளைப்பற்றிப் பெரிதும் யோசித்தான். மனைவியோ செட்டுத்தனமாய்க் குடித்தனம் நடத்த ஒப்பாதவளா யிருந்தாள். வரவுக்கு மேற்பட்ட செலவுகளானால் எந்தக் குடும்பம்தான் நிலைக்கும். கடன் பெருகிற்று. வீடு விற்கப்பட்டது. நகைகள் விற்றுத் தின்றானது. ஜீவாதாரமா யிருந்த நிலமும் ஜப்தியாய் விட்டது. கூரை வீட்டில் புகும் காலமானது. ஏராளமாய்ச் சூழ்ந்திருந்த பந்துக்கள் எவரும் இப்பொழுது எட்டிப் பார்க்கவில்லை. எவருடைய

கதைகளையும் நாவல்களையும் பழிப்பாகச் சொல்லும் சில மேதாவிகளின் மூளையை ஆராய்கையில், அவற்றை இயற்றும் சக்தியற்றவர்களாகவே அவர்கள் காணப்படுகிறார்கள். ஒன்றின் பிரயாசையை யுணராதவர்கள் அதைப் பழிப்பது சுலபம்.

உதவியும் இல்லை. செந்தாமரை காபி பலகாரத்துக்குப் பதிலாகப் பழய சாதம் சாப்பிடத் தொடங்கினாள். அன்றைய காலக்ஷேபத்துக்கே கஷ்டமாயிற்று. ஒருநாள் அன்றைய புசிப்புக்கே வழியில்லை. மிக்க பசி. தன்னோடு சண்டையிட்டுக் கொண்டு பிரிந்துபோன தனது மாற்றாந் தாயின் பெண்ணான தங்கை வீட்டுக்குச் செல்வரங்கன் சென்றான். வீட்டுக்குள் நுழைய மனம் ஒப்பவில்லை. வெளியிலிருந்தபடியே தன் பசிக்குச் சாதம் வேண்டுமென்றான். அங்கிருந்தவர்கள் தங்கையினிடம் ஓடிச் சென்று தெரிவித்தார்கள். தங்கையோ இங்கு எந்த சாதமும் இல்லையென்று தெரிவித்து அனுப்பி விட்டாள்.



செல்வரங்கனின் வயிறு பற்றி எரிந்தது. ஆ! இவளுக்காக எவ்வளவு பாடுபட்டேன் என்று சொல்லிக்கொண்டே ஏழ்மை நிலையிலுள்ள தன் உடன்பிறந்த தமக்கை வீட்டிற்குச் சென்று எல்லாம் சொல்லியழுதான். ஏழைத் தமக்கை என்ன செய்ய முடியும்? அவள் செல்வரங்கன் ஏழையான பிறகு வேறு வீடு பார்த்துக் குடிபுகுந்து அப்பளம் போட்டு அதை விற்று ஜீவிப்பவளாயிருந்தாள். அவள் வீட்டிலும் அன்று சமையல் இல்லை. பழய சாதம் அதிகமாயிருந்ததால் சமைக்கவில்லை. வெளியில் சென்று பால் வாங்கிவந்து காபி வைத்து, ஒரு முப்பது அப்பளம் எண்ணெயில் வறுத்து ஒரு தட்டில் வைத்து, இதைப் புசித்துச் காபியைக் குடித்தால் அதற்குள் சாதம் ஆக்கிவிடுகிறேன் என்றாள். செல்வரங்கன் தன் தமக்கையின் அன்பை உணர்ந்தவனாய் இத்தனை அப்பளமா என, அதற்குத் தமக்கை நீ எல்லாமுமே தின்பாயென. அத்தனை அப்பளத்தையும் தின்று திக்கானகாபியையும்குடித்து, இனி எனக்கு சாதம் வேண்டாமென்று சொல்லிவிட்டுத் தன் கூரை வீட்டிற்குச் சென்றான். அவனுக்கு வெகு வெகு நண்பர்களாயிருந்தவரெல்லாம் இப்போது ஏனென்று கேட்பாருமில்லை.



செல்வரங்கன் செழிப்புடன் வாழ்ந்த நாளில் அவன் வீட்டில் ஓயாது திரும்பத்திரும்ப வந்து தங்கிப் புசித்தவர்களின் வீடுகளுக்கெல்லாம் வலியச்

சென்று ஒவ்வொருவரையும் கெஞ்சிப் பார்ப்பதானன். ஒருவேளை சாதம் படைத்து அத்துடன் துரத்திவிட்டவர்களே அதிகம். அந்த சாதமும் இடாமலே "இங்கே ஒன்றுமில்லை" என்று கையை விரித்தவர்கள் அதிலும் அதிகம் ஒரு விசேஷத்திற்குக்கூட இவனை அழைப்பதில்லை. வீடு முழுதும் புசித்து ஆனபின்பு இவனுக்குத் தனியே ஒரு மூலையில் சாதம் போட்டவர்களுமுண்டு. இவன் கண்ணெச்சில் படுமென்று பதார்த்தங்களை மறைத்து வைத்தவர்களுமுண்டு. பணக்காரன் பார்த்தால் கண்ணெச்சில் படாதாம். ஏழை பார்த்தால் கண்ணெச்சில் விழுமாம். எங்கே இவன் கண்ணெச்சில் விழுமோ என்றுதான் ஒரு மூலையில் போட்டது.


ஃ

பணக்காரன் தொட்டால் பரிமளம். அவன் பாத்திரத்தை எச்சில் செய்து காப்பி குடித்தாலும் அதை எச்சிலாக எண்ணார். ஆனால், ஏழையொருவன் தூக்கிக் குடித்தாலும் அவன் தொட்ட பாத்திரத்தை அசங்கிதமாய் நினைப்பர். அவ்விதமே செல்வரங்கன் தாகத்துக்குப் பருகிய ஒரு லோட்டாவை உறவினளான ஒரு ஸ்திரீ ஜலம் விட்டுக் கழுவி எடுத்துக் கொள்ளப்போக, அதைப் பார்த்து அவன் நான் பணக்காரனாயிருந்தால் என் முன்னே இப்படிக் கழுவுவாயா என்று கேட்டுவிட்டு அவ்விடம் விட்டு நீங்கினன். நண்பர்களோ என்றால் எவரும் இப்போது எதிர்ப்படுவதில்லை. ஒவ்வொரு நண்பனும் செய்த உதவிக்குப் பதில் கணக்குப் பார்த்து வேறெரு வகையில் செய்து தீர்த்து விடுவதே செல்வரங்கனின் வழக்கம். செல்வரங்கனிடம் பெற்றுக்கொண்டவற்றின் விலைதான் அதிகமாயிருக்குமே யன்றி, நண்பர்களென்போர் கொடுத்ததெல்லாம் அதற்குக் குறைந்தேதான் இருக்கும். புஸ்தகங்களாகவோ வேறு தினுசாகவோ கொடுத்து அந்த இனம் கடனைத் தீர்த்து விடுவான். இவன் ஏழையான பிறகு எந்த நண்பனிடமும் வலியப்போனலும் பேசுவதில்லை. பெருமாள் மாடு தலையாட்டுவதுபோல் ஒரு அசைப்பு இவனுக்கு ஆட்டிவிட்டு தங்கள் காரியத்தைப் பார்த்தபடி இருக்க, இவன் மௌனமாய் எழுந்து போகவேண்டியதாகவே இருக்கும். ஒரு நண்பனிடம் 20-ரூபாய் பெற்றதற்கு முதலில் 6-ரூபாயைத் திருப்பிக்கொடுத்து, பிறகு மாதம் மூன்று ரூபா வீதம் 5-மாதங்களில் பாக்கியையும் கொடுத்துத் தீர்த்



இருவரும பெரிய கல்விமான்கள்தான். ஆனல் இருவரின் குணமும் வெவ்வேறு. ஒருவர் சுயநலஸ்தர். மற்றவர் சுயநலத்தை வெறுப்பவர். ஒருவர் மோசக்காரர்; மற்றவர் உண்மையாளர். இதனல் இவர்கள் நட்பினர் போல் நேசிப்பினும் அதிகம் கலக்க முடியாது பிரிந்தே கிடக்கின்றனர்.

தான். மற்ருெரு நண்பனிடம் ஒரு மருந்து வாங்கித் தரும்படி கேட்க, அவன் ஆகட்டுமென்று கூறி நாள் கடத்தி ஏமாற்றினுன். வேருெரு நண்பனின் வீட்டில் புசிக்கச்செல்ல, ஒன்பது மணிக்கு நாங்கள் கோயிலிலிருந்து வந்த பிறகு வா—என்று சொல்லிவிட்டு தன் மனைவி குழந்தைகளோடு வீட்டைப் பூட்டிக்கொண்டு கோயிலுக்குச் செல்வதானுன். அதைப் பார்த்த செல்வரங்கன் நான் பணக்காரனுயிருந்து உன் வீட்டிற்கு வந்திருந்தால், நான் பசி என்று தெரிவித்த பிறகுங்கூட என்னைக் கவனியாமலும், ஏதாவது என் பசிக்கு இடாமலும் இப்படி மோட்டாரில் ஏறிப் புறப்பட்டுப் போவாயா என்று கைநீட்டி வாயையும் நீட்டிச் சுடச்சுடக் கேட்டான்.



ஃ


எப்போதும் தன் கையில் நாலு பணமிருந்தால்தான் தனக்கு உதவும். தன் கைப்பணத்தைக் காப்பாற்றிக்கொள்ள, வீணுன தடபுடல் செலவுகளையும், விருந்துகளையும், விசுவாசமற்றவர்களுக்கு இடுவதையும் நிறுத்திக் கையைச் சுருக்கவேண்டும். செல்வரங்கன் பந்துக்கள், நேசர்கள், அறிமுகக் குப்பைத்தோட்டிகள், பல்லிளிப்புக்காரர்கள், இளுமாகப் பிடுங்கிச் சென்றவர்கள், ஜட்காவண்டி நண்பர்கள், அடிக்கடி கடன்தரும் வாடிக்கைக் கடைகள் எல்லாவற்றையும் மாதிரி பார்த்துவிட்டுத் தன் மனைவிமக்களைக் காப்பாற்ற முடியாமல் கடைசியாகப் பட்டைபட்டையாக நாமம் சாத்திக்கொண்டு பிக்ஷை எடுக்கத் தொடங்கிவிட்டான். அரைப்படி பால் போதாதென்று இன்னும் கால்படி பால்சேர்த்து காப்பிக்கு ஊற்றிப் பந்துக்களுக்குப் படைத்துக் கௌரவம்கொண்டாடிய செந்தாமரை வேறுகதியின்றித் தன்கணவன்கொண்டுவரும் பிக்ஷையரிசியைச் சமைத்து உண்பதானுள். இப்போது சிக்கனம் செட்டு என்பது தெரிந்ததா, பந்துக்களின் உறவுத்தன்மை கண்டுகொண்டாயா என்று சொல்லிச் சொல்லிக் காட்டுவான். செந்தாமரையும் வாடி வதங்கின தாமரையாளுள். ஒவ்வொரு நாளும் செல்வரங்கன் தமக்கையின் வீட்டுக்கும் பிக்ஷைக்குப் போவான். அவள் கண்ணீரோடு பிக்ஷையிட்டுக் கையிலே ஏதாவது கால் அரையணுவுக்குப் பக்ஷணம் வாங்கி வைத்திருந்து அதையும் கொடுத்தனுப்புவாள். இந்த



வறுமை தாங்காமல் செல்வரங்கன் தன் தமக்கையின் வீட்டில் ஒரு மாதம் சுரமாகக் கிடந்தான். எந்தப் பந்துவும் நண்பர்களும் எட்டிப்பார்க்கவேயில்லை. உபசாரத்திற்கு சிலர்மட்டும் வந்து சென்று பிறகு மறுபடி வரவேயில்லை. அவன் பிழைக்கிறது ஏது என்றார்கள். கடைசியில் செல்வரங்கன் தன் மனைவி மக்களுடன் வேற்றூருக்குச் சென்றுவிட்டான். அவனை நினைப்பவர் களேயில்லை. மேலும் ஒரு வருஷம் சென்றது.

ஃ

"இதென்ன ஆச்சரியம்! செல்வரங்கனுக்கு மறுபடியும் சொத்து களும் வீடும் நிலங்களும் கிடைத்துவிட்டதாமே! எல்லாக் கடன்களேம் தீர்த்து விட்டானுமே! வேலையாட்களோடு தன் வீட்டில் பெரிய பணக்காரனுய் வாழ்கிறுனுமே! இது உண்மைதானு என்பதைப் பார்த்துவருவோம் என்று செல்வரங்கனின் பந்துக்களும் நண்பர்களும் அவன் வீட்டிற்குக் கூட்டம் கூட்டமாய் வரத் தொடங்கினுர்கள். எல்லோரையும் செல்வரங்கன் வர வேற்று சுவற்றில் தொங்கவிட்டிருந்த பெரிய எழுத்துகளுள்ள ஒரு பலகை யைக் காட்டினுன். அதில்,



1. சிக்கனமற்ற வீடு வாழாது.
2. கையில் பணம் இருந்தால் பந்துக்கள்.
3. இல்லாதவனை எவரும் அழையார்.
4. கஷ்டத்தில் உதவாதவர் களை மறந்துவிடு.
5. உனக்கு இடாதவர்க்கு நீயும் இடாதே.
6. வீண் கூட்டம்வீண்செலவே
7. வாய் உபசாரத்திற்கு வாய் உபசாரமே சரி.
8. பசியோடனுப்பியபாவிகளை மறவாதே.
9. சமயத்துக்கு உதவாதவன் சண்டாளன்.
10 கள்ள மனம் துள்ளும், தன் னையே தின்னும்.

என்று எழுதி யிருந்ததைக் கண்டு எல்லோரும் தங்களைப்பற்றியே எழுதி யிருப்பதாக எண்ணிக்கொண்டு வெட்கிப் போயினர். எவருக்கும் விருந்து உபசாரம் நடக்கவில்லை. செல்வரங்கன் அங்கு வந்தவர்களுக்கு ஒரு காசு தந்து ஏதாவது வாங்கிச் சாப்பிட்டுக் கொள்ளுங்கள் என்றான். எவரும்

கடவுள் அளித்திருக்கிற ஆலோசனைத் திறமையை உபயோகிக்க வேண்டிய மாதிரிக்கு நல்ல விஷயங்களை எடுத்துக்கொண்டு சிந்திப்போர் சிலரேயாவர்.

அந்தக் காசை வாங்காமல் தங்களின் நெஞ்சு குத்தித் தொளைக்க மனவெறுப்புடன் வெளியேறினர்.

ஃ

முன்னைவிட இப்பொழுது அதிக செல்வவானாக விளங்கலானான். அவன் உண்மையில் ஏழையாய் விடவில்லை, கடன்காரனாகவுமில்லை. வீடு நிலங்கள் ஜப்தியாகவுமில்லை. எல்லாம் தன் இரு நண்பர்களைக் கொண்டு நடத்திய வெளிவேஷ நடிப்புகளேயாகும். டம்பாச்சாரியான தன் மனைவியைத் திருத்தவும், தன் நேசர் பந்துக்களின் குணத்தை யறியவுமே இந்தக் கடினமும் அவமானமுமான பரீக்ஷையை மேற்கொண்டான். அவன் ஆதரவில் இருந்த சொந்த தமக்கையே அதை உண்மையென்று நம்பிவிடும்படியாக அவ்வளவு சரியாக வேஷம்போட்டான். இவன் பசியுடன் சென்றபோது திருப்பி யனுப்பிவிட்ட தங்கை இப்போது தன் குமார்த்தியைத் தன் அண்ணாவின் குமாரனுக்குத் தருவதற்கு சம்பந்தம் பேச வந்தாள். செல்வரங்கன் "நீ என்னைப் பசியோடும் அனுப்பினவளல்லவா?" என்று கூறி மறுத்துவிட்டுத் தன் குமாரனுக்குத் தூரமான இடத்தில் பெண் தேடி மணமுடித்தான். தன் குமார்த்தியையும் தூரமான இடத்திலேயே கொடுத்தான்.

ஃ

"எந்தச் சொத்துகளும் தன் கையை விட்டுப் போகாமலே அப்படியே வைத்துக்கொண்டு, ஏழையாய் விட்டதுபோல் காண்பித்து, பகிரங்கமாய்ப் பிச்சை எடுத்தும் திரிந்து, இப்படிப் பகல் வேஷம் போட்டு நம்மையெல்லாம் ஏமாற்றி நமது குணங்களைக் கண்டு கொண்டானே! நமது சம்பந்தங்களை விட்டுவிட்டுத் தூர இடத்தில் பணமுள்ள குடும்பங்களில் சம்பந்தம் செய்து கொண்டானே! என்ன சமர்த்தப்பா இவன் சமர்த்து" என்று பந்துக்கள் வெட்கிப் போயினர். செல்வரங்கன் தன் பரீக்ஷையை முடித்து சுகமே வாழ்ந்துவருகிறான். கதையையல்ல, கருத்துகளை உணருங்கள்.

ஒரு ஆசிரியர் தாம் அநேக வருஷங்கட்கு முன்பு வெளியிட்டதும், இப்போது மூன்றும் பதிப்பு ஆகியிருப்பதுமான ஒரு நூலின் முதற்பதிப்பு ஒரு நண்பரிடமிருக்கக் கண்டு, தமக்கு அந்த முதற் பதிப்பு வேண்டுமென்றும், அதற்குப் பதிலாகத் தற்போதைய மூன்றும் பதிப்பு தருவதாகவும் கூறிப் பெற்றுக்கொண்டார். புஸ்தகம் கொடுத்தவர் அதற்குப் பதில் புஸ்தகம் பெற பலமுறை அலேந்தும் ஆசிரியருக்குத் தமது புதிய பதிப்பைக் கொடுக்க மனமில்லாமல் நாளை நாளை என்று நாள் கடத்தினர். ஒருதினம் ஆசிரியரின் மேஜையில் தமது முதல்பதிப்பு இருந்ததைக்கண்ட நண்பர் உடனே அதை எடுத்துத் தம்முடன் வந்த குமாரனிடம் கொடுக்க, அவன் ஓடிவிட்டான். ஆசிரியர் கோபத்துடன் நண்பரைப் பார்த்து இப்படிச் செய்யலாமா என, அதற்கு நண்பர் நான் விலைக்கு வாங்கி என் பெயரும் போட்டுள்ள என் சொந்த புஸ்தகத்தையே எடுத்தேன் என்று கூறிவிட்டு எழுந்து சென்றார். ஆசிரியர் ஏமாறி நின்றார். சிலருக்குப் பேர் பெரியது. அவர்கட்குள்ள நற்குணமோ மிகச் சிறியது.



ஹிந்து யுவதிகளுக்குள்ள அபாயம்.

கிறிஸ்துவ மதமானது சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் போதிக்கின்றது. ஆனால், அந்த மதக்கொள்கைகளை வியாபிக்கச்செய்வதற்காக ஏற்பட்டுள்ளவர்கள் அந்த தர்மங்களைத் தாங்களே மறந்து விடுகிறார்கள். எங்கு கிறிஸ்துவமதத்தில் தங்களின் பெண்களை இழுத்துக்கொள்வார்களோவென்ற அச்சத்தாலேயே வெகுபேர் தங்கள் புத்திரிகளைப் பருவம் வந்ததும் வீட்டில் நிறுத்தி மேல்படிப்புக்கு இடமில்லாமல் செய்துவிடுகிறார்கள். ஹிந்துப் பெண்களின் மேல்படிப்புக்கு ஒரு தடை கல்லாக கிறிஸ்துமதப் பிரசாரகர்கள் இருந்து வருகிறார்கள் என்றால், அது மிகைபடக் கூறியதாகாது. அவர்களை உபாத்தியாயனிகள் ஏமாற்றி அழைத்துச் சென்றுவிடுவார்களென்ற அச்சம் இன்னும் தீரவில்லை. 1904-ம் வருஷத்தில் திருநெல்வேலியில் ஒரு மிஷனரிக்கேஸ் நடந்தது. அதை இந்த 1935-ம் வருஷத்திலுங்கூடச் சிந்தித்துப் பார்க்கக் கூடியதுதான்.

ஃ

எம். சுப்பையக் கோனான் என்பவருக்குத் திருநெல்வேலி இருப்பிடம். இவருடைய புத்திரியின் பெயர் ஆவடை. ஒருநாள் கோலம்மாள் என்னும் ஸ்வதேச கிறிஸ்துவ ஸ்திரீ கோனாரின் வீட்டில் வந்து பால் கேட்டதாயும், கோனார் தன் மகளிடம் கேட்டு வாங்கிக் கொள்ளும்படி சொல்லி வெளியே போனதாயும், பின்னர் கோனார் வீட்டுக்கு வந்து பார்த்ததில் ஆவடையைக் காணாமல் அண்டை யயலாரை விசாரித்து அவள் மிஷனரி ஸ்திரீயான கோலம்மாளோடு போனதை யறிந்து, மிஷனரி கட்டடத்துக்குச் சென்று பார்த்ததாயும், அங்கே கதவு மூடப்பட்டிருந்ததால், மறுநாட் காலையில் சில மனிதர்களோடு சென்று தன் பெண்ணை யனுப்பும்படி கேட்டதற்கு அங்கிருந்தவர்கள் மறுதலித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு மேற்படியாரைக் கொண்டு போவோமென்று கூறியதாயும் தெரிகிறது. அதன் மேல்

மிக்க ஒற்றுமையும் அன்புமாக சிலருடன் நேசித்துவிட்டுப் பிறகு திடீரென்று பிரிந்துகொண்டு வேற்றுமுகமாக மாறி அன்னியர்போலுமாகிறார்கள். இவ்விதம் ஆகிய இரண்டொரு வருஷங்களுக்குள் கடவுளிடம் போய்விடுகிறார்கள். இவர்கள் பிரிந்து பிறரை அன்பில் தத்தளிக்கச் செய்ததால் அடைந்த லாபமொன்றையுங் காணோம்.

மாஜிஸ்திரேட்டினிடம் பிராது கொடுத்தார். ஸிவிலிலும் தாவா செய்தார்.

ஃ

மாஜிஸ்திரேட் பிராதை யேற்று, மறுநாள் கோலம்மாளை ஆளைத் திருடியதாய்க் குற்றம் சாட்டி விசாரித்து, இவளுடன் மிஸ் மாகஸ், மிஸ் கெம்பர் ஆகிய இரண்டு துரைசானிகளை சட்டத்துக்கு விரோதமாய் மேற்படி பெண்ணைப் போகவிடாமல் தடுத்து வைத்ததாயும் குற்றம் ஏற்படுத்தி விசாரணை செய்தார். முடிவில் கேஸைத் தள்ளும்படி செய்து, வாக்குமூலம் கொடுத்த கோனார்மீதும், அவருக்கு அனுஸரணையாக் ஸாக்ஷியம் சொன்ன இருவர்மீதும், அவர்கள் கோர்ட்டார் முன்னிலையில் பொய் சொன்னதற்காகக் குற்றம் சாட்டும்படி அனுமதி கொடுத்தார்.

ஃ

இதன் பேரில், திருநெல்வேலி செஷன்ஸ் ஜட்ஜ் இந்தக் கேஸை விசாரித்து சுப்பையக் கோனாருக்கு 9-மாதக் கடுஞ்சிறையும், 2-3-குற்றவாளிகளுக்கு 6-மாதக் கடுங்காவலும் விதித்தார். குமார்த்தியை இழந்ததுடன் தண்டனையும் கிடைத்தது. டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்திரேட்டும், டிஸ்ட்ரிக்ட் செஷன் ஜட்ஜியும் மேற்படி பெண்ணை மைனர் அல்லவென்று சொல்லவில்லை. மேற்படி மூன்று கிறிஸ்துவ மாதர்கள் வஸிக்கும் மிஷன் கம்பௌண்டில் ஆவுடையென்னும் பெண் இருந்தாளென்றும் தெரிய வருகிறது. இத்துடன் பெண்ணைப் பெற்ற தந்தையும், அவனுடைய இனத்தாரும் ஆவுடையை யனுப்பும்படி கேட்டதற்கு அவர்கள் மறுதலித்ததும் ருஜுவாயிற்று. மிஷனரி லேடிகள் மேற்படி பெண் கிறிஸ்து மதத்தை யனுஸரிக்க மிக இஷ்டம்கொண்டு தானாகவே ஓடி வந்ததாய்க் கூறத் தொடங்கினார்கள். கோலம்மாள் தான் பால் வாங்கப் போகவில்லை யென்றாள். இரண்டு மிஷனரி துரைசானிகளும் தாங்கள் மேற்படி பெண்ணை அடைத்து வைக்கவில்லை. யென்றனர். பெண்ணின் வயது 14—இருக்கும். செஷன்ஸ் ஜட்ஜ் மிஷனரி துரைசானிகளின் வார்த்தையை நம்பி மேலே கூறியபடி சுப்பையக் கோனாரையும், அவருக்கு அனுகூலமாக ஸாக்ஷியம் கொடுத்த இருவரையும் தண்டித்தார்.

ஃ

இதன் பேரில், சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல்செய்யப்பட்டது. இதை மிஸ்டர் ஜஸ்டிஸ் ரஸ்ஸலும், அபிஷியேடிங்கு சீப் ஜஸ்டிஸும் விசாரித்து 1903-ம் வருஷம் நவம்பர் மீ 21-ம் தேதியன்று பிரத்தியேகமான இரண்டு தீர்மானங்களைச் சொன்னார்கள்.

அபிஷியேடிங்கு சீப் ஜஸ்டிஸ் குற்றவாளிகளை விடுதலை செய்யும்படி தீர்மானித்தார். மிஸ்டர் ஜஸ்டிஸ்

சரிதங்களிலும் கதைகளிலும் சிறுவர்க்கு மனம் செல்லுவதுபோல மற்றொன்றில் செல்வதில்லை. இவர்களுடைய மனமானது மெழுகை யொத்திருப்பதால், சரிதத்திலும் கதையிலுமுள்ள நாயகர் நாயகிகள் இவர்களின் மனதிற் பதிந்து அன்னோர் செய்த காரியங்களின் நீதி விவேகங்கள் அப்படியே மனதில் அமைந்துவிடுகின்றன. அது அபிவிர்த்திக்கு சிறந்த துணையாகிறது.

ரஸ்ஸல் மிஷனரிசட்கு அனுகூல மாய்த் தீர்மானம் எழுதினர். ஆதலின், மூன்ருவது ஜட்ஜிக்கு இக் கேஸ் தெரிவிக்கப்பட்டது. மிஸ்டர் ஜஸ்டிஸ் பாஷ்யமையங்கார் கோனரையும் மற்றிருவரையும் விடுவித்துப் பெண்ணைத் தந்தையிடம் ஒப்புவிக்கும்படித் தீர்ப்பு செய்தார். முடிவில் மிஷனரிகளின் கக்ஷி தோல்வி யடைந்தது.

ஃ

பாடசாலையில் கிறிஸ்தவ உபாத்தியாயனிகளிடம் ஹிந்துச் சிறுமிகள் மிக்க விஸ்வாசமாகப் பழகுகிருர்கள். உபாத்தினிகளின் சொற்களைக் கேட்டு வீட்டில் நெற்றியில் வைத்துக் கொண்டு போகும் திலகம் பொட்டு இவற்றை நடுவழியில் அழித்து விட்டு வெறும் நெற்றியுடன் உபாத்தினியின் மனம் மகிழும்படி நடந்து கொள்ளுகிருர்கள். ஹிந்துமதத்தைத் தூஷித்தும் இச்சிறுமிகட்குப் பல சமயங்களிலும் போதிக்கப்படுகிறது. சிறுமிகளா யிருக்கிறவரையில் கவலையில்லை. யுவதிப் பருவம் நெருங்கும் பொழுது கிறிஸ்துவ உபாத்தினிகளுள்ள பாடசாலைகட்கு அனுப்புவதில் மிக ஜாக்கிரதைப்படவேண்டி யிருக்கிறது. மேற்கண்டது போன்ற வழக்குகள் ஒன்றல்ல, இரண்டல்ல; எவ்வளவோ நடந்திருக்கின்றன. உயிருடன் தங்கள் பெண்களை யிழந்தவர்களும் அநேகராவர். ஆதலின், முன் ஜாக்கிரதை வேண்டும்.

விசித்திரக் கேள்விகள்.

1. எவ்விஷயத்தில் நாம் அரசரிற் பெரியோம்?
2. ஊசி எப்போது செவிட்டரையொக்கும்?
3. எந்தப் பாத்தியில் முள்ளே முளைக்கும்?
4. எவ்விடத்தில் சுகத்தை எப்போதும் காணலாம்?
5. எந்த மரத்துக்குக் காய்களில்லை?
6. எந்த மாலை தரிக்க முடியாது?
7. எந்தத் தாளம் எல்லாவற்றுக்கும் அடி?
8. எந்த எழுத்து எட்டிலில்லை?
9. ஊசி எப்படிப் பாம்பை யொக்கும்?
10. டகரம் எப்படித் தீவை யொக்கும்?
11. பழந்துணி எப்போது வேம்பை யொக்கும்?
12. எது இன்றி எது இல்லை?
13. இன்பம் தரும் ஆசையும் துன்பமாய் விடுவதெப்போது?

☞ விடை அடுத்த சஞ்சிகையில் வரும்.

ஒரு தமிழ்ப் பத்திராசிரியர் மற்றொரு தமிழ்ப் பத்திராசிரியரை மதிப்பதில்லை. ஒருவர் முன்பாக இன்னொருவர் தாமே இமய மலையின் உச்சியில் இருப்பதுபோலத் தோற்றுவித்துக்கொள்வதும், அன்னியோன்னியமின்றிப் பேசுவதும் தமிழ் நாட்டிலே காணும் விநோதம் இதிலும் சில உத்தமருண்டு.

மகா ஜனங்களுக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமோ—வேண்டாமா என்பது இப்பொழுதில்லை. அது பிறகு ஒருகாலத்தில் பேசவேண்டிய பேச்சு. இனி என்ன செய்யவேண்டுமென்பதே இப்போதைய நம்முடைய வேலை.

விகட வெற்றி வேற்கை.

(874-ம் பக்கத் தொடர்ச்சி)

44. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினு மழிவர்.
குன்றும் மாளும் குந்தித் தின்றால்.
அன்றைச் சோற்றுக் காவது பாக்கியம்

45. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாகினு மாகும்.
எழுநிலை மாடம் கொழுத்தவர் கட்டுவர்.
"கழுதை" என்பது ஏசலில் வருமே.

46. மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த வாடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.
மணவணி யணிந்த மகளீ ரெல்லாம்
இரவல் நகைபல இணக்கமா யணிந்து
பின்பவை ஒடித்தும் போக்கியும் கணவர்க்
கவர்செய் கவலைகட் களவிலை தானே.

47. பெற்றமுங் கழுதையு மேய்ந்த வப்பாழ்
பொற்றொடி மகளிரு மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடுநக ராயினு மாகும்.
பெற்ற சமபளம் விருந்துக் காகி,
பொற்றொடி தானும் மக்களுங் கலங்க
பற்பல கடனில் மூழ்குவ தாமே.

48. இல்லோ ரிரப்பது மியல்பே யியல்பே.
இல்லோர் இறப்பின் இனத்தார் செல்லார்.

49. இரந்தோர்க் கீவது முடையோர் கடனே.
இரந்தவர் பணத்தால் இழுப்பது கஞ்சா!

50. நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை யில்லில் லோர்க்கே.
நல்ல செல்வம் வாய்ந்தவர்க் குடிக்குள்
பொல்லான் புகுந்தே பொருள் பறிப்பானே.

51. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.
தறுகண் யானையின் தந்திரப் பாகன்
மறுவில் மந்திர வாதிபோல் நடிப்பான்.

மு. துரைப் பிள்ளை.

(தொடரும்.)

"அமிர்தினி"யின் உன்னத நோக்கங்கள்.

முற்றிலும் கதைகளாகவே நிறைந்திடாமல், அறிவுப் பெருக்கடைவதற்கான நீதியும் அநுபவ விநோதமுமான விஷயங்களையே பெரும்பான்மையும் கொண்டு, அத்துடன் சிறு கதைகளும் சேர்க்கப்பட்டிருப்பது நம் "அமிர்தினி."

ஒவ்வொரு விஷயமும் விவேகத்தை விருத்தி செய்யக்கூடியதாய், நுட்பமானவற்றை விளக்கித் தெரிவித்து அறிவை வளர்ப்பதற்கேற்ற விதமாய் அமைந்திருக்குமாறு வரையப்படுகின்றது.

வாசித்த விஷயங்கள் நன்ருக மனதிற் பதியுமாறும், பதிந்து சிந்திக்கத்தக்கனவாயும், சிந்தித்துத் தாமே வியாசம் வரைதற்கான திறமையையுண்டுபண்ணும் விதமாகவும், தெளிவும் சுலபமும் அர்த்தபுஷ்டியும் உடையனவாக இப்பத்திரிகா போதனைகள் உள்ளன.

ஒரு சிறந்த உபாத்தியாயர் தமது மாணவர் மாணவிகளின் வித்தியாபிவிருத்திக்கு எவ்வாறு நானா விஷயங்களையும் ஆராய்ந்து தேடிக் கற்பித்து அவர்களை முன்னேறச் செய்வாரோ, அதைப்போலவே, இப்பத்திரிகையின் ஆசிரியரும் படிப்பவர்களுக்கு இனிப்பான விஷயங்கள் இவையென நன்ருய் ஆய்ந்தெடுத்துக் கூடியவரையில் பாடுபட்டுச் சிறியோர் பெரியோர் ஆகிய அனைவருக்கும் பயன்படுமாறு "அமிர்தினி"யில் வெளியிட்டு வருகின்ருர்.

பொழுதுபோக்குக்காகப் படிக்கும் நூலாக இப்பத்திரிகை இராமல், அறிவுப்பெருக்குக்கும் ஞானபிவிர்த்திக்கும் சாத்கமாய்த் துணையாயிருக்குமாறு இப்பத்திரிகையைத் தயாரிப்பதில் வேண்டிய பிரயாசை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

மனவெழுச்சியும் உற்சாகமும் உல்லாஸமும் உண்டாக்கவல்லதாய்ப் பிரதி தடவைதோறும் "விகடப்பிரதாபன்" மேன்மைகொண்டிலங்குகின்றது. உலக நடவடிக்கைகளையும், ஆழ்ந்த ரகசியங்களையும், அனுபவ ஞானங்களையுமே ஒருசேரத்திரட்டி அவற்றை விகடமும் விநோதமுமாக அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. இவ்விதமாக வரையும் அமைப்பை இப்பத்திரிகையொன்றில் மட்டுமே காணக்கூடியதாயுள்ளது

விவேகாநந்தர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் முதலிய மகான்கள் போதித்தவழியில், எளியதும்—சுலபமும்-உதாரணங்களுடன் உருவமைக்கப்பட்டதுமான முறையில், பக்தி ஞான விஷயங்களைச் சிறுவர் சிறமியரும் வாசித்தறிந்து ஆநந்தம் கொள்ளுமாறு பிரதி தடவைதோறும் இப்பத்திரிகையின் முதலில் "ஆநந்த தரிசனம்" என்ற தலைப்பில் வரையப்பட்டு வருகின்றன.

சரீரத்துக்கு ஆரோக்கியமான மருந்தைத் தேனிலும், நெய்யிலும், பாலிலும்; சர்க்கரையிலும் சேர்த்துப் பெற்ருேர்கள் குழந்தைகளுக்குக் கொடுப்பதுபோல், ஸமயோசிதமான நற்கதைகளுடனும்,அற்புதமான சரித்திரங்களுடனும், திவ்வியமான உதாரணங்களுடனும் உருட்டித்திரட்டி வெகு தெளிவாய் எல்லோருக்கும் பொருள் விளங்குமாறு இப்பத்திரிகையின் நலயங்கம் பிரதிதடவையும் கம்பீரமாய் வரையப்பட்டு வருகின்றது.

ஆதலின், எவ்விதத்திலும் உபயோகமுள்ள இந்த "அமிர்த குண போதினி"ப் பத்திரிகையை எல்லோரும் வாங்கி ஆதரித்து மேன்மேலும் அபிவிர்த்தி செய்து இன்புறுமாறு பிரார்த்திக்கின்ருேம்.

சென்றமாதம்

பாரதகண்டமே ஞானத்துக்கிருப்பிடம்:—

“ஞானம் மற்ற தேசங்களிற் குடியேறுவதற்கு முன்பு அது முதலில் குடியிருந்தது இத்தேசமே” என்று ஸ்வாமி விவேகாநந்தர் தமது சென்னைப் பிரஸங்கத்தில் கூறியுள்ளார். டில்லியில் துருக்கியத் தலைவியான ‘ஹலீட் ஹனும்’ என்பவர் தமது பிரஸங்கத்தில்—“தற்போது மேனாடு எங்கும் வெற்றி பெற்றதுபோல் காணப்படுகிறது. ஆனால், இன்னும் கீழ்நாட்டின் ஆத்மசக்தி மறைவாய் உயிருடனிருந்து வருகிறது. எதிர்காலத்தில் கீழ்நாட்டு நாகரீகமும் கலாஞானமும், மேனாட்டு நாகரீகமும் கலாஞானமும் ஒன்றுபட்டுச் சேர்த்தியான தன்மையுடன் பிரகாசிக்குமென்று தோன்றுகிறது” எனக் குறிப்பிட்டார் அகில உலக ரக்ஷண்ய சைன்யத் தலைவியான ஜெனரல் இவாஞ் ஜலென்பூத் என்பவர் 28-1-35-ல் பம்பாயில் வந்திறங்கிய போது பின் வருமாறு புகன்றார். “மதம், தத்துவம், நாகரீகம் முதலியவற்றில் இந்தியாவின் புராதனமான உயர்வு போற்றற்குரியதாகும். கீழ்நாட்டில் கடவுள் நம்பிக்கை இப்படி உயர்ந்திருக்க, மேனாட்டில் கடவுள் நம்பிக்கை சிறுகச் சிறுகக் குறைந்துகொண்டு வருகின்றது. மத நம்பிக்கையிலும், ஆத்மார்த்தத் துறைகளிலும் இந்தியா பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பெற்ற உயர்வைக் காப்பாற்றி வருகின்றது. தினவாழ்க்கையில் நாம் கடவுளின் சக்தியைக் காண்கிறோம். இந்த உண்மையை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது” என்றார். மேற்கு என்றைக்கும் கடவுள் நம்பிக்கையில் குறைந்து வேறுபட்டதுதான். கிழக்கு எக்காலத்திலும் ஞான சூரியன்தான். எனவே, கிழக்கும் மேற்கும் ஒன்று சேர்வது துர்லபம். மேற்கூறிய துருக்கியத் தலைவியாரின் பின்வரும் வாக்கியமும் கவனிக்கத்தக்கது. “இன்று ஆத்மார்த்திக அபிவிர்த்திக்கான தொடர்ச்சியான முறையைக் காணோம்; லௌகிக விஷயங்களுக்கும் ஆத்மார்த்திக விஷயங்களுக்கும் சம்பந்தமுண்டாகக்கூடிய முறையையும் காணோம்” என்றார். இது இந்தியா இன்றுள்ள நிலை. இதைப்பற்றி வருத்தத்துடன் சிந்திக்க வேண்டியதே தான்.

ஃ

சாக்கில் பெண்ணின் சவம்:—

தென்காசி பலபத்ரராம பட்டணத்தில் ஒரு பெண்ணின் சவம் ஒரு கோணிப்பைக்குள்ளிருந்து கண்டெடுக்கப்பட்டது. சவத்தின் மீது காயங்கள் பலவுமிருந்தன.

ஃ

விதவை யென்ற சொல் தாங்காத கற்பரசி:—

“உனை நான் பிரிந்தால் சாவேன்” என்பதை உண்மையாக ஒரு பெண்மணி காட்டிவிட்டாள். மோரடாபாத்தில் கங்காபிரஸாத் என்பவர் காலமானார். இவர் பாரிஸ்டரும் ஜமீன்தாருமாவர். அவரது மனைவியும் மசானத்துக்கு வந்திருந்து உடன்கட்டையேற முயன்றார். மற்றவர் தடுத்தனர். அருகிலிருந்த ஒருவர் விதந்துவாகத் தலைவிதியிருக்கையில்

தப்புமா என்ருர். இதைக் கேட்ட பெண்மணி, என்னே விதவையாக யார் கூறியது; என் பதியின் உயிரும் என் உயிரும் ஒன்றேதான் என விடையளித்து, மறுநிமிஷம் உயிரற்ற சவமாய்க் கீழே விழுந்தாள். கணவனிடத்து அன்பு பாராட்டும் முறையை இப்பெண்மணியின் மூலமாகவேனும். பர்த்தாவை எதிர்க்கும் பெண்மணிகள் தெரிந்துகொள்ளக் கடவர். "கணவனைத் தொழுவான் பெய்யெனப் பெய்யுமழை."

ஃ

ஓடும் ரயில் கொள்ளை:—

"கற்றதுங் கேட்டதும் போக்கிலே போகவிட்டு" என்றபடி, படித்திருந்தும் தவறு வழியிற் புகுவோரே இக்காலத்தில் அதிகம். அக்கிரமச்செயல் வெளிவராத வரையில் உத்தமரென்ற பெயர்தான். வால்டர் கஞ்ச் ஸ்டேஷனுக்கும் டினிச் ஸ்டேஷனுக்கும் இடையில் ஒரு கொள்ளை நடந்தது. ஸ்ரீமான் மெம்ராஜ் என்பவர் பாங்கியில் பெற்ற 2822-ரூபாயுடன் ரயில் எறினுர். அவரைத் தொடர்ந்து 5-பேரடங்கிய கூட்டமும் அதே ரயிலில் எறி அடித்து ஹிம்ஸித்து ரூபாய்களைக் கைப்பற்றிக்கொண்ட பின் கொள்ளைத் தலைவன் தன் துணைவர்களோடும் குதித்தான். ஆனல் அடிபட்டு இறந்தான், இவன் படித்தறிந்த ஜமீன்தாரான வாலிபராம். மேலான கல்வியைப் பெற்றபோதிலும், பூர்வத்திலமைந்த துர்க்குணமே தலையெடுத்து ஓங்குகின்றதென்பதற்கு இந்த சம்பவம் உதாரணமாகும். கொள்ளைபோன ரூபாய்கள் கிடைக்கவில்லை.

ஃ

மஹா மஹோபாத்யாய டாக்டர் வி. சுவாமிநாதய்யர்:—

"மகோ மகோபாத்யாயர்—இந் நாளிலே பார்க்கில் யாவர்—மனே மனே சாட்சியாக இவர்தாமே" என்று காலஞ்சென்ற ஸ்ரீ முத்துசாமிக் கவிராயர் பாடினுர். ஸ்ரீமான் வி. சுவாமிநாதய்யரவர்களின் 80-ம்வயது பூர்த்திக் கொண்டாட்டத்தை மார்ச்சு மாதம் 6-ம் தேதியன்று தமிழ்நாட்டில் பல இடங்களிலும் நடத்திச் சிறப்பித்தனர். நீண்ட ஆயுள்பாக்கியம் கடவுள் அளிக்கும் அதிர்ஷ்ட சம்பத்துகளில் ஒன்று. மற்றபடி தமது முயற்சியால் அமைவதன்று. ஸ்ரீமான் ஐயரவர்கள் இன்னும் நூருவது ஆண்டையும் கண்டு இனிது வாழ்க.

ஃ

மதுரைப் பிரேத பார்ஸல் வழக்கு:—

"பெண் ஜென்மமோ புண்ஜென்மமோ" என்பர். ஒரு பெண்ணின் வாழ்வும் தாழ்வும் கணவனின் கையில் இருக்கிறது. மனைவியின் அதிகாரமும் செல்வாக்குமெல்லாம் தன் கணவனுக்கு மற்ருெரு விவாகம் ஆகாதிருக்கும் வரையில்தான். மறுமணம் நடந்துவிடின் முதல்தாரமான பெண்ணின் பாடு நாய்ப்பட்ட பாடாகிற தென்பதற்கு மதுரையில் நடந்த காந்திமதி என்ற பிராமணப் பெண்ணின் கொலை வழக்கு ஒரு உதாரணமாகும். இது 1934-ம் வருஷம் பிப்பிரவரி மாதத்தில் நடந்த கொலை. பெண்ணின் சவம் ரகசியமாகக் கள்ளிப்பெட்டியில் அடைக்கப்பட்டு மதுரையிலிருந்தும் ரயில் பார்ஸலாகப் பொய்யான பெயர் விலாஸத்துக்கு அனுப்பப்பட்டது. இந்தப் பார்ஸல் விழுப்புரம் ஸ்டேஷனில் துர்நாற்றம் வீசவே சந்தேகித்துத் திறந்து

பார்க்க ஒரு யுவதியின் சரீரம் தென் பட்டது. முகம் தெளிவில்லாமல், கையில் பச்சை குத்திய குறியும் மூக் குத்தியும் காணப்பட்டன. போலீ ஸார் அதைப் படம் பிடித்துத் துப் பறிய முயன்றனர். இது நிற்க, ஒரு விவாகத்திற்கு வந்த பெண் தன் தமக்கையான காந்திமதி அந்த விவா கத்திற்கு வராததுகண்டு, காந்திமதி யின் புருஷனான நாராயணசாமி ஐயரை விசாரித்தாள். அந்த ஐயர் இரண்டு மாதங்களுக்கு முன்பே தமது மனைவியைத் தாய் வீட்டுக்கு அனுப்பி விட்டதாயும், அதற்குப்பின் தனக்கு ஒரு விவரமும் தெரியா தென்றும் கூற, அதற்கு அந்தப் பெண் இப்போது தானே நான் தாயார் வீட்டிலிருந்தும் வருகிறேன், அக்காளைக் காணவில்லையே யென, ஐயர் கோபத்துடன் எனக்குத் தெரியாதென்று விட்டார். இந்த செய்தி காந்திமதியின் தமயனுக்குத் தெரிந்து அவர் போலீஸுக்குத் தெரிவிக்க முயன்றார். ஆனால், தெரி விக்கத் தாமதமானது. அதற்குள் போலீஸாருக்கு இப்படி ஒரு பெண் காணமற்போனது தெரிந்து, விழுப் புரத்தில் எடுத்த பார்ஸலிற் கண்ட பெண்ணின் படத்தைக் காந்திமதி யின்தாயாரிருக்கும் ஊருக்குச்சென்று காட்டினர். பெற்ற தாய் என் பெண்ணே இவள். காந்திமதியே இவள் என்று கதறினாள். அதன்பின் போலீஸார் காந்திமதியின் கணவ னான நாராயணசாமி ஐயரையும் இன் னும் இருவரையும் கைது செய்தனர். இந்த விசாரணையில் பின் வரும் விவரங்கள் தெரிந்தன. காந்திமதியும் நாராயணசாமி ஐயரும் மதுரையில் வாழ்ந்தபோது ஐயருடைய தமயன் பிள்ளைகளும் குடும்பத்துடன் ஸம் ரக்ஷிக்கப்பட்டனர். இது காந்திமதிக் குப் பிடிக்கவில்லை. இதில் மனஸ் தாபம் கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்பட்டது. இத்துடன் நாராயண சாமி ஐயர் அதே வீட்டிலிருந்த வைதீ கர் ஒருவரது மனைவியிடம் சோர நட்பு கொண்டிருந்தாராம். இதுவும் காந்திமதிக்குக் கசப்பாகி கணவனோடு நொந்து கொண்டாள்போலும். இத னால் நாராயணசாமி ஐயர் காந்தி மதியை வெறுத்துத் தாய் வீட்டிற் கனுப்பிவிட்டு, மற்றொரு விவாகம் செய்துகொண்டு காந்திமதியின் நகை களையும் அபகரித்துக் கொண்டன ராம். பிறகு, காந்திமதி தாய் வீட்டி லிருந்தும் தமயன் தாய் துணையோடு மதுரை வந்து கணவனின் காலில் விழுந்து என் வாழ்வைக் கெடுத் தாயே என்று கதறினாள். பிறகு கணவனோடும் சில நாள் இருந்ததாகத் தெரிகிறது. இந்த சமயத்தில் தான் அவள் கொல்லப்பட்டு கள்ளிப்பெட்டி யில் இட்டுப் பலமாய் ஆணிகள் அடிக் கப்பட்டு ரயில் பார்ஸலாக அனுப்பப் பட்டதாகத் தெரிகிறது. இதற்கு 2-வது புதிய மனைவியின் சகோதர னும் துணையா யிருந்தானாம். இக் கேஸ் மதுரை செஷன் கோர்ட்டில் விசாரணையாகி மார்ச்சுமீ 4-ம் தேதி காந்திமதியின் கணவனான ரயில்வே மெயில் சார்டர் நாராயணசாமி ஐய ருக்கு மரண தண்டனை விதித்தார். ஜட்ஜ் தமது தீர்ப்பில் இக்கொலை மிகக் குரூரமானதென்றும், பிரேதத் தைப் பைசல் செய்த பான்மையி லிருந்து எதிரி கொலையில் சம்பந்தப் பட்டவர் என்று தெரிவதாயும், ஆகை யால் சட்டப்படி விதிக்கக்கூடிய அதி தமான தண்டனை விதிப்பதாகவும் கூறினர். இது ஆச்சரியமும் பரிதாப முமான வழக்காகும். ஒரு பெண்ணின் வாழ்வு இவ்வாறு முடிந்தது!

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(879-வது பக்கத் தொடர்ச்சி.)

(Mrs. Neelakanta Sastri Rajammal.)

குமுதவல்லி:—தம்பி என்னை என்ன செய்யச் சொல்கின்றாய்? வாஸ்தவத்தில் நானொரு நடைப்பிணமாகவே யிருக்கிறேன். முன்னம் இருந்த ஊக்கமே போய்விட்டது. இன்றைக்குத்தான் அவளிடம் கொஞ்சம் விவாக விஷயமாகக் கவலை கொள்வதாகக் காட்டிக்கொண்டேன். என் கவலையைப் பார்த்து அவள் மிகவும் கலங்கிப்போனாள். தம்பி, இது என்ன மாயமோ! அவளைக் கடிந்து சொல்லவாவது அவளிஷ்டத்துக்கு மாறாக நடக்கவாவது என்னால் முடியவில்லை. எவ்வளவோ பெரிய காரியங்களைச் செய்த எனக்கு இது ஒருகஷ்டமாகவேதோன்றுகிறது. இன்னும் நானும் சொல்லிப் பார்க்கிறேன். நீ உன் சாமர்த்தியத்தால் அவள் மனதைக் கவரவேண்டும். நீ முரட்டுத்தனமாக நடவாமல் நல்ல தனத்தால் திருப்புவாயென்று நான் நினைக்கிறேன்.

குலசேகரன்:—ஆம் இவள் எங்கு போகப் போகிறாள். இவளிடம் நீ மயங்கிப்போய் விட்டாய். நயத்திலும் பயத்திலும் அவளை வளைத்துப் போடவேண்டும்.

குமுதவல்லி:—பின்னையேன் நீ அவஸரப் படுகிறாய்? கிணற்று நீரை வெள்ளங்கொண்டு போகாது. உன்னைத்தவிர யாருக்கு அவள் கிட்டப்போகிறாள். நீ கொஞ்சம் நிதானித்தால் என்ன?

குலசேகரன்:—அப்படி யிருக்கவே கூடாது. விவாகம் செய்து கொள் என்ற சொல் வந்தவுடன் அவள் ஏன் ஒரு மாதிரியா யிருக்கவேண்டும்? அவள் மனதில் சந்தோஷங் கொள்ளவில்லையே. அவள் பயந்தது போலல்லவா தெரிகிறது. வேறு எவரையாவது அவள் மனத்தில் கொண்டிருக்கக்கூடும்.

குமுதவல்லி:—சீ! ஒருகாலும் அவள் அந்த எண்ணங் கொண்டிருக்கமாட்டாள். நான் அவளை எவ்வளவோ அடக்கத்தி

லல்லவா வைத்திருக்கிறேன். அவள் நமது வேலையாட்களைத் தவிர வேறு ஆட்களைக் கண்டதே கிடையாது.

குலசேகரன்:—நீ இன்னங்கூட அவளைச் சிறையில் வைத்தது போலக் காக்கவேண்டும். அவளிடம் இனி நீ அதிக தாக்ஷண்யம் வைக்காதே.

குமுதவல்லி:—ஆமாம், இனி அவளிடம் கண்டிப்பாகத்தானிருக்க வேண்டும் என்று சொன்னாள். அச்சமயம் அவர்களிருந்த அறைக்கு வெளியே சீ சீ சீ என்ற உரத்த சத்தங் கேட்டது. இவர்கள் திடுக்கிட்டார்கள். சுற்றிலும் பார்க்க ஒருவரும் இல்லை. நன்றாகக் கேட்ட சத்தம் பின் எங்கிருந்து வந்தது? அவர்கள் உடம்பு கிடுகிடென்று ஆடியது. குமுதவல்லிக்கு உள்ளே அச்சம் அதிகரித்தது. தன் தம்பியின் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அச்சமயம் அவ்விருண்ட தாழ்வாரத்தின் கோடியில் ஓராள் புரண்டுகொண்டு கிடக்க, என்னடா சொக்கலிங்கம் என்று அவளிடம் போய்க் கேட்டனர். அவன் அதற்கொன்றுமே பதில் சொல்லாமல் பூ-பூ-பூ-பூ என்று தலை குனிந்தபடியே ஒரு மூலையில் கையைக் காட்டினான்.

குமுதவல்லி:—அடே பூ-பூ என்றால் என்ன. அங்கே ஏன் கையைக் காண்பிக்கிறாய்.

சோக்கலிங்கம்:—அய்யோ. பூ-பூ என்று உளறினான்.

குமுதவல்லி:—என்னடா சொக்கா, உளறுகிறாய். நீ எதைக் கண்டு பயந்தாய் அங்கென்ன.

சொக்கன் பதில் சொல்லத் தெரியாதவனாய் மிரள மிரள விழித்தான்.

குலசேகரனுக்குக் கோபம் பிறந்தது. என்னடா விழிக்கிறாய். உள்ளதைச் சொல்லேன்.

சோக்கலிங்கம்:—அய்யோ அம்மாடீ அப்பாடா நான் என்ன-அய்யோ-பயமாருக்குது. 'என்று கண்களைப் பொத்திக் கொண்டான்.

குமுதவல்லி:—என்னடா நாங்களிருக்கிறோம் பயப்படாதே நீ ஏன் பயப்பட்டாய்.

உடனே சொக்கன் எழுந்து, அம்மா என்ன சொல்லுவேன் ஒரு பூதம் அய்யோ பயமாவுதுங்க. அந்த பூதம் எம்மாம் பெரி

சிங்க. நீங்க பாத்தா நடுங்கவிங்க. அது வவுறு எம்மாம் பெரிசு-அதும் பாவாடெ எம்மாம் பெரிசு கரேன்னு கிடந்துச்சுங்க ஒரு தலெ எம்மாம் பெயுசுங்க என்னெ உத்துப் பாத்துட்டு ஓடிச்சிங்க அம்மாந்தா நேக்குத் தெரியுங்க நடுங்கிக்கிட்டுக் குப்புரப் படுத்தே னிங்க இனிமே நம்ப இங்கிருக்கக் கூடாதுங்க வாங்க போவலாம் என்ருன்.

குமுதவல்லி:—ஐயோ பூதமா எங்கே போயிற்று என்ருள்.

சோக்கலிங்கம்:—அதோ அங்கெ மூலெயிலெ மாஞ்சுடுத்துங்க என் ருள்.

என்ன ஆச்சரியம்! அவர்கள் திரும்பிப் பார்க்கும்பொழுது ஒரு பெரிய கருத்த உருவம் இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு சாய்ந்து சாய்ந்து ஆடியது அவ்வுருவம் மிகுந்த உயா மும் அதற்கேற்ற பருமனும் அவ்விருளினும் கருமையும் ஜ்வலிக் கும் காற்களும் உடையதா யிருந்தது. அதன் உடை ஒவ்வொரு பாகமும் ஜல்லடம் போன்ற பாவாடையை யொத்திருந்தது அதன் தலையில் ஒரு பெரிய முண்டாசு ஒரு வைக்கோற் சுமையைப் போன்றதாயிருந்தது. அதைக்கண்டு நடுங்கிய அம்மூவரும் வெகு வேகமாக ஓடினர்கள். குமுதவல்லி நடுக்கத்தினுல் தன் மகளறையில் சென்று ஒரு சோபாவில் பொத்தென விழுந்தாள். அப்பொழுது தான் யோசனை செய்து களைத்த ரமா தன் தாயின் அலங்கோலக் கலவரத்தைக்கண்டு நடுங்கி அவளிடம் சென்று அம்மா ஏன் இப் படி இருக்கிருய் எனக்கென்னமோ பயமாயிருக்கிறதே வைத்திய ரைக் கூப்பிடச் சொல்லட்டுமா என்று தன் தாயை அணைத்துக் கொண்டாள். அப்பொழுது அவள் தாயின் தேகம் நடுங்குவதைப் பார்த்து அம்மா ஏன் நீ நடுங்கவேண்டும் என்ருள்.

குமுதவல்லி:—ரமா நீ பயப்படவேண்டாம் ஒன்றுமில்லை வெளியில் உலாவினேன் பனி அதிகமா யிருந்ததால் எனக்குத் தாங்க வில்லை பல்லைக் கிட்டிக்கொண்டு குளிர் நடுக்கினும் சாப்பிட்ட தும் ஸரியாய் விடும் என்று ஸமாதானம் சொன்னுள். இளம் பெண்ணுகிய ரமா வாஸ்தவமாகவே எண்ணிக் கவலையை ஒழித்தாள். அன்றிரவு குமுதவல்லி தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். தன்னையும் மிஞ்சி யவளாகப் படுக்கையை விட்டு அங்கும் இங்குமாக நடக்க

ஆரம்பித்தாள். தான் தனியாகப் பேசவும் ஆரம்பித்தாள். என்னை அடிக்கடிப் பயத்துக் குள்ளாக்க இக்கோட்டையில் என்ன பிசாசிருக்கலாம் இந்தக் கோட்டையின் சிகரத்தில் அநேகந் தடவைகளில் இப்பிசாசைக் கண்டிருக்கிறேன் அது என்னை எவ்விதமாக விழித்துப் பார்க்கிறது. ஆனால் இவ் வளவு அருகாமையில் இதுவரையில் அப்பூதம் வந்ததில்லை இதென்ன அரசணின் ஆவேசமா? எனக்கெல்லாம் பயமா யிருக்கிறது. அவள் சொல்லுவதுபோல் என்னுடன் அவளை நிறுத்திக்கொண்டால்தான் நான் பயமற்றிருக்கலாம் இல்லை யேல் என்னால் முடியாது. அவளுடைய உதவியால் நான் எத் தனை காரியங்களை ஸாதித்திருக்கிறேன் அவளைத் தள்ளிவிட் டால் இக் கோட்டையைக்கூடத் தகர்த்துவிடுவாள் இச்சிறு பெண்ணுக்காக நான் இவ்வளவு காலமாக எவ்வளவோ செய் கைகளை யெல்லாம் செய்தும் இப்பொழுது இவளிடத்தில் நான் தாக்ஷிண்யப்படுவது சுத்தக் கேவலமன்றோ? கூடிய சீக் கிரத்தில் குலசேகரனையே கல்யாணம் செய்துகொள்ளும்படி கண்டிப்பான கட்டளை அவளுக்கு நான் பிறப்பிக்கப் போகி றேன். இந்தப் பெண்ணுக்காக எந்த விஷயத்திலும் நான் கட் டுண்டு கிடந்தது போதும் அவள் சொல்வதுபோல் நான் யாருக்குப் பயப்படவேண்டும் அவளை நான் பகிரங்கமாக ஏற் றுக்கொள்ள வேண்டியதுதான். வேறு வழியில்லையென்று தன் படுக்கையில் உட்கார்ந்தாள். அவளுக் கெதிரிலுள்ள ஜன்ன லின் திரையை விலக்கொண்டு இரு கண்களையும் மிரட்டி யுருட்டிப் பார்த்துக்கொண்டு ஒ முழத்தாடி படுத்துத் தொங்க ஒரு கிழக் கூனல் விழுந்த பக்கிரி எட்டிப்பார்த்து, 'ஆமாம்' என்று சொல்லி மறைந்தது. குமுதவல்லியின் முகம் வெளுத்தது. தைரியத்தைவிடாமல் அச்சன்னலருகில் சென்று எட்டிப் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. அது தன் மனக் குழப்பமே என்று எண்ணியவளாகத் தன் படுக்கையில் படுத்தாள்.

(தொடரும்.)

ஒன்பதாம் வால்யம்
ஸம்பூர்ணம்.

" அமிர்த குணபோதினி "

பவஸ்த்திய பங்குனி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
				[ஸமார்க்கம்.
அ	14	1	வியா	தச-40-28, புந-55-13 மீனரவி 15 5, ஷடசீதி,
உ	15	2	வெ	ஏகா-46-55, பூச-60-0, ஸர்வைகாதசி.
சி-ம	16	3	சனி	துவா-53 40, பூச-2-56, வைரமுடி. [ரதம்.
சி-ம	17	4	ஞா	திர-59-51, ஆயி-10-49, பிரதோஷம், மைலாப்பூர்
ம-சி	18	5	திங்	சசி-60-0, மக-18-31, மைலாப்பூர் அறுபத்துமூவர்.
சி-அ	19	6	செவ்	சசி-6-21. பூர-25-39 கரிநாள், காமதஹனம்.
அ-ம	20	மார்ச் 4—10 7	புத	○ 11-42, உத்-32-4. பங்குனி உத்திரம்.
சி	21	8	வியா	பிர-16-15, ஹஸ்-37-35, மேஷாயனம் 30-48.
சி	22	9	வெ	துவி-19-48, சித்-42-10, அதிதி, வாதிராஜர்.
அ-சி	23	10	சனி	திரி-22-24, ஸ்வா-45-49, பிரம்மகல்பாதி.
உ ம	24	11	ஞா	சது-23-59, விசா-48-27, மதுராந்தகம் கருடன்
சி	25	12	திங்	பஞ்-24-23, அநு-50-0.
உ அ	26	13	செவ்	ஷஷ்-23-41, கேட்-50-24.
ம-அ	27	14	புத	ஸப்-21-43. மூல-49-32.
சி	28	15	வியா	அஷ்-18-26, பூரா-47-25, தின்னனூர் தேர்.
சி-ம	29	16	வெ	நவ-13-54, உரா-44-4.
சி	30	17	சனி	தச-8-7, ஶ்ரூவ-39-35,
ம-சி	31	18	ஞா	ஏகா-1-20, உப 52-18, அவி-34-10 சர்வைகாதசி
சி	1	19	திங்	திர-45-28, சத-28-6, கரிநாள், சிவராத்திரி.
ம அ	2	20	செவ்	சசி-37-5, பூட்-21-33, கிருஷ்ணாங்காரக சதுர்தசி.
சி உ	3	21	புத	● 28-53, உட்-15-15, ஸத்தியஸந்துஷ்டர்.
சி அ	4	22	வியா	பிர-21-22, ரே-9-32, சாந்திரஸம்வத்ஸராதி.
அ-சி	5	23	வெ	துவி-15-4, அசு-4-50, உமா-மாஸகௌரீ-விரதம்.
சி-அ	6	24	சனி	திரி-10-16, பர-1-34, கிருத்திகா விரதம்.
சி	1935 ஏப்ரல் 7	25	ஞா	சது-7-18, கிரு-0-4, வஸந்த பஞ்சமி.
அ	8	26	திங்	பஞ்-6-21, ரோ-0-34.
சி ம	9	27	செவ்	ஷஷ்-7-34, மிரு-3-9, ஸந்தான ஸப்தமி.
சி	10	28	புத	ஸப்-10-46, ஆரு-7-41, அசோகாஷ்டமி.
அ	11	29	வியா	அஷ்-15-38, புந-13-50.
உ-ம	12	30	வெ	நவ-21-36, பூச-21-4, ஸ்ரீராமநவமி.
ம-அ	13	31	சனி	தச-28-8, ஆயி-28-54, மேஷரவி 37-10, தர்மராஜ தசமி, விஷுவத்.
				9. யுவஸ சித்திரைமீ.
ம-சி	14	1	ஞா	ஏகா-34-36, மக-36-36, ஸர்வைகாதசி, டோலோத்ஸவம்.

ரவி	சுக்		
புத சனி	15உ-உதயத்திற்கு ராசி		கேது
ராகு			
	குரு		குஜ

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone, at the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.